6021

# கேற் முதலியார்
# எம்.எஸ். காரியப்பர்



# நினைவு மலர்

கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஞாபகார்த்த
முத்திரை வெளியீட்டு விழாக்குழு

PUBLIC LIBRARY - II (VC)

பொது நூல் நிலையம் -II (VC)


PRADESHIYA SABHA, SAMMANTHURAI

பிரதேசசபை சம்மாந்துறை


Class No.:.......................... Acc. No:..............................

1. இப்புத்தகம் கடைசியாகக் குறிப்பிடபபட்டிருக்கும் திகதியன்று கொடுபடல் வேண்டும். பின் தங்கும் நாளொன்றுக்கு ரூபா 5.00 வீதம் வழங்கப்படும்.
2. இப்புத்தகம் அங்கத்தவருக்கோ அல்லது அங்கத்தவர் அல்லாதோருக்கோ இரவல் கொடுக்கக்கூடாது
3. புத்தகங்களில் கீறிடுதல், எழுதுதல், புத்தகங்களை மடித்து வைத்தல் போன்ற செயல்கள் தகாதவை இதனை மீறும் பட்சத்தில் தண்டப்பணம் அறவிடப்படும்.

| | | |
|---|---|---|
| 365) 2012/09/30 | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

6021
902



# கேற் முதலியார்

நீங்கள் ஒரு அதிசயப் பிறவி
அதுதான் அத்தனை அறிவு உங்களுக்கு
உங்கள் சாணக்கியம் உலக மறிந்தது
எதற்கும் அதுதான் உங்கள் ஆயுதம்


கல்வியில் நீங்கள் ஒரு கலங்கரை
நீங்கள் துலங்கியது அநேகமும் அதிலேதான்
நீங்கள் கற்றறிந்தது தர்க்கமா? தந்திரமா?
எங்கும் எதிலும் அதுதானே உங்கள் போக்கு

நீங்கள் துலங்கியது அரசியல் ஆளுமையில் மட்டுமல்ல
கல்வியில் சேவையில் அனைத்திலுமே அப்படித்தான்
யுத்தமும் சமாதானமும் உங்களுக்கு ஒன்றுதான்
அத்தனைக்கும் தலைமை உங்கள் தலையில்தான்

பாராளுமன்றில் நீங்கள் பலருக்கும் முன்னோடி
நாடாளும் போழ்தில் உங்கள் சேவைகள் கோடி
சமூகத்தின் இருப்பு: தனிக்கட்சி என்றால்
அத்தனைக்கும் நீங்கள்தான் அடிகோலி

மொத்தத்தில் -
நீங்கள் முற்றத்தில் பூத்த முழுநிலா,
அத்தனை மனங்களிலும் மலர்ந்த
விடிவெள்ளி.

கேற் முதலியார்
எம்.எஸ். காரியப்பர் அவர்கள்
தனது வாழ்க்கைத் துணைவி
கதீஜா காரியப்பருடன்



# வரவேற்புப் பா



**திருமதி றிபா ஹுஸைன்**
உதவி அதிபர், மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை

அகம் நிறைவான விழாக்கோலம்
எம் சிந்தையில் ஜொலிக்கிறது
இன்று நாங்கள் பாடும் இனிய நாதம்
வருகவென் றழைக்கிறது (அகம்)

இயற்கையளித்த பசுமை வரமே
எம்.எஸ். காரியப்பர்
அந்தக் கோபுரக் கலசம் சாய்ந்தாலுமவரது
அருள்மொழி வாழ்கிறதே (அகம்)

ஞாபகார்த்த முத்திரை பொறித்து
நானிலம் மகிழ்கின்றது
அந்த நாயகன் விழாவை
உயிரூட்டவந்த உள்ளங்களே வருக (அகம்)

தபால் தொடர்புகள் அமைச்சர்
கௌரவ மஹிந்த விஜேசேகர
மலையக பிதாமகன் செல்லச்சாமி
அந்த அமைச்சின் உயரதிகாரிகள் உம்மை
வருக வருகவென்போம் (அகம்)

மாலைசூடி கீதம்பாடி
மலர்மழை சொரிகின்றோம்
வாழ்க நாடு போற்ற என்று
வாழ்த்தி வரவேற்போம் (அகம்)

முல்லைத்தீவின் முன்னாள் வேந்தன்
மன்சூர் வாழியவே - அந்த
கருணை தீபத்தின் சீரியசேவையை
காலம் சொல்கின்றதே (அகம்)

வர்த்தக வாணிப அமைச்சராய் திகழ்ந்து
வளங்கள் குவித்தவரே
வாழ்க நாடு போற்ற என்று
வாழ்த்தி வரவேற்போம் (அகம்)

சேவைத் தென்றல் முன்னாள் அமைச்சர்
அப்துல் மஜீத் வருக
தனித்துவம் காத்து தடயங்கள் பதித்த
தலைவர்களே வருக (அகம்)

பிரதேச செயலாளர், பிரமுகர் மற்று
நல் உள்ளங்களே வருக
வாழ்க நாடு போற்ற என்று
வாழ்த்தி வரவேற்போம் (அகம்)

## காணிக்கை.........

கேற் முதலியார் முஹம்மது இப்றாலெப்பை மஹ்மூத் சம்சுதீன் காரியப்பர் அவர்களது (எம்.ஐ.எம்.எஸ். காரியப்பர் அவர்கள்) 110 வது பிறந்த தினத்தை முன்னிட்டு நடைபெறும் ஞாபகார்த்த விழாவுக்காக நினைவு முத்திரையை எனது அமைச்சினால் வெளியிடுவதற்கு கிடைத்தமையானது தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சரான எனக்குக் கிடைத்த பாக்கியமாகக் கருதுகின்றேன்.

1899 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி பிறந்த இவர்கள் கொழும்பு உவெஸ்லி வித்தியாலயத்தில் கல்வி கற்று, 1921 இல் அரச சேவையில் இணைந்து கிழக்கு மாகாண பாணமபற்று முதலியார் பதவியிலும், அதன் பின்னர் சம்மாந்துறைப்பற்று, வேகம்பற்று மற்றும் கரைவாகுப்பற்று ஆகிய பிரதேசங்களிலும் அரசின் பிரதம நிருவாகியாகவும் சேவை செய்து ஓய்வு பெற்றார்கள்.

அதன் பின்னர் இவர்கள் முதன் முறையாக அரசியலுக்குள் பிரவேசித்து 1947இல் ஐக்கிய தேசிய கட்சியின் கல்முனைத் தொகுதியின் உறுப்பினராக பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு டி.எஸ். சேனநாயக்க அவர்களது அரசில் உள்நாட்டலுவல்கள் மற்றும் கிராம அபிவிருத்தி பிரதி அமைச்சராகவும், 1956இல் பெடரல் கட்சியில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டு அதற்கு 06 மாதங்களின் பின்னர் பிரதமர் பண்டாரநாயக்க அவர்களது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுடன் இணைந்து அந்த அரசின் பிரதி நீதியமைச்சராகக் கடமையாற்றினார்கள். அதன் பின்னர் 1959 இல் இவர்கள் பிரதமர் தஹநாயக்க அவர்களது அரசில் தபால், கலாச்சார அலுவல்கள் மற்றும் சமூக சேவைகள் அமைச்சராக சேவையாற்றினார்கள். மீண்டும் 1960 மார்ச் தேர்தலிலும், 1965 பாராளுமன்றத் தேர்தலிலும் இவர்கள் கல்முனைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார்கள்.

இந்த கால இடைவெளியினுள் இவர்கள் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களது உத்தம தலைவராக அம்மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக பாராளுமன்றத்திலும், அதற்கு வெளியிலும் முயற்சிகளைச் செய்தார். அம்மாகாண முஸ்லிம் மக்களது விஷேடமாக விவசாயிகளின் நல்வாழ்வுக்காக ஏராளமான அளப்பரிய வேலைத் திட்டங்களைச் செய்துள்ளார்கள்.

முஸ்லிம் மக்களது நல்வாழ்வுக்காக இலங்கை இஸ்லாமிய ஐக்கிய முன்னணியைத் தாபித்து 1960 காலப்பகுதியில் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தவும் அனைத்து இன மக்களையும் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தவும் ஜனநாயகத் தலைவராக சேவை செய்த காரியப்பர் அவர்கள் முன்னாள் வர்த்தக மற்றும் கப்பல்துறை அமைச்சர் ஏ.ஆர் மன்சூர் அவர்கள், முன்னாள் நிதியமைச்சர் எம்.எம். முஸ்தபா அவர்கள் ஆகிய அரசியல் தலைவர்களை உருவாக்குவற்கும் செயற்பட்டுள்ளார்கள்.

தன்னுடைய சேவைக் காலத்தில் கல்முனை ஸாஹிறா கல்லூரி உட்பட ஏராளமான பாடசாலைகளையும், விசேடமாக வாசிகசாலைகளையும் அபிவிருத்தி செய்ய தன்னுடைய காலத்தையும் மற்றும் உழைப்பையும் தியாகம் செய்த இவர்கள் ஆங்கிலம் மற்றும் வரலாறு சம்பந்தமாக தன்னுடைய அறிவையும் திறமையையும் வெளிக்கொணர்ந்தவர்களாகும்.

தன்னுடைய 93 வயது வாழ்க்கைக் காலத்தில் 65 வருடத்தை மக்களுக்குச் சேவை செய்த இவர்கள் கிழக்கு மாகாண மக்களை மிகவும் நேசித்தவர்களாகும். இன்று அவர்களை நினைவுகூரும் இச்சந்தர்ப்பத்தில் இந்த நினைவுகூரும் நிகழ்வை ஒழுங்குபடுத்திய ஏ.ஆர். மன்சூர் அவர்கள் உட்பட அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரியப்பர் அவர்களுக்கு எனது கௌரவமான காணிக்கையைச் செலுத்துகின்றேன்.

**சட்டத்தரணி மஹிந்த விஜேசேகர** (பா.உ),
தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சர்

පී. දයාරත්න පා.ම
பீ. தயாரத்ன பா.உ.
P. Dayaratne M.P

සැලසුම් ක්‍රියාත්මක කිරීමේ අමාත්‍ය
திட்ட அமுலாக்கல் அமைச்சர்
Minister of Plan Implementation



## දිවංගත එම්. එස්. කාරියප්පර් මැතිතුමන්ගේ අනුස්මරණ උත්සවය නිමිත්තෙන් සමරු කලාපය සඳහා වු පණිවුඩය

මා ගල්ඔය සංවර්ධන මණ්ඩලයේ විදුලි ඉංජිනේරුවරයෙකු ලෙස අම්පාර ප්‍රදේශයට පැමිණි මුල් වකවානුව තුළදීම හඳුනගත්, මුස්ලිම් ප්‍රජාව නියෝජනය කළ සුවිශේෂී ජනතා නායකයෙකු ලෙස දිවංගත කාරියප්පර් මැතිතුමන් හැඳින්විය හැක. අම්පාර දිස්ත්‍රික්කයෙන් පත්වු පළමු කැබිනට් අමාත්‍යවරයා ලෙස කාරියප්පර් මැතිඳුන්ගේ නම ඉතිහාස ගතවනු ඇත.

ප්‍රදේශයේ ගම්ප්‍රධානිය ලෙස සේවය කළ කාරියප්පර් මැතිඳුන් කල්මුණ ආසනය නියෝජනය කරමින් 1947 මහා මැතිවරණයට ඉදිරිපත්ව, එම රජයේ ස්වදේශ කටයුතු හා ග්‍රාමීය සංවර්ධන අමාත්‍යවරයා ලෙස කටයුතු කළේය. තෙවන පාර්ලිමේන්තුවේ අධිකරණ අමාත්‍යවරයා ලෙස කටයුතු කළේ කාරියප්පර් මැතිඳුන් ඉන්පසුව තැපැල්, සංස්කෘතික කටයුතු හා සුභ සාධන අමාත්‍යවරයා ලෙසද කටයුතු කළේය.

සැබෑ ජාතික නායකත්වයක් පිළිබිඹු කළ ඔහු ජාති, ආගම්, කුළ වර්ග භේදයෙන් තොරව ජනතාවට සේවය කළේය. ජනතා සිතුම් පැතුම් හා අවශ්‍යතාවයන් කාරියප්පර් මැතිඳුන්, තම යුතුකම් හා වගකීම් මනාව ඉටු



කළ මුස්ලිම් ජනතා ජනතාවගේ සදාදරණීය නායකයෙකි.

ගල්ඔය සංවර්ධන ව්‍යාපාරය ආරම්භ කිරීම සඳහා ගල්ඔය නිර්මාතෘ දිවංගත ඩී.එස්. සේනානායක අග්‍රාමාත්‍යතුමන් හා එක්ව කටයුතු කළ කාරියප්පර් මැතිඳුන් හා සමාන වෙනත් අයෙකු නොවිය. මුඩුබිම් ගල්ඔය දියවර මගින් සශ්‍රීක වනු දැකීම ඔහුගේ අභිප්‍රාය විය.

ඒ සිහිනය සැබෑ වු දින ඔහු මහත් වු උත්තාමයට පත් වූ බව මා සමග පැවසු වග අද දිනද මට සිහිපත් වනු ඇත. එවැනි බහු කාර්යය යෝජනා ක්‍රමයක් ඇති කිරීමෙන් ජනතාවට ලබා දිය හැකි විපුල ඵල ප්‍රයෝජන පිළිබඳව කාරියප්පර් මැතිඳුන් හට පෘථුල දැනුමක් තිබු බව පැහැදිලි කරුණාකි. ඒ බව ඔහු පාර්ලිමේන්තුවේ කළ ප්‍රකාශයන්ගෙන් මනාව පැහැදිලි වනු ඇත.

මුස්ලිම් කාන්තාවන් අධ්‍යාපනය කෙරෙහි නැඹුරු කරවීම උදෙසා කාරියප්පර් මැතිඳුන් මහත් වු මෙහෙයක් ඉටු කළේය. තමාට අයත් ඉඩමක් රජයට පරිත්‍යාග කරමින් එහි කල්මුණ සහිරා විද්‍යාලය හා මහමුඩ් කාන්තා විද්‍යාලය පිහිටුවීමට ඔහු දායක විය.

එවන් වු සුවිසල් ජනතා මෙහෙයක් ඉටු කළ සදාදරණීය ජනතා නායකයෙකුගේ අනුස්මරණ උත්සවය වෙනුවෙන් නිකුත් කෙරෙන සමරු කලාපය සඳහා පණිවුඩයක් ලබා දීමට හැකි වීම ඔහු නියෝජනය කළ දිස්ත්‍රික්කයම නියෝජනය කරන පාර්ලිමේන්තු මන්ත්‍රීවරයෙකු ලෙස මා ලද භාග්‍යයකි.

கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஞாபகார்த்த நினைவு மலர்-2009

# ஆசிச் செய்தி



**அல்ஹாஜ் எம்.ஏ. அப்துல் மஜீத்** B.A.
*முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்*
*புடவைக் கைத்தொழில் அமைச்சரும்*

அரசாங்கம் மர்ஹூம் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்களின் ஞாபகார்த்தமாக முத்திரையொன்றை வெளியிடுகின்றது என்பதனை அறிந்து நான் மிக்கப் பெருமிதமடைகின்றேன்.

அந்நியரின் ஆட்சியிலிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிட்டியதையடுத்து நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கல்முனைத் தொகுதி மக்களின் பிரதிநிதியாகப் பாராளுமன்றம் சென்று பல வருடங்களாக வன்னிமையாகவும், பாரளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருந்து இப்பிரதேசத்துக்கும் நாட்டிற்கும் மிகவும் சிறந்த சேவையாற்றிய கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பரை கௌரவிக்குமுகமாக இவ் அரசாங்கம் முத்திரையொன்றை வெளியிடுவதற்கு முன்வந்தமைக்காக இவ் அரசாங்கத்தைப் பாராட்டுகின்றேன்.

எமது பிரதேசத்திலுள்ள மக்களில் அனேகமானோர் 'மாப்பொட்டி வன்னியனார்' என அழைத்துவந்த கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்கள் 1947ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் குதித்தபோது, சம்மாந்துறையும் அப்போது கல்முனைத் தொகுதியாகவே இருந்தது. அதன்போது எனது சொந்த ஊரான சம்மாந்துறையில் வாக்குகளை திரட்டும் நோக்குடன் நானும் எனது மச்சானாகிய மர்ஹூம் ஏ.எம். மேர்ஸா அவர்களும் இரவு-பகல் பாராது அவரின் வெற்றிக்காக உழைத்தோம். அதில் வெற்றியும் ஈட்டினோம். அவரிடமே பலர் அரசியலையும் கற்றுக் கொண்டனர். இப்படியான ஒருவரை நினைவுகூருவது மிகப் பொருத்தமானதாகும்.

எமது பிரதேசத்தை விவசாயத்துறையில் முன்னேற்றும் நோக்குடன், கல்லோயா நீர்ப்பாசனத் திட்டத்தின் முக்கிய பகுதியாகிய சேனநாயக சமுத்திரத்தை உருவாக்க காரணகர்த்தாவாக இருந்து அரும்பாடுபட்டவர் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் என்பதனை, அன்றைய பிரதமராக இருந்த டி.எஸ். சேனநாயக பல பகிரங்க மேடைகளில் கூறியதை நான் செவியுற்றிருக்கின்றேன்.


அன்று அந்நியர் எமது நாட்டை ஆளும்போது நில பிரதேசங்கள் தொடர்பாக தகவல்கள் திரட்டிவந்த வேளை, வீரமுனை சிந்தாத்துரைப் பிள்ளையார் கோயிலுக்குச் சொந்தமான 110 ஏக்கர் காணி, கல்லாற்றுப் பிள்ளையார் கோயிலுக்குச் சொந்தமான 100 ஏக்கர் காணி என்பவற்றின் தகவல்கள் குறிப்பிட்ட வேளையில் சமர்ப்பிக்கத் தவறிவிட்டனர். இவ்விடயம் தொடர்பாக கோயில் நிருவாகத்தினர் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பரின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியபோது அரசாங்க அதிபருக்குத் தெரியாமல் அக்காணிகளை கோயிலுக்குச் சொந்தமாக்கிக் கொடுத்தார். இதன் காரணமாக அரசாங்க அதிபரின் கோபத்திற்கும் உட்பட்டார் என்பது இன்றும் எனது மனதில் பசுமையான நினைவாகவுள்ளது.

மர்ஹூம் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் மேலான சுவர்க்கத்தை அடைய பிரார்த்திக்கிறேன்.



## கிழக்கு முஸ்லிம் அரசியலின் விடிவெள்ளி

# கேற்முதலியார் எம்.எஸ்.காரியப்பர் JPUM



# எனது பார்வையில் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர்



**சட்டத்தரணி, அல்ஹாஜ் ஏ.ஆர். மன்சூர்**

(முன்னாள் வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர்
குவைத்துக்கான முன்னைநாள் தூதுவர்)

மர்ஹூம் கேற் முதலியார் மஹ்மூத் சம்சுதீன் காரியப்பர் அவர்கள் புகழ் பூத்த காரியப்பர் குடும்பத்தில் பழம் பெரும் முஸ்லிம் கிராமமாகிய சாய்ந்தமருதில் 1901 மே 27ல் பிறந்தார். இவருடைய மூதாதையர்கள் அரபு நாட்டிலே இருந்து இலங்கைக்கு வர்த்தகத்திற்காக வந்தவர்கள் என்று சரித்திரம் கூறுகிறது. இவருடைய மூதாதையர்கள் அப்பொழுது ஆட்சி செய்த கண்டி அரசர்களுக்கு மருத்துவர்களாக இருந்து விசுவாசமாகக் கடமையாற்றியுள்ளர்கள். இவருடைய பரம்பரையினர் ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன் கண்டி இராச்சியத்திலிருந்து கிழக்கு மாகாணத்தை நோக்கி குடியேறினார்கள் என்று வரலாறு கூறுகிறது.

இவருடைய பாட்டனாரின் தந்தையார் நெய்னா மரிக்கார் அவர்களுக்கு 1817ல் கண்டியக் கலகம் நடைபெற்ற காலத்தில் அரசாங்கத்திற்கு விசுவாசமாகப் பணியாற்றியதன் கரணமாக "காரியப்பர்" என்ற பட்டத்தைச் சூட்டி கௌரவித்ததாக வரலாறு கூறுகிறது. இந்த மகுடமானது சிங்கள அரசர்களுடைய சம்பிரதாயத்திலே "அதிகார்" என்ற தரத்திற்கு சமமானதாகும்.

மர்ஹூம் கேற் முதலியார் அவர்கள் தான் வாழ்ந்த காலத்தில் இந்தப் பட்டத்தை கௌரவிக்குமுகமாக பொருத்தமான உடையணிந்து, அந்த உடையில் ஒரு வாளைத் தொங்கவிட்டு பகிரங்கமாக பொது வைபவங்களில் தோன்றி, மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி மன நிறைவு கண்டார்.

1947ல் நடைபெற்ற தேர்தலில் கல்முனைத் தொகுதியில் வெற்றிபெற்று பாராளுமன்றத்துக்குள் முதல் தடவையாக இதே உடையுடன் பிரவேசித்ததாகச் சொல்லப்படுகின்றது.

கொழும்பு உவெஸ்லி கலாசாலையில் லண்டன் மெட்ரிகியுலேசன் படிப்பினை முடித்துக் கொண்டு மேற்படிப்பிற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தபொழுது அன்றைய மட்டக்களப்பு அரசாங்க அதிபராக இருந்த சி.வி. பிரெயன் அவர்களால் பாணமைப்பற்றின் வன்னிமையாக கேற் முதலியார் நியமிக்கப்பட்டார். இப்படியான உத்தியோகங்களையும் பதவிகளையும் குறிப்பாக காரியப்பார் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கியதன் காரணம் அன்றைய காரியப்பர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பொருளாதார வசதி படைத்தவர்களாகவும், ஆங்கிலக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், அரசாங்கத்திற்கு நம்பிக்கையாளர்களாகவும் இயங்கியதேயாகும்.

மர்ஹூம் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்கள் தனது அரசாங்கக் கடமைகளை கடமையுணர்வுடனும் திறமையாகவும் செய்தமையினால் மேலதிகாரிகளினால் புகழப்பட்டு கௌரவிக்கப்பட்டார். பொத்துவில் பாணமை பகுதியிலே வன்னிய முதலியராக இருந்த காலத்தில் ஏழை விவசாய மக்களுக்கு அரசாங்க காணிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களை பகிர்ந்தளித்து பொத்துவில் பிரதேசத்தின் விவசாய, பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்தார்.

அரசாங்க சேவையில் இவருடைய கடமையுணர்ச்சியையும் பெறுபேறுகளையும் அரசாங்க அதிபர்களில் சி.வி. பிரெயன் போன்றவர்கள் மிகவும் பாராட்டியுள்ளார்கள். சம்மாந்துறைப்பற்று வன்னிய முதலியாராக கடமையாற்றிய காலத்தில் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்கள் கல்முனைக்குடியிலே உள்ள பிரசித்தி பெற்ற நிலச் சுவாந்தார் காசிம் பாவா போடியாருடைய பேத்தி கதீஜா என்பவரை விவாவகம் செய்தார்.

அதன் பின்னர் கரைவாகு நிந்தவூர் பற்றுக்கு வன்னிமை முதலியாராக 1932ம் ஆண்டு இடமாற்றம் பெற்று 1946ல் அவர் ஓய்வுபெறும் வரை கடமையாற்றினார். இக்காலத்திலேதான் இரண்டாவது உலகமகா யுத்தம் நடந்தது. இந்தியாவிலே பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக சுதந்திரம் வேண்டி சகல இன மக்களும் போராட்டத்தில் இறங்கினார்கள் இந்தியாவை முன் உதாரணமாக கொண்டு இலங்கைத் திருநாட்டிலும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சுயாட்சி வேண்டி வேண்டுகோள்களை பிரித்தானிய ஆட்சியாளர்களுக்குச் சமர்ப்பித்தார்கள். இலங்கையிலே இந்திய விடுதலை தலைவர்களின் சிந்தனைகளை அடிப்படையாக வைத்து தேசிய காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் நடக்கின்ற அன்றாட நிகழ்வுகளை அவதானித்து, திட்டமிட்டு செயலாற்றகூடிய மக்களின் தலைவராக கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவ்வேளை காணப்பட்டார்.

இரண்டாவது உலகயுத்தத்தின்போது அம்பாறை மாவட்டதிலே உள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் பீதியிலே வாழ்ந்தார்கள். ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்துக்கு உணவு கொண்டுபோகக் கூடாது எனும் தடைச்சட்டம் அமுலில் இருந்த காலகட்டத்தில் கல்முனையிலே அவசரகால கச்சேரி ஒன்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந்தக் கச்சேரிக்கு முதலாவது முஸ்லிம் சிவில்சேவை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்ட ஏ.எம்.ஏ. அசீஸ் அவர்களுடன் கேற் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் இணைந்து. இங்கு வாழும் முஸ்லிம்களுக்கு பல ஏக்கர் காணிகளை பகிர்ந்தளிப்பதற்குக் காரணகர்த்தாவாக விளங்கினார்.

அசிஸ்துரை கண்டம், பளவெளிக் கண்டம், நெய்னாகாடு போன்ற குடியேற்றத் திட்டங்கள் எல்லாம் முதலியார் காரியப்பர் காலத்திலேதான் சிறப்பாக நிறைவேற்றப்பட்டன. இவருடைய அறிவு, செயல்திறன் கொழும்பிலே உள்ள சிங்களத், தமிழ் தலைமைகளைக் கவர்ந்தது. குறிப்பாக, அப்பொழுது அரசாங்க சபை (State Council) தலைவராக இருந்த தேசபிதா டீ.எஸ் சேனநாயக, சிங்கள மகாசபை தலைவர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க யுத்தகாலத்தில் உள்நாட்டு, பாதுகாப்பு, நிருவாக ஆணையாளராகக் கடமையாற்றிய Civil Defence Commissioner சேர் ஒலிவர் குணதிலக்க போன்றோர் முதலியார் காரியப்பருடன் அக்காலத்தில் நேரடி தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.

இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில் 1943ல் முதலியார் காரியப்பரின் முழுமுயற்சியினால் சிறப்பான உணவு உற்பத்தி கண்காட்சியொன்று கல்முனையிலே சிறப்பாக நடந்தேறியது. கல்முனை நகர்வாழ் மக்கள் வரலாறு காணாத ஒரு நிகழ்ச்சியாக இந்த கண்காட்சியை கண்டு களித்தனர். இந்த கண்காட்சிக்கு தலைமைதாங்கவந்த டீ.எஸ். சேனநாயக்க அவர்கள் காரியப்பரின் திறமையைக் கண்டு, எதிர்காலத்திலே பொறுப்புவாய்ந்த அமைச்சர் பதவிகளை அன்னாருக்குக் கொடுப்பதற்கு இந்த வைபவம் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும் என நான் கருதினேன். அக்காலத்திலேதான் முதலியார் காரியப்பர் அவர்கள் கல்லோயா அணைக்கட்டு கட்டுவதற்கான முக்கியத்துவத்தை விவசாய அமைச்சர் டீ.எஸ். சேனநாயக்க அவர்களுக்கு எடுத்துரைத்ததாகத் தெரிகிறது. இவருடைய சிந்தனையையும், செயலாற்றலையும், அறிவையும் அறிந்துகொண்ட டீ.எஸ். சேனநாயக அவர்கள், முதலியார் காரியப்பர்



அவர்களுடன் இணைந்து கல்லோயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தினை விரைவுபடுத்தினார்.

1951ம் ஆண்டு பிரதமர் டீ.எஸ். சேனநாயக்க அவர்கள் கல்லோயா அணைக்கட்டு திட்டத்தை பார்வையிடுவதற்கு வந்தபோழுது அவர் அங்கு ஆற்றிய உரையில் "மிகமுக்கியத்துவம் வாய்ந்த இந்த அபிவிருத்தி திட்டத்திற்கு ஆரம்பத்தில் இருந்தே அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர்" எனக் குறிப்பிட்டார். "இந்த அபிவிருத்தி திட்டம் நிறைவேறினால் மகிழ்ச்சி அடைபவர்களில் முக்கியமானவர் முதலியார் காரியப்பர் என்றும், இத்திட்டம் சிறப்பாக முடிவடைய வேண்டும் என்பதுவே காரியப்பருடையதும் எனதும் நெடுநாளைய கனவு" என்றும் கூறிப்பிட்டார்.

அப்போதைய பாதுகாப்பு பிரிவில் உள்நாட்டு பாதுகாப்பு நிருவாக ஆணையாளராகக் கடமையாற்றிய சேர் ஒலிவர் குணதிலக்க, ஜப்பானிய விமானக் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற திருகோணமலை பிரதேசத்தில் நிருவாகத்தை சீரமைப்பதற்காக, விசேடமாக காரியப்பரை தெரிவு செய்து அனுப்பிவைத்தார். இதிலிருந்து அப்போதைய அரசாங்கம் இவர்மீது வைத்திருந்த நம்பிக்கையை உணரக்கூடியதாக இருக்கின்றது. கரைவாகு நிந்தவூர் வன்னிமை முதலியாராகக் கடமையாற்றிய காலத்தில் முதலியார் காரியப்பர் அவர்கள் விவசாயம், நீர்ப்பாசனம், கைத்தொழில், கூட்டுறவு போன்ற துறைகளில் அதிகமாக ஈடுபட்டு மக்களின் அபிமானத்தை பெற்றிருந்தார். இவருடைய அர்ப்பணிப்புடன் கூடிய பொதுநல சேவை, தூரநோக்கு, அறிவாற்றல் போன்றவற்றைக் கௌரவிக்குமுகமாக 1944ல் "கேற் முதலியார்" (இராசவாச) என்ற பட்டத்தை இலங்கை அரசின் தலைவராக இருந்த கவர்னர் வழங்கினார். முதலியார் காரியப்பர் அவர்கள்தான் இப்பெறுமதிமிக்க அரசாங்க கௌரவத்தை பெற்ற முதலாவது முஸ்லிமாவார் என்பது பெருமைப்படுவதற்குறிய விடயமாகும். இப்படியான உயர்பதவி பெற்ற தமிழ் பெருமகன் சேர். பொன் அருணாசலத்துடைய தந்தை கேற் முதலியார் ஏ. பொன்னம்பலம் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனைப் பிரதேச மக்களுடைய பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய தொண்டு மகத்தானது. கல்முனைப் பட்டினம் என்று ஒன்று எமது கண்முன் சிறப்பாக மிளிர்வதற்கு அவரே காரணகர்த்தாவாக இருந்தார். இதன் காரணமாகவோ என்னவோ மறைந்த மாபெரும் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் Q.C அவர்கள் ஒருமுறை "கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்கள் ஒரு முஸ்லிமாகப் பிறந்து விட்டார். இதனால் கல்முனையில் அவருக்கு ஒரு சிலை வைக்க முடியாமல் போய்விட்டது" என்று இவருடைய சேவையை மெச்சிப் பேசி இருக்கின்றார்.

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றதும் திரு டீ.எஸ். சேனநாயக, திரு எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக, சேர் ஒலிவர் குணதிலக ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க 1947லில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் பிரவேசித்த இவர், கல்முனை தொகுதியில் ஐ.தே.கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தேசபிதா டீ.எஸ். சேனநாயக அவர்களினால் உள்துறை உதவி அமைச்சராக நியமிக்கப்பட்டார். சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் மேல்சபையில் அங்கம் வகித்ததனால் அவருக்குப் பதிலாக பாராளுமன்றத்தில் அமைச்சராக இருந்து கடமைகளை கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் சிறப்பாகச் செய்து வந்தார்.

இலங்கை ஒரு சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்படுவதற்கு சிங்கள, தமிழ் தலைவர்களுடன் ஒத்துழைத்தார். கல்லோயா அபிவிருத்தித் திட்டம் மூலம் முழு நாடும் பொருளாதாரத்தில் மேலோங்க வித்திட்டார். கல்லோயா அபிவிருத்தி திட்டத்தில்

கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஞாபகார்த்த நினைவு மலர்-2009

முஸ்லிம்கள் கணிசமான அளவு குடியேற வேண்டும் என்பதில் காரியப்பர் அவர்கள் மிகவும் கரிசனையுடன் செயற்பட்டார்.

அம்பாரைப் பிரதேசத்தில் பள்ளிவாசல் ஒன்றை அமைப்பதற்கும் காரணகர்த்ததாவாக இருந்தார். ஆனால் குடியேற்ற நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்ற 1952ம் ஆண்டு காலப்பகுதியில் துரதிஸ்டவசமாக அவர் தேர்தலில் பாராளுமன்றம் செல்லமுடியாது போய்விட்டது.. 52ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் முதலியார் காரியப்பர் வெற்றி பெற்றிருந்தால், முஸ்லிம்களுடைய குடியேற்றம் முன்னேற்றகரமானதாக அமைந்திருக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

1952ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்த போதும், முதலியார் காரியப்பர் அவர்கள் அவர்களுடைய அரசியல் சிந்தனையில் ஒரு பின்னடைவாகக் கருதவில்லை. அரசியலில் தோல்வி கண்டும் ஏனைய அரசியல்வாதிகளைப் போன்று அவர் சளைக்கவில்லை. தோல்வி எதிர்கால வெற்றிக்கு முதல்படி என்ற சிந்தனையுடன் செயற்பட்டார். கல்முனைப் பிரதேசத்தில் உள்ள பல முஸ்லிம் கிராமங்களில் முஸ்லிம் பாடசாலை அமைப்பதற்கு காரணகர்த்தாவாக இருந்து அக்கால முஸ்லிம் சமூகத்திற்கு வழிகாட்டியாகத் தொண்டாற்றினார். அவர் காலத்தில் இருந்த கல்வியமைச்சருடன் இணைந்து செயல்பட்டு அளுத்கம, அட்டாளைச்சேனை போன்ற ஆசிரியர் காலாசாலைகளை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருந்தார். குறிப்பாக கல்முனை சாகிறாக் கல்லூரி என்ற கல்விப்பீடம் உருவாகுவதற்கு தன்னுடைய சொந்தக் காணி 5 ½ ஏக்கரை இனாமாக வழங்கினார். மறைந்த மர்ஹூம் டி.பி ஜயா அவர்கள் 49ம் ஆண்டு தூதுவராக பாக்கிஸ்தான் செல்வதற்கு முன்பு கல்முனை பிரதேசத்திற்கு விஜயம் செய்தபோது சாய்ந்தமருதில் ஆங்கில Junior Schoolஐ ஆரம்பித்தார்.

கிழக்கு மாகாண முஸ்லிம்களுடைய கல்வி அபிவிருத்தியில் தனது வாழ்நாள் முழுவதிலும் அக்கறை காட்டினார். 1952/56ம் ஆண்டில் பாராளுமன்ற அங்கத்தவராக இல்லாவிடினும் முதலியார் காரியப்பரின் அறப்பணி தொடர்ந்து கொண்டே இருந்தது. 1954ம் ஆண்டு எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைவராக கல்முனைப் பிரதேசத்திற்கு விஜயம் செய்து, முதலியார் காரியப்பர் அவர்கள் எதிர்வரும் தேர்தலில் தனது கட்சியில் சேர்ந்து போட்டியிடுமாறு கல்முனைக்குடி மார்க்கட் கூட்டத்தில் பகிரங்க அழைப்பு விடுத்தார். அன்று நடந்த கூட்டத்தில் "நான் பிரதம மந்திரியாக வந்தால் 24 மணித்தியாலத்தில் சிங்களத்தை அரச கரும மொழியாக அமுல்படுத்துவேன்" என முழங்கினார்.

எனினும், காரியப்பர் அவர்கள் அந்த வேண்டுகோள்களுக்கு செவி சாய்க்கவில்லை. 1956ம் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிடுமாறு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்றோர் வேண்டினர். அதனை ஏற்று அக்கட்சியில் சேர்ந்து தேர்தலில் வெற்றி பெற்றார். எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்கள் அமோக வெற்றி பெற்று பிரதமராகி அரசாங்கத்தை அமைத்தார்.

இந்த அரசாங்கம் அமைத்ததன் பின்னர் தமிழ், சிங்கள உறவு பிளவடைய ஆரம்பித்து சிங்கள மொழி சட்டத்தை தமிழ் மக்கள் பரவலாக எதிர்த்தனர் தமிழ் தலைவர்கள் சத்தியாக்கிரகம் என்ற அடிப்படையில் சிங்கள மொழி சட்டத்தை தமிழ் பிரதேசங்களில் எதிர்த்தார்கள். ஆரசாங்க நிர்வாகம் செயலிழந்து போகும்படி செய்தனர். இதனைக் கண்ணுற்ற ஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக அவர்கள் "பண்டாரநாயக செல்வநாயகம் ஒப்பந்தத்தின்" மூலமாக தமிழ் பேசும் மக்களுக்கு நியாயம் வழங்க முன்வந்தார்.



ஆனால் சிங்கள மோகம் படைத்த அரசியல் தலைவர்களும் பிக்குகளும் தம் எதிர்ப்பைக் காட்டி அவ்வொப்பந்தத்தை நடைமுறைப்படுத்த விடாது கிழித்தெறிய வைத்தனர்.

அக்காலகட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற அம்பாறை போன்ற பிரதேசங்களிலேயே இனக்கலவரங்களும் உயிரிழப்புக்களும் ஏற்பட்டன. அதே போன்று கொழும்பு போன்ற தலைநகரங்களிலும் பல தலைவர்கள் அநியாயமாக கொல்லப்பட்டனர். இவற்றையெல்லாம் அவதானித்த கல்முனைப் பிரதேச மக்கள் அவர்களது பிரதிநிதியான முதலியார் காரியப்பரை அரசுடன் இணைந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டினர். மக்களின் ஆணையை ஏற்று பண்டாரநாயக்கவின் அரசாங்கத்தில் சேர்ந்தார்.

கேற் முதலியாருடைய ஆற்றலை நன்குணர்ந்து இருந்த பிரதமர் பண்டாரநாயக கேற் முதலியார் அவர்களை மக்கள் சபையிலே உதவி நீதியமைச்சராக நியமித்தார். இக்கடமைகளை சிறப்பாக செய்ததுடன் நாட்டில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் ஸ்திர நிலை நிலவுவதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கினார்.

பண்டாரநாயக அவர்களுடைய காலத்தில் கேற் முதலியார் அவர்கள், அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டுக்காக பல முஸ்லிம் பாடசாலைகளை நிறுவினார். நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஆசிரியர்களாக நியமனம் பெறுவதற்கு வசதியாக தகைமைகளை இலகுவாக்கி பெரும் தொண்டாற்றினார். இத்தகைய ஆசிரிய நியமனங்கள் முஸ்லிம்களுடைய கல்வி வளர்ச்சிக்கு ஒரு உந்து சக்தியாக அமைந்தது என்று கல்விமான்கள் கூறுவர்.

1959ம் ஆண்டு துரதிஸ்டவசமாக பிரதமர் பண்டாரநாயக அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார் நாட்டினுடைய அரசாங்கம் ஸ்திரமற்ற நிலையை அடைந்தது. இக்காலகட்டத்தில் நாட்டின் நன்மை கருதி விவேகமாக அரசியல் தலைவர்களுடன் பேசி டாக்டர் டபிள்யு. தகநாயக்கா அவர்கள் பிரதமராவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கினார்.

டபிள்யு. தகநாயக்கா எம்.எஸ். காரியப்பரின் ஆற்றலையும், அறிவையும் அறிந்து தனது மந்திரி சபையில் தபால் தொடர்பு அமைச்சராக நியமித்தார். இக்காலகட்டத்தில் மந்திரிப் பதவியை பிரயோசனப்படுத்தி பிரதேச மக்களுக்கு பாகுபாடின்றி விவசாயம், தொழில்துறை போன்றவற்றில் அபிவிருத்தி செய்வதற்கு உதவிகள் புரிந்தார். பிரதமர் தகநாயக்காவுடன் மிகவும் நெருங்கிய நண்பராக இருந்தார். இந்த நெருங்கிய நட்பின் காரணமாக பிரதமருடைய L.P.P. கட்சியில் சேர்ந்து 1960ம் ஆண்டு நிகழ்ந்த பொதுத்தேர்தல்களில் L.P.P சார்பாக போட்டியிட்டு வெற்றி வாகை சூடினார். அன்று நடந்த பொதுதேர்தலில் டபிள்யு. தசநாயக்காவினுடைய L.P.P கட்சியில் வெற்றிபெற்ற ஒரே ஒரு அபேட்சகர் எம்.எஸ். காரியப்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

1960ம் ஆண்டு கல்முனையில் நடந்த பொதுத் தேர்தலில் தோல்விகண்ட காரியப்பர் அவர்களால் 1965ம் ஆண்டில் பொதுத்தேர்தலில் மீண்டும் ஐ.தே.க, தமிழரசுக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி போன்ற கட்சிகளைத் தோற்கடித்து தனிப்பட்ட செல்வாக்கின் காரணமாக பாராளுமன்றம் சென்றார். இக்காலகட்டத்திலே தான் தளுகொடபிட்டியவின் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தீர்ப்புவெளிவந்தது. அரசியலை அடிப்படையாக கொண்ட இந்தத் தீர்ப்பிற்கு ஒரு பாடம் கற்பிப்பது போன்று 1965ம் ஆண்டு வெற்றி அமைந்தது "மக்களின் தீர்ப்பு மகேசனின் தீர்ப்பு" என்பார்கள். தமிழினத்தைச் சேர்ந்த ஒரு சிலர் எப்படியும் காரியப்பரை பொது வாழ்வில் இருந்து ஒதுக்கவேண்டும் என்று எப்பொழுதும் கங்கணம் கட்டியவண்ணம் இருந்தனர்.


1965ம் ஆண்டு அமைந்த அரசாங்கம் தமிழரசுக்கட்சியும் இணைந்து செயற்பட்ட தேசிய அரசாங்கமாக இருந்தது. ஐ.தே.க அதனுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில், "தளுகொடபிட்டிய ஆணைக்குழு அறிக்கையை அமுல் நடத்துவோம்" என்று கூறியிருந்தது. இதனை மையமாக வைத்து தமிழரசுக்கட்சி தலைவர்கள் திரு டட்லிசேனநாயக அரசாங்கத்தில் தளுகொடபிட்டிய ஆணைக்குழு அறிக்கையை அமுல்படுத்தும்படி பிரதமரை நிர்ப்பந்தித்தார்கள். அக்காலகட்டத்தில் ஜே.ஆர். ஜெயவர்தன போன்ற அரசியல் தலைவர்கள் இந்த ஆணைக்குழு அறிக்கையினை நடைமுறைப்படுத்தினால் மக்களின் வாக்குகள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட காரியப்பர் போன்றோருக்கு அநியாயம் இழைக்கப்படும் என வாதிட்டனர். எனினும், அரசாங்கத்தை தக்கவைத்துக் கொள்வதற்கு தமிழரசுக்கட்சியின் ஆதரவு டட்லிக்கு இன்றியமையாததாக இருந்தது. தமிழரசுக்கட்சியின் நிர்ப்பந்தத்தினால் அந்த ஆணைக்குழு அறிக்கை பாராளுமன்றில் மசோதா சமர்ப்பிக்கபட்டு நிறைவேற்றப்பட்டது. மனித உரிமைகள் இயக்க வல்லுனர்கள், சட்டவல்லுனர்கள் இந்த மசோதா சட்டவரையறைக்கு (Rule of Law) முரண்பாடானது என்று அபிப்பிராயம் தெரிவித்தனர். இந்த மசோதாவின்போது முதலியார் காரியப்பர் அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை மனித உரிமைகள் வரலாற்றிலே ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது.

அப்போது முதலியார் காரியப்பர் அவர்கள் "தான் ஒரு நிரபராதி. தளுகொடபிட்டிய ஆணைக்குழு பக்கச்சார்பாக செயற்பட்டது. எனக்கு மாறான குற்றங்கள் இருந்தால் வழக்கமாக செயல்முறையில் இருக்கின்ற நீதிமன்றங்களின் (Curl of Law) முன் என்னை நிறுத்தி தீர்ப்பளியுங்கள். ஆணைக்குழுவின் பக்கசார்பான அறிக்கையை ஏற்று எனது உரிமைகளையும் என்னை தெரிவுசெய்த மக்களின் உரிமைகளையும் மறுத்தலாகாது .....". என வாதாடி அன்று இவர் ஆற்றிய சட்டமன்ற உரை முக்கியத்துவம் வாய்ந்ததாக திகழ்கின்றது.

முதலியார் காரியப்பர் அவர்கள் "கர்ம வீரர்". சட்டமன்ற தீர்ப்பை எதிர்த்து சட்டவல்லுனர்களின் ஆலோசனையைப் பெற்று Privy Council வரை மக்களின் உரிமைகளுக்காக நியாயம் வேண்டினார். Privy Council சட்டமன்ற தீர்ப்புக்கு மாறாக பேசவிரும்பவில்லை. மக்களுக்கான நீதி மறுக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்து மக்கள் உட்பட நாடு முழுவதும் மக்கள் இந்தத் தீர்ப்பு மனித உரிமைகளுக்கு மாறான தீர்ப்பு என கொதிப்படைந்தனர். மக்கள் உரிமைகளுக்காக வாதாடி வெற்றிபெறாவிட்டாலும் முதலியார் காரியப்பருடைய அரசியல் ஞானம், சாமர்த்தியம், சிந்தனை ஒருபோதும் குன்றவில்லை. முதலியார் காரியப்பர் அவர்கள் மக்களுக்காகவே வாழ்ந்தார். மக்களுக்காகவே மரணித்தார் என சரித்திரம் கூறும்.

இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜ"ஊன்.





கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பருடன்

1. மக்பூல் ஆலிம், 2. எஸ். தர்மரெட்ணம் (சட்டசபை உறுப்பினர்),

3. அல்ஹாஜ் எம்.எம். இப்றாஹீம் (பொத்துவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்) உட்பட முக்கியஸ்தர்கள்

# கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் கிழக்கு முஸ்லிம் அரசியலின் விடிவெள்ளி



- பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் -

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் குறிப்பாக அம்பாரை மாவட்ட முஸ்லிம்களின் சமூக, அரசியல் வரலாற்றில் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பரின் இடம் பற்றி எழுத வேண்டும் என்ற ஆர்வம் பல ஆண்டுகளாக என்னுள் இருந்து வந்துள்ளது. அம்பாரை மாவட்ட முஸ்லிம்களின் இன்றைய சமூக, அரசியல் விழிப்புணர்ச்சிக்கு வித்தூன்றியவர்களுள் அவர் முதன்மையானவர் என்பதும், இன்றைய இளைய தலைமுறையினர் அவரைப்பற்றி அதிகம் அறிந்திருக்கவில்லை என்பதும் அதற்கான முக்கிய காரணங்கள்.

எனது தந்தையார் காலம்சென்ற பி.எம். மக்பூல் ஆலிம் அவர்கள் நீண்டகாலமாக எம்.எஸ். காரியப்பரின் நெருங்கிய சகாவாக இருந்து வந்தவர். அவருடைய சமூக, அரசியல் செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஒத்துழைத்து வந்தவர். அது மட்டுமன்றி காரியப்பரின் சமூக, அரசியல் செயற்பாடுகள் பற்றியும், முஸ்லிம்கள் முன்னேற வேண்டுமெனில் அவருடைய செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுவது அவசியம் என்பதை வலியுறுத்தியும் 1937ம் ஆண்டிலேயே "முஸ்லிம்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்" என்ற தலைப்பில் ஒரு சிறு நூல் வெளியிட்டிருக்கிறார். சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர், காரியப்பர் அரசியலில் நுழைய முன்னர் எழுதப்பட்ட அந்தப் பிரசுரத்தை இன்று வாசித்துப் பார்க்கும்போது நமது சமூக வரலாற்றில் காரியப்பரின் முக்கியத்துவம் நன்கு புலப்படுகின்றது. அரசாங்கம் அவர் நினைவாக முத்திரை வெளியிட்டு அவரைக் கௌரவிக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் பற்றிய விடயங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவது நமது வரலாற்று வேர்களில் ஒன்றைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு உதவும் என்று நினைக்கின்றேன்.

இராசவாசல் முதலியார் என்றும், கேற் முதலியார் என்றும் அடைமொழிகளுடன் அழைக்கப்பட்ட எம்.எஸ். காரியப்பர் கிராமத்து மக்களால், குறிப்பாகப் பெண்களால் "மாப்பொட்டி வன்னியனார்" என்று செல்லமாக அழைக்கப்பட்டார். அரபு வம்சாவழியில் வந்த ஒரு செல்வந்த குடும்பத்தில் பிறந்த, ஆங்கிலக் கல்விபெறும் வாய்ப்புப் பெற்ற இவர் 1930களில் ஆங்கில ஆட்சியாளர்களால் கல்முனைப் பிரதேச வன்னிமையாக நியமிக்கப்பட்டதில் இருந்து 1960களின் பிற்பகுதியில் அரசியலிலும் பொதுவாழ்விலும் இருந்து ஓய்வுபெறும் வரை சுமார் முப்பது ஆண்டுகளுக்குமேலாக பிரதேச அரசியலிலும் தேசிய அரசியலிலும் செல்வாக்குமிக்கவராக விளங்கியவர். ஸேர் ராஸிக் பரீத், ரீ.பி. ஜாயா, எம்.ஸீ.எம். கலீல் போன்ற அவர் காலத்து மூத்த முஸ்லிம் தலைவர்களோடும், டீ.எஸ். சேனநாயக, டட்லி சேனநாயக, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக, டபிள்யூ. தஹநாயக போன்ற சிங்கள அரசியல் தலைவர்களோடும் நல்லுறவும், நெருங்கிய

நட்பும் கொண்டிருந்தார். அவர்களுடன் இருந்த உறவையும் தன் அரசியல் அதிகாரத்தையும் பயன்படுத்தி இப்பிரதேசத்தில் கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்ற துறைகளில் முஸ்லிம்களின் முன்னேற்றத்துக்கு வழிவகுத்தார்.

1931ல் அமுலுக்கு வந்த டொனமூர் அரசியல் யாப்பு வழங்கிய சர்வசன வாக்குரிமையின் பின்னர்தான் முஸ்லிம்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. ஏனைய சமூகத்தவர்கள் போல முஸ்லிம்களும் கல்வி, பொருளாதாரத்துறைகளில் முன்னேற வேண்டும்; அரச உத்தியோகங்களில் ஈடுபட வேண்டும்; தேசிய அரசியலில் பங்குபெற வேண்டும் என்ற கருத்துக்கள் உருவாகின. இக்கால கட்டத்தில்தான் ஆங்கிலம் கற்ற வாலிபரான காரியப்பர் கல்முனைப் பிரதேசத்துக்கு வன்னிமையாக நியமிக்கப்பட்டார். சமூக அக்கறையுடன் செயற்பட்டார். அவருடைய ஆலோசனையுடன்தான் 1936ம் ஆண்டு கல்முனை டிஸ்றிக்ற் முஸ்லிம் சங்கம் (Kalmunai District Muslim Association) ஆரம்பிக்கப்பட்டது. இப்பிரதேசத்தில் பரந்துபட்ட சமூக அக்கறையுடன் நிறுவப்பட்ட முதலாவது பொது நிறுவனம் என்று இதனைக் கருதலாம். இதன் தலைவராக பி.எம். மக்பூல் ஆலிம் செயற்பட்டார். 1937 ஏப்ரல் மாதம் அவர் வெளியிட்ட பிரசுரத்தில் எம்.எஸ். காரியப்பரின் சமூகநலத் திட்டங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார். கல்முனைப் பிரதேச முஸ்லிம்கள் தங்களுக்குள் ஒற்றுமை குன்றி கல்வி, பொருளாதார துறைகளில் மிகவும் பின்தங்கியிருக்கும் நிலை பற்றிக் குறிப்பிடும் அவர், இத்துறைகளில் முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்காக காரியப்பர் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி விரிவாகப் பேசுகின்றார். அவற்றுள் சில அம்சங்களை அவருடைய வார்த்தைகளினாலேயே இங்கு தருகின்றேன்.

1. எங்கள் வன்னிமையும் மட்டக்களப்புப் பகுதிக்குச் சமாதான நீதிபதியுமாகிய திரு எம்.எஸ். காரியபபர் அவர்கள் சென்ற ஆவணி மாதம் 31ம் திகதி திருகோணமலைக்குப் போனபோது றோட்டில் ஏறக்குறைய ஒரு மைல் நீளத்துக்கு தனது மோட்டார் கார் மட்டக்களப்பு முஸ்லிம் கூலி ஆட்களையே விலக்கிக்கொண்டு ஓடியதைக் கண்ணுற்று விசனப்பட்டவராய் சில மாதங்களாய் இந்தச் சனங்களுக்கு உபகாரம் புரியக் கூடிய உபாயமென்னவெற்று ஆலோசனை பண்ணினார்கள். அப்பால் குளங்களைக் கட்டுவித்து வெள்ளாண்மைப் பூமிகளை அதிகப்படுத்துவதே ஏக உத்தம உபாய வழியென தனது மனதில் உத்தேசித்து சென்ற கார்த்திகை மாதம் 28ம் தகிதி கல்லோய றிசவோயர் ஸ்கீம் என்னும் குளத்தை கட்ட வேண்டும் என ஓர் தீர்மானத்தை மட்டக்களப்பு டிஸ்திரிக் விவசாயக் கொமிட்டியார் கூட்டத்தில் கொண்டுபோய் பாஸ் பண்ணிவிட்டு இந்தத் தீர்மானத்தை விவசாயப் பகுதி மந்திரியாரவர்களுக்கு அனுப்பப் பண்ணிவிட்டார்கள். இக்குளமானது பட்டிப்பளை ஆற்றுப் பாய்ச்சலின் தாய்க்குளமாக இருக்கும் கொண்டவட்டான், அம்பாரை, வளத்தாப்பிட்டி, இறக்காமம் முதலிய இடங்களிலுள்ள குளங்கள் மேற்படி குளத்திலிருந்து தண்ணீர் பெற நேரிடும். இக்குளத்தைக் கட்டி முடித்தால் தற்போதிருக்கும் பட்டிப்பளையாற்றுப் பாய்ச்சலுக்குரிய பூமி 33,000 ஏக்கர்களை விட இன்னும் 33,000 ஏக்கர் காட்டுப் பூமி வேளாண்மை நிலங்களாகி விடும்.

அன்றியும் இவ்விதமுண்டுபடும் 66,000 ஏக்கரிலும் வருடத்துக்கு மூன்று முறை கமம் செய்ய தண்ணீர் போதியளவு உண்டும். இந்தப் பாரிய குளத்தைக்



கட்டுவதையிட்டு விசாரணை செய்வதற்கு விவசாயப் பகுதி மந்திரியவர்கள் சித்திரை மாதம் 23ம் திகதி பி.ப. 2 மணிக்கு கல்முனைக்கு வருகிறார்கள். ஆகையால் முஸ்லீம்களே! இந்தக் குளத்தை உங்கள் பொக்கிஷ வீடாகக் கவனித்து திரள் திரளாய் மந்திரிமுன் சென்று, குளத்தைக் காலதாமதமின்றிக் கட்டளை கொடுக்கும்படி மிகவும் கெஞ்சிக் கேளுங்கள்.

கைத்தொழிலையும் நமது பகுதியில் பரப்பச்செய்ய வேண்டும். இதே நோக்கமாக மருதமுனையில் ஓர் நெசவு இயந்திரசாலை ஸ்தாபிக்கும்படி வன்னிமை திரு எம்.எஸ். காரியப்பர் அவர்கள் கொவர்மேண்டாரிடம் கேட்டிருக்கிறார்கள். இவ்வியந்திரசாலையில் ஏறக்குறைய 2000 நெசவுகாரருக்கு வேலை உண்டாம். நாங்கள் யாபேரும் இத்துரைமகனாருடன் ஒத்துழைத்தால் திட்டவட்டமாகவே எம் கருமத்திலும் சித்திபெறலாம் என்பதில் சந்தேகமில்லை.

2. திரு எம்.எஸ். காரியப்பர் வன்னிமையவர்கள் சில வருடங்களாக முஸ்லிம் கல்வி சம்பந்தமாய் அதிக பிரயாசை எடுத்து வருகிறார்கள். கல்முனையிலுள்ள இங்கிலிஸ் பாடசாலையை நிறுத்திவிடத் தொடங்கியபோது இத் துரைமகன் அப்பாடசாலை அதிகாரிகள்முன் தெரிபட்டு நமது அருமைப் பிள்ளைகளை ஆங்கிலப் படிப்பூட்டுவதற்காக பாடசாலை நடந்தேற வேண்டுமென வாதாடி சித்தியடைந்தார். ஒவ்வொரு கிராமத்திலும் பாடசாலைகள் ஸ்தாபித்திருக்க வேண்டுமென அரசினரிடம் அனேக ஆண்டுகளாய் பொத்துவில் துவறகமாய் தான் பரிபாலனம் செய்த ஒவ்வொரு பகுதியிலும் வாதாட்டம் நடத்திக்கொண்டே வருகிறார். நமது நாடு பொருளாதார விருத்தியடைந்து, கல்வி சிறந்து, நாட்டு மக்கள் இக்கால உலகப் போக்கோடு முன்னேற வேண்டுமென்னும் நோக்கத்துடன் தமது உத்தியோகத்தை நடத்திவரும் இவ்வாலிப துரைமகனை கற்றறிந்த தமிழ் மக்கள் ஒவ்வொரு ஸ்தானத்திலும் கையேற்று மனமகிழ்ந்து நன்றிபாராட்டி வருகிறார்கள். ஆனால், சோனகரில் சில மோட்டாத்துமாக்கள் மேற்சொன்ன துரைமகனையிட்டு அயோக்கிய வாக்கியங்களைப் பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் திரிகிறதாக நாம் அறியும்போது எமக்கு மட்டிலாத் துக்கமும் வெட்கமும் உண்டாகின்றது. ஆயினும், எழுபதினாயிரம் முஸ்லீம்கள் தங்கள் தலைவராகக் கையேற்றிருக்கும் ஓர் புண்ணிய சீலரை ஐந்து எண்களுக்கு மேற்படாத சில போலிப் பாமரர்கள் இக் கல்விமானைக் கொடும்பு பேசுதல் பூரணை சந்திரனைப் பார்த்துக் குற்றம் கூறுவதற்கு நிகராய் இருக்கிற்து.

3. இன்னம் பெண்கள் கல்வி கற்கத் தேவையில்லை என்று சில முஸ்லிம்கள் கூறுவார்கள். இந்தத் தப்பிதமான எண்ணமே காரணமாக பெண்கல்வி விஷயத்தில் மட்டக்களப்பு முஸ்லீம்கள் மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறார்கள். ஐந்து ஆண்பிள்ளைகள் படிப்பதிலும் ஒரு பெண்பிள்ளை படிப்பது எங்கள் ஜாதியவர்களுக்கு கூடிய நன்மையை விளைவிக்கும் என்று திரு எம்.எஸ். காரியப்பர் வன்னிமை எங்களுக்கு அடிக்கடி சொல்லி வருவதுடன் எல்லா முஸ்லீம் கிராமங்களிலும் பெண் பாடசாலைகளை கவர்ண்மென்டாரைக் கொண்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள். சொற்ப

காலத்துக்குள் மருதமுனை, நாய்ப்பட்டிமுனை, கல்முனைக்குடி, மாவடிப்பள்ளி கிராமங்களில் பெண் பாடசாலைகள் நடைபெறும். எனது சகோதர, சகோதரிகளே! இப்பாடசாலைகளில் உங்கள் பெண்மக்களை நூற்றுக்கணக்காய் ஆயிரக்கணக்காய் அனுப்பிப் படிப்பியுங்கள். தவறுகிறவர்களை வழக்குவைத்தால் வன்னிமையை மனம் நோகாதேயுங்கள். ஏனெனில் அவரின் செய்கை உங்களின் நன்மையையே கருதியது. இச்செய்கை உங்களுக்குக் கசப்பாயிருந்தாலும் உங்கள் பிள்ளைகளுக்கு இனிப்பாய் முடியும்.

இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி ஆகிய துறைகளில் 1930களில் இருந்தே எம்.எஸ். காரியப்பர் அக்கறையுடன் செயற்பட்டு வந்திருக்கிறார் என்பதை மக்பூல் ஆலிம் அவர்களின் மேற்காட்டிய கூற்றுக்கள் தெளிவுபடுத்துகின்றன. 1940களில் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் கல்முனையில் பணியாற்றிய காலத்தில் எம்.எஸ். காரியப்பரின் ஆலோசனையுடனும் அனுசரணையுடனும் கல்முனை கல்விச் சங்கம் உருவாக்கப்பட்டதையும் நாம் இது தொடர்பில் நினைத்துப் பார்க்கலாம். அச்சங்கத்தில் அஸீஸ் அவர்கள் தலைவராகவும் மக்பூல் ஆலிம் பொருளாளராகவும் செயற்பட்டனர். இப்பிரதேசத்தின் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் பிரமுகர்கள் தெரிவுசெய்யப்பட்டு சங்கத்தின் உறுப்பினர்களாகச் செயற்பட்டனர். அக்காலத்தில் கல்முனைப் பிரதேசக் கல்வி வளர்ச்சியில் இசச்ங்கம் முக்கிய பணியாற்றியது.

36

சோல்பரி அரசியல் சீர்திருத்தத்தின்கீழ் உருவாக்கப்பட்ட கல்முனைத் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு 1947ல் இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்துக்கு எம்.எஸ். காரியப்ர் தெரிவு செய்யப்பட்டார். பாராளுமன்ற உறுப்பினரானதோடு உள்நாட்டு அலுவல்கள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் பாராளுமன்ற செயலாளராகவும் நியமிக்கப்பட்டார். இலங்கையில் அவருக்குக் கிடைத்த அரசியல் அதிகாரம் இப்பிரதேசத்தில் தனது பொருளாதார, கல்வி அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அவருக்கு வாய்ப்பளித்தது. இபபிரதேச அபிவிருத்தியில் அவருக்கிருந்த அக்கறை தொடர்பாக 1948 ஜுலை 26ம் திகதி பாராளுமன்றத்தில் அவர் சற்று விரிவாக உரையாற்றினார். அந்த உரையின் சில பகுதிகளை இங்கு தமிழில் மொழிபெயர்த்துத் தருகின்றேன்.

1. சபாநாயகர் அவர்களே! சோல்பரி அரசியல் யாப்பின்கீழ் முற்றிலும் புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு தேர்தல் தொகுதியை நான் இச்சபையில் பிரதிநிதித்துவப்படுத்துகிறேன்.

   கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டம் அரசியல் ரீதியாக வடக்கு, தெற்கு எனப் பிரிக்கப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் வடக்கையும் தெற்கையும் கவனித்துக் கொண்டார்களா. நான் இப்போது பிரதிநிதித்துவப்படுத்தும் மட்டக்ளப்பு மாவட்டத்தின் மத்திய பகுதியான கல்முனைத் தேர்தல் தொகுதி அரசியல் அர்த்தத்தில் ஒரு மனிதரற்ற நிலமாகவே இருந்து வந்தது. அதன் விளைவாக எனது தேவைகள் எவையும் பூரத்தி செய்யப்படவில்லை. நான் இந்தப் பாராளுமன்றத்துக்கு வந்ததிலிருந்து தொடர்ந்தும் இந்த உண்மையையே அமைச்சர்களின் கவனத்துக்கு கொண்டுவர முயன்றிருக்கிறேன்.



2. கல்வித்துறையைப் பொறுத்தவரை போதிய ஆசிரியர்களும் தளபாடங்களும் அற்ற மோசமாக நிருவகிக்கப்பட்ட சில ஆரம்பப் பாடசாலைகளைத் தவிர நாங்கள் பெருமைப்படத்தக்க எவையும் எங்களிடம் இல்லை. நிந்தவூருக்குத் தெற்குப் பிரதேசத்தில் கிடைத்திருக்கும் வசதிகள் எல்லாம் திருவாளர் தருமரத்தினம் அவர்களின் முயற்சியினால் கிடைத்தவைதாம். எவ்வாறாயினும் கடந்த ஏப்ரல் மாதம் கல்முனைப் பிரதேசத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து இப்பிரதேசத்தின் புறக்கணிக்கப்பட்ட நிலைமை தொடர்பாகத் தன் அக்கறையை வெளிப்படுத்திய புதிய கல்வி அமைச்சருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டின் இறுதிக்குள் சாய்ந்தமருதில் ஒரு யூனியர் பாடசாலையை நிறுவுவதற்கும் விரைவில் சம்மாந்துறையில் ஒரு யூனியர் பாடசாலையை அமைப்பதற்கும் அவர் வாக்குறுதி அளித்தமைக்காக நான் இச்சபையில் அவருக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

3. மருத்துவ வசதிகளைப் பொறுத்தவரையிலும் கூட நாம் சிறப்பான இடத்தில் இல்லை. சிலவாரங்களுக்கு முன் கல்முனைக்குடிக்கும் நிந்தவூருக்கும் இடைப்பட்ட சனநெருக்கம் கூடிய பல கிராமங்களுக்கு பயன்படுத்தக்க வகையில் ஒரு பிரசவ விடுதியின் இடமாற்றம் பற்றி கௌரவ சுகாதார அமைச்சருடன் பேசியபோது 1948 முடிவடைவதற்கு முன் சாய்ந்தமருதுக்கும் கல்முனைக்குடிக்கும் இடையே ஒரு புதிய பிரசவ விடுதியை நிறுவுவதற்கு அவர் வாக்குறுதியளித்திருக்கிறார். தன் வாக்குறுதியை நிறைவேற்றுவார் என்ற எதிர்பார்ப்புடன் நான் அவருக்கு நன்றி கூறுகிறேன். அத்தோடு சாயந்தமருதில் மத்திய மருந்தகம் ஒன்றின் உடனடித் தேவை பற்றியும் நான் அவரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

4 சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் கல்முனை மாவட்ட விவசாயிகள் மத்தியில் இன்றைய நமது பிரதமராக இருக்கும் அன்றைய விவசாய அமைச்சரின் முன்னிலையில் பேசும்போது அவர், கல்லோயா நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றத்தவறினால், அன்று அவர் ஆரம்பித்திருந்த உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டம் இலங்கை வரலாற்றில் ஒரு நிறைவேறாப் பேராசையாக அல்லது ஒரு பாரிய அரசியல் சாகஸக் கதையாகவே பதியப்படும் என்று நான் அவரிடம் கூறினேன். இன்று இந்தச் சபையில் அதே விவசாயிகளின் சார்பில் பேசும்போது அந்த வேண்டுகோளை நிறைவேற்றியமைக்காக அன்றைய விவசாய அமைச்சரா இருந்த இன்றைய விவசாய அமைச்சராக இருக்கின்ற தந்தைக்கும் தனயனுக்கும் (டீ.டிஸ். சேனநாயக, டட்லி சேனநாயக) கல்முனை மாவட்ட விவசாயிகளின் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். காலப்போக்கில் இத்தீவின் அந்தப் பிரதேசத்தை இத்திட்டம் விவசாயிகளின் சொர்க்கபூமியாக மாற்றும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

1930களிலும், 1940களிலும் கல்முனைப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பரின் சிந்தனையும் செயற்பாடுகளும் எவ்வாறிருந்தன என்பதை நான் இங்கு எடுத்துககாட்டிய மக்பூல் ஆலிம் அவர்களின் கருத்துகளும் எம.எஸ்.காரியப்பர் அவர்களின் பாராளுமன்ற உரையும் தெளிவுபடுத்துகின்றன. மக்பூல் ஆலிம் குறிப்பிட்டிருப்பதுபோல

36

மருமுனையில் ஒரு நெசவாலை அமைக்கும் காரியப்பரின் திட்டம் ஏதோ காரணத்தால் நிறைவேறவில்லை என்று தெரிகின்றது.

இப்பிரதேசத்தின் கல்வி விருத்தியில் காரியப்பரின் பங்களிப்பு கணிசமானது. இப்பிரதேசத்தில் இன்று வளர்ச்சியடைந்துளள பல பாடசாலைகள் அவருடைய காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன. பெண் கல்விக்கு எதிரான பழைமைவாதச் சக்திகள் மேலோங்கியிருந்த காலத்தில் அவர் துணிச்சலோடு அதில் முதலடி எடுத்து வைத்தார் என்பது நினைவுகூரத்தக்கது.

கல்லோயா திட்டம் தொடர்பான இவர்களின் கனவுகளும் எதிர்பார்ப்புகளும் நியாயமானதே. ஆயினும் இவர்கள் எதிர்பார்ப்பதற்கு மாறாக இத்திட்டத்தால் இப்பிரதேசத்து முஸ்லிம், தமிழ் மக்களைவிட வெளியிடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்களக் குடியேற்றக்காரர்களே அதிக நன்மையும் மேலாதிக்கமும் பெற்றனர் என்பது பிற்கால வரலாறு. காரியப்பரோ அல்லது வேறு எந்தச் சிறுபான்மை அரசியல் தலைவர்களோ இப்பிரதேசத்தில் சிங்கள மேலாதிக்கத்தை தடுத்து நிறுத்தும் சக்திவாய்ந்தவர்களாக இருக்கவில்லை.

பாராளுமன்ற கட்சி அரசியல் முறை தொடங்கின காலத்திலிருந்து இலங்கை முஸ்லீம்களின் அரசியல் வரலாறு பெரும்பான்மைக் கட்சிகளைச் சார்ந்ததாகவே இருந்து வந்திருக்கின்றது. முஸ்லீம்களின் சிறதலான குடிப்பரம்பலும், கல்வி கற்ற ஒரு வலுவான மத்திய தர வர்க்கம் அவர்கள் மத்தியில் உருவாகாதிருந்தமையும் இதற்கான காரணிகள் எனலாம். எனினும் முஸ்லிம்களுக்கென்று ஒரு தனி அரசியல் கட்சி தேவை என்பதை எம.எஸ். காரியப்பர் முதலில் உணர்ந்திருந்தார். 1960ல் "அகில இலங்கை முஸ்லிம் ஐக்கிய முன்னணி" என்ற பெயரில் அவர் அத்தகைய ஒரு கட்சியை உருவாக்கினார். ஆயினும் சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்த வலுவான அகப்புறக் காரணிகள் இருந்ததுபோல 1960ல் எம்.எஸ். காரியப்பரின் கட்சி நிலைத்து நிற்பதற்கு வாய்ப்பான சூழல் இருக்கவில்லை. அதனால் அவரது கட்சி தோன்றியவாறே மறைந்து விட்டது. ஆயினும், கிழக்கில் முஸ்லீம்களுக்கு ஒரு தனி அரசியல் கட்சி வேண்டுமென்ற சிந்தனை வித்தை ஊன்றியவர் காரியப்பர் என்றே கூறலாம்.

அரசியல் சித்தாந்தத்தைப் பொறுத்தவரை எம்.எஸ். காரியப்பர் வலதுசாரிகளின் ஆதரவாளராகவும் இடதுசாரிகளின் எதிர்ப்பாளராகவுமே இருந்தார். 1947ல் நடைபெற்ற இலங்கைப் பாராளுமன்றத்துக்கான முதலாவது தேர்தலில் வலதுசாரி-இடதுசாரி மோதல் முனைப்பாக இருந்தது. அரசியலில் வலதுசாரிப்போக்கை பிரதிபலித்த ஐக்கிய தேசியக்கட்சி பெரும்பாலான ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைத்தது. காரியப்பர் அதன் ஒரு அங்கமாக இருந்தார். லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி முதலிய இடதுசாரிக் கட்சிகள் இலங்கை அரசியலில் முதலும் கடைசியுமாக 18 ஆசனங்களைப் பெற்று பிரதான எதிர்க்கட்சிகளாக அமைந்தன. இவர்களின் அரசியல் நடைமுறையில் ஆயுதப் புரட்சிக்கு இடமில்லை. எனினும், சித்தாந்த ரீதியில்



இடதுசாரிகளின் இரத்தம் சிந்தும் புரட்சி பற்றிய கருத்துக்கு எதிராக தனக்கேயுரிய வாசாலாகத்துடன் 1948ல் பாராளுமன்றத்தில் காரியப்பர் பின்வருமாறு பேசினார்

*"லெனின், ட்றொட்ஸ்கி, ஸ்டாலின் ஆகியோரை சுயெஸ் கால்வாயின் மறுபக்கத்தில் விட்டுவிடும்படி நான் கௌரவ பிரதிநிதிகளைக் கேட்டுக் கொள்கிறேன். அர்கள் இங்கு வரமுடியாது. அவர்கள் இந்த நாட்டில் காலூன்ற முடியாது. நமது இல்லமான இந்தத் தீவில், பண்டைய மரபுகளும் கீழ்த்திசைத் தத்துவமும் மேலோங்கியுள்ள இத்தீவில், நூறு வீதம் விவசாயப் பொருளாதாரம் நிலவும் இத்தீவில் மேற்கத்தையப் பாணியிலான இரத்தம் சிந்தும் புரட்சியொன்று எப்போதாவது வருமா? என்று நான் உங்களிடம் கேட்கவிரும்புகிறேன்.*

*ஆசிய அர்த்தத்தில் ஒரு புரட்சிக்காக நாம் ஐந்து ஆண்டுகள் காத்திருக்கத் தேவையில்லை. புதிய முன்மொழிதலின்படி ١٢ மாதங்கள்கூட நாம் காத்திருக்கத் தேவையில்லை. அந்த வகையான ஒரு புரட்சி ஏற்கனவே இங்கு வந்துவிட்டது. இந்த சபையிலுள்ள ஒவ்வொரு கட்சியும் தம்மைச் சோசலிஸ்ட் என்றே அழைத்துக்கொள்கின்றன, சாதாரண மனிதனின் புன்னகையில் குளிர்காய்கின்றன. அவன் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயல்கின்றன. இந்தச் சபையிலுள்ள ஒவ்வொரு கட்சியும் சாதாரண மனிதனின் நேசன் என்ற பட்டத்துக்கான போட்டியில் இறங்கியுள்ளன. அதுதான் புரட்சி. இச்சபைத் தலைவர், தன் நரம்புகளில் நீல இரத்தம் ஓடும் ஒரு நிலப் பிரபு தன் அலங்கார ஆடைகளையும் பெருமைகளையும் உதறிவிட்டார். இன்று வேட்டி, பெனியனுடன் இருக்கிறார். சாதாரண மனிதனுக்காகத் தொல்லைப்படுகிறார். இதுதான் புரட்சி .........*

*இத்தகையதொரு புரட்சிதான் இந்த நாட்டுக்குச் சாத்தியம். இந் நாடு இப்போது அத்தகைய ஒரு புரட்சியின் பிடியில் இருக்கின்றது. இந்தச் சபையின் மதிப்புக்குரிய ஒவ்வொரு உறுப்பினரையும் ஏனைய தலைவர்கள் அனைவரையும் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் அக்கறை காட்டுமாறும் இந்த நாட்டின் விவசாயிகள் ஒரு கௌரவமான வாழ்க்கைத் தரத்தை அடைதற்கு உதவி புரியுமாறும் நான் அழைப்பு விடுக்கிறேன். இதை நாம் சாதிப்போமானால் நாம் இதையிட்டு பெருமைப்பட முடியும்".*

சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகளுக்குப் பிறகும் காரியப்பர் எதிர்பார்த்த அந்தப் புரட்சி நாடு பரந்த நிலையில் விவசாயிகளின், சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் புரட்சி பெருமளவில் நிறைவேறவில்லை என்பது வருத்தம் தரக்கூடிய ஒரு செய்திதான். இது தேசிய அரசியல் சார்ந்த பிரச்சினை. தேசிய அரசியல் தலைமைத்துவத்தின் பிரச்சினை. ஆடை மாற்றங்களினாலும், வார்த்தைச் சோடனைகளாலும் அந்தப் புரட்சியை எட்டிவிட முடியாது. இது எவ்வாறாயினும் கிழக்கிலங்கை முஸ்லீம்களின் குறிப்பாக அம்பாரை மாவட்ட முஸ்லீம்களின் இன்றைய கல்வி, அரசியல், பொருளாதார வளர்ச்சிக்கு 1930, 1940களில் வித்தூன்றியவர் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

பிரதேச அபிவிருத்தியிலும் தேசிய அரசியலிலும் காரியப்பரின் இடம் விரிவாக ஆராயப்பட வேண்டும். அவரது அரசியல் மற்றும் பொது வாழ்க்கை தொடர்பான விமர்சனபூர்வமான ஒரு வாழ்க்கை வரலாறு எழுதப்பட வேண்டும். இச்சிறு கட்டுரை. அதற்கான ஒரு ஆரம்பமாகவே அமைகின்றது.

# The Late Gate Mudliyar: A Visionary who lived ahead of His Time

**A.L. Abdul Azeez**
LL.B, Cert. d'Edutes Diplomatiques,
LL.M , SLFS

In 1989, writing in The Island newspaper, I recalled my last conversation with the late Gate Mudliyar M.S. Kariapper. Looking into my eyes, the ailing Gate Mudliyar studiously asked me "Are you studying well?" He knew then that I was reading for law. It was on the day he was rushed to a private hospital in Colombo where he breathed his last.

In the twenty years that ensued, I have gone from being a student of law to a student of international relations. Yet, as the late Gate Mudliyar would often remark, "I am still a student".

Let me touch on in this piece, which I dedicate to the memory of Gate Mudliyar, a few aspects of his life, which I consider unique. Some of my observations come from an intimate knowledge I had of that great man as well as from what I had learned from him. And some, of course, arise from how I understood- and unravelled- his nuggets of wisdom as my modest exposure to the world at large expanded. For, in my assessment, the late Kariapper was also an internationalist, who lived ahead of his time, and who encouraged the youth to look beyond what seemed immediate into the world at large. He told me once that he was living close to the beach because he liked to look beyond the horizon'.

Facets of the late Kariapper's illustrious life have been captured in several write-ups from time to time. Some have covered highlights of his colonial service, some his education, upbringing, and social class, and some his erudition and scholarship. Many have invariably commented on the core aspects of his political life, his contribution to the development of education as well as the development of agriculture, irrigation and human settlement.

There is no gainsaying that all this was an integral part of what the late Kariapper was. Nevertheless, the essence of the late Kariapper's life, in my view, both encapsulated this as well as extended far beyond it. To say this might seem an untested hypothesis, but my experience with him spanning almost a decade till his demise in 1989 makes me to believe that such an observation is not without substance.



In my many encounters with the late Kariapper, I found to my youthful amazement, that he was a man of many parts; an epitome of a mix of ingenuity and elegance. As I digested over the years some of what he shared with me in my youth days, my appreciation of him grew ever deeper, inculcating in me an unshakable belief that he had had a thorough understanding of the world's history, a comprehensive grasp of contemporary thoughts from philosophy to politics, and a deeper knowledge of linguistics and literature and of civilizations and cultures. This is aside from his expertise in the subject of tropical farming and agro-economics which he was familiar with as a civil administrator, especially during the war times. And add to it the gift of the gab and the fun of the pun he commanded. From all this flowed his innate, immaculate ability to narrate anecdotes and accounts of history, often interspersed with quotable quotes, peppering both his writings and speeches. For me, to listen to him was a treat, and to read him- and his writings- was such a feat.

As the Chinese axiom goes, "an evening's discussion with a wise man is better than a study of ten years". Yet, I have lost count of the number of evenings I had had with the late Kariapper. Much as I would say that I grew fonder of him, so was I deeply aware that he too liked me most. In the initial days, I used to go to him every now and then. Such visits, however, became more frequent as time passed by, with Gate Mudliyar himself sending me chits through one of his many well-wishers, asking me to 'see him'. Each of these visits afforded me an opportunity to learn a new thing, a new expression, or even a new postulate or principle. As I remained immersed in an animated discussion with him wandering from one subject to another covering a whole host of themes in a matter of hours, the notebook I carried would be full of quotes, anecdotes and axioms, let alone new words and phrases. These were often of such rarity that it was then difficult for me to resist the urge to put them to use then and there.

These discourses, if I may use the term, became one of the critical adjuncts of the larger learning process transforming my own personality – and thinking as well. A positive aspect of this transformation, as far as I could feel, was an increase in my confidence level as I chose to communicate my thoughts and began to confront new challenges.

In a country that had emerged from the yoke of colonialism- in what is known in International Law as the realization of the right to self-determination- development was seen as a process of both consolidating that right as well as giving meaning and content to it. Having served as Vanniyar

கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஞாபகார்த்த நினைவு மலர் - 2009

Mudliyar under the colonial administration in the region, Gate Mudliyar had acquired a fund of knowledge and experience in addition to a vast network of high level contacts. As much as he wanted to put this to use for the people and the region, so was there a greater call to public service awaiting him from Ceylon's independence leaders. The late D.S. Senanayake, the Father of Independent Ceylon, was understandably his great admirer. Further as far back as 1948, 'politics' was acknowledged perhaps as a higher means of public service, something the late Kariapper would not have relented.

His advent to politics therefore was logical, and was intended to help harness that fund to expanding the choice of the people as development is currently understood in socio-economic discourses. As his political trajectory bears out, the late Kariapper acquitted himself admirably in this task to his last day in the legislature, through his dedication to causes ranging from the development of the Gal-Oya Multi-purpose Reservoir Scheme, to building of schools with a particular emphasis on the education of Muslim girls, and to the development of Kalmunai region.

The late Kariapper's vision of 'development' was both exemplary and inspiring. He was ahead of the curve when it came to the understanding of the concept of development. With his experience in, and exposure to, the development of agriculture and land as well as development of irrigation and human settlement, and thanks especially to his grasp of contemporary trends and thoughts, his vision of development had emphasis on sustainability and participatory approaches. It put premium on the involvement of the local communities in activities that were intended to empower them. In his conception, such empowerment at local level would have its reflection on the strength of national unity and cohesion aside from engendering wealth and prosperity in the long run.

He had a manifest concern for the protection of the environment. His training in the discipline of tropical agriculture had transformed his thinking and perspective towards the environment. A document published in 1936 has acknowledged in particular that the late Kariapper was elected in the year 1923 "in recognition of the keen interest he took in the game protection", an honorary member of the Ceylon Game and Fauna Protection Society. "He is today one of the four honorary members which the Society has, including the Hon. Mr. D.S. Senanayake, Minister of Agriculture and Land".

It was no surprise therefore that the late Kariapper had an intrinsic belief that no development would be sustainable unless it was underpinned by an inclusive process integrating all relevant factors and concerns. As Sri Lanka broke free from colonial bondage, bolstered by his new found influence and authority in the post – independent establishment, Gate Mudliyar gave expression to this belief by helping in the launching of an integrated system of development, which had at its heart, the development of the Gal Oya reservoir. Many appear to view the Gal Oya project as an irrigation scheme, intended primarily to benefit the peasantry. There is no denying that.

For the late Kariapper however, the entire enterprise represented an innovative, inclusive, coordinated effort going beyond unlocking the region's irrigation potential alone. He emphasized as much on launching adequate ecologically synchronized activities as on undertaking such a grand scheme. Such an approach, in his view, would bring a sense of balance to the whole enterprise thus making it overall environment-friendly. As he explained to me once, his whole approach to agricultural productivity, sustainable livelihood, town planning and development, and human settlement was deeply grounded on this holistic vision. It is interesting to note that for the international community however, it took decades to come fully into grips with such a comprehensive vision.

In one of my encounters in the mid-1980's, the late Kariapper brought home to me an important point which struck me most. That was about the impact of accelerated urbanization in Kalmunai, a town and a commercial hub, which the late Kariapper himself helped to develop at an early stage. Gate Mudliyar lamented then that the people of that region had failed to tap the potential of human settlement that proceeded with the development of Gal Oya. By refusing to move out of that over-crowded town and its surrounding areas, the people, as he put it to me, had only denied their next generation a space for decent living, with serious health and environmental consequences in time to come.

He deeply felt that the increasing tendency among the people to seek to live as a compact unit in a tight place would in the course of time put a tremendous pressure on the limited infrastructure and services to cater to the needs of a vertically growing community. His main worry was that if the development of this region were to continue at this pace, the day would not be far off when it would be bursting at its seams.

My recent visit to my birthplace made me to realize that the Gate Mudliyar's prediction was already coming true. With our belief in the symbolism of physical wealth, that manifests itself in the construction of huge buildings and complexes without taking into account environmental concerns, and with virtually no leadership in sustainable town planning and management,


கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஞாபகார்த்த நினைவு மலர் - 2009

the space for natural living has shrunk to a point where not just the health of t people but their thinking and values as well are being affected. The Tsuna Tidal Waves which took a heavy toll of life in the region on the 26th Decemb 2004 is only a case in point.

There are several lessons one could learn from the la Kariapper's life and his inspiring leadership. For me he was a multiface personage; a leader, an environmentalist, a development practitioner, and abo all, an internationalist. He gave of his best in the service of the nation, t region and its people. Over the years since his demise, I have reflected deep on his- what I would call- nuggets of wisdom, and found them to be tru enlightening. I would not hesitate to add that he had articulated concepts ar thoughts on wide-ranging themes from sustainable development, to hum settlement, to environment protection long before they became part of t international discourses. Releasing of a Commemorative Stamp by t Government of Sri Lanka in honour of Gate Mudliyar is a fitting tribute to th great visionary and legend. Nevertheless, we need to do more.

As one who had the fortune to have come to know the la Kariapper at young age, I owe a debt of gratitude to all those who have initiat this great idea of celebrating his life. My special thanks in this regard go Mr. A.R. Munsoor, former Minister of Trade and Shipping, who encouraged m to contribute this piece to the commemorative publication, with his advice a guidance and also goodwill, and to Mr. M.C.A. Hameed, retired Principal Mahmud Ladies College and a respected community leader, who, like my la father, continued to provide me with materials on the life of Gate Mudliyar, the belief that I could do my bit in bringing out to the public domain some aspec of the late leader's life, which I had the privilege to know.

It is my hope that when, in future, some academic research undertaken by a discerning intellectual, it will bring out such aspects of his l that lie beyond our ordinary grasp; aspects that, in my view, made up the su total of the Gate Mudliyar that he was. Let me stress for the time being, that th need for such a research is more pressing in a society and a region whe leadership with a strategic vision and an inclusive approach, is now history.

*(13th February 09)*

*The views expressed in this article are those of the author only, and are not attributable to, or reflective of, the policy or the position of the institution which he serves.*



# கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரி... ...ரலாறும் சேவையும் ஒரு கண்ணோட்டம் -

எம்.சீ.ஏ. ஹமீது
ஸ்தாபக அதிபர்,
மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை

ஏ.எம். ஹுஸைன் B.A.
முன்னைநாள் அதிபர்,
ஸாஹிராக் கல்லூரி, கல்முனை

கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்கள் செய்த சமூக சேவைகளைக் கௌரவிக்குமுகமாக இலங்கை அரசினால் தபால் முத்திரையொன்று இன்று வெளியிடப்படவிருப்பது எல்லோருக்கும் மனமகிழ்ச்சியை அளிக்கின்றது.

இந்த ஏற்பாட்டினைச் செய்து அன்னாரின் பெருமையினை நாடறியச் செய்த இலங்கை அரசிற்கு இப்பிரதேச மக்கள் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளனர்.

இந்த அரிய சந்தர்ப்பத்தில் அவர் பற்றிய வரலாற்றுப் பதிவுகளையும், அவர் செய்த சேவைகளையும் மீட்டிப் பார்ப்பது பொருத்தமானதாகும்.

அவர் வாழ்ந்து காட்டிய முன்மாதிரியையும், அவர் சமூகத்திற்குச் செய்த சேவைகளையும், தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்ற இளம் சமுதாயத்தினர் தெளிவாக அறிந்திருக்க வேண்டிய அவசியமும், காலத்தின் தேவையுமாகும்.

**பிறப்பும் ஆரம்பக் கல்வியும்:**


கௌரவ கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்கள் பிரபல்யம் பெற்ற காரியப்பர் குடும்பத்தில் டாக்டர் இப்றாகிம் காரியப்பர், லைலத்துல் கத்ரியா காரியப்பர் தம்பதியினருக்கு இரண்டாவது புத்திரராக 1901ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி, சாய்ந்தமருதூரில் பிறந்தார்.

அவரது தந்தை கொட்டபோவ காரியப்பர் பரம்பரையைச் சேர்ந்தவராகவும், அவரது தாய் மட்டக்களப்பு காரியப்பர் பரம்பரையைச் சேர்ந்தவராகவும் இருந்தனர்.


கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் தனது ஆரம்பக் கல்வியைக் கல்முனை லீஸ் உயர்தரப் பாடசாலையிலும், பின்னர் கொழும்பு உவெஸ்லி கல்லூரியிலும் கற்று மெற்றிகுலேசன் பரீட்சையில் சித்தியடைந்தார். பின்னர் மருத்துவத் துறையில் கல்வியைத் தொடர்ந்த எம்.எஸ். காரியப்பர் தனது குடும்பத்தவர்களின் விருப்பத்தின் காரணமாக, பொத்துவில் "மகாபிட்டி"

கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஞாபகார்த்த நினைவு மலர்-2009

# கொட்டபோவ காரியப்பர் பரம்பரை




# மட்டக்களப்பு காரியப்பர் பரம்பரை



## பாக்டர் இப்றாஹிம் காரியப்பர், லைலதுல் கத்ரியா காரியப்பர் தம்பதிகள்

### மகன் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர்

- மகள்
  அல்ஹாஜ் சட்டத்தரணி
  எம்.எம். முஸ்தபா அமைச்சர் அவர்களின் மனைவி
- ஸக்காப் காரியப்பர்
- மகள்
  சட்டத்தரணி ஓ.எம். சலீமின் மனைவி
- மகள் - ஸுஹறா காரியப்பர்
  அல்ஹாஜ் சட்டத்தரணி ஏ.ஆர். மன்சூர் அமைச்சரின் மனைவி
- மகள்
  எம்.எச்.எம். ஷரீப்பின் மனைவி
- மகன்
  ஜின்னாஹ் காரியப்பர்
- மகன்
  பாறூக் (இக்பால்) காரியப்பர்
- மகள் - லத்தீபா காரியப்பர்
  ஜனாப் எம். ஹுஸைனின் மனைவி
- மகள் - தாஹிரா காரியப்பர்
  ஜனாப் எச்.ரீ. பரீதின் மனைவி
- மகள் - யாக்கூபா காரியப்பர்
  ஜனாப் முஹம்மது அலியின் மனைவி
- மகள் - நூர்ஜஹான் காரியப்பர்
  ஜனாப் நஸ்ருதீனின் மனைவி

வன்னிமைப் பதவியை தனது 20வது வயதில் 01-01-1921ஆம் ஆண்டில் பொறுப்பேற்றார்.

## வன்னிமைப் பதவிக் காலமும், திருமணமும்

பொத்துவில் வன்னிமையாகக் கடமையாற்றிய கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் திறமையைக் கண்ணுற்ற ஆங்கில கவர்னர்கள் 1927ஆம் ஆண்டில் சம்மாந்துறை நாடுகாடுப் பற்று வன்னிமையாகவும், இறுதியாக 1932இல் கரைவாகு நிந்தவூர்ப்பற்று வன்னிமையாகவும், மொத்தமாக 25½ வருடகாலம் சேவையாற்றிய பின், 01-07-1946இல் ஓய்வு பெற்றார். சுமார் 14 வருடத்திற்கு மேற்பட்ட காலம் அவர் கரைவாகுப்பற்று வன்னிமையாகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

கரைவாகுப்பற்று வன்னிமையாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில், செல்வமும், செல்வாக்கும் பெற்று விளங்கிய காசிம்வாவாப் போடியாரின் பேத்தியும், முகம்மது காசிம் போடியாரின் (குழந்தைப் போடியார்) மகளுமான கதீஜா என்பவரை 1928இல் தனது 27வது வயதில் திருமணம் செய்து கொண்டார்.

## காரியப்பர் என்னும் அடைமொழியும், கேற்முதலியார் பட்டமும்

12ஆம் நூற்றாண்டளவில் ஆட்சிசெய்த கீர்த்தி நிஸங்க மல்லன் என்னும் மன்னன், தனக்கும், தனது அரச குடும்பத்தினருக்கும் வைத்தியம் பார்த்த முஸ்லிம் வைத்தியர்களுக்கு இந்தப் பட்டத்தை வழங்கியதாகவும், அரசனிடத்தில் இவர்கள் மிகுந்த செல்வாக்குடன் இருந்ததாகவும் சொல்லப்படுகின்றது. இதற்கு இன்னுமொரு வரலாறும் கூறப்படுகின்றது. "ஹேர்பர்ட் வைட்" என்பவரினால் எழுதப்பட்ட வரலாற்று நூலில் நெய்னாமரைக்கார் என்பவர் 1818 மார்ச் 07ம் திகதி காரியப்பராக நியமனம் பெற்றார் என்றும் இவரது சந்ததியினரில் ஒருவர் கரைவாகுப்பற்றில் விவாகம் செய்தார் என்றும் குறிப்பிடுகின்றார்.

"வன்னிமை"ப் பதவியைப் பொறுப்புடனும், ஆங்கிலேயருக்கு விசுவாசத்துடனும் செய்து வந்ததனால் எம்.எஸ். காரியப்பருக்கு அவரைக் கௌரவிக்கும் முகமாக 1944ல் "கேற்முதலியார்' என்னும் பட்டத்தை ஆங்கிலேயர் வழங்கினார்கள். இலங்கை முஸ்லிம்களில் இப்பதவி, இவருக்கு மட்டுமே வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

## விவசாயத்துறைக்கு அவர் ஆற்றிய சேவை

### கல்லோயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம்

அரசசபை முதல்வரும், உணவு விவசாய அமைச்சருமான திரு. டி.எஸ். சேனநாயக்கா அவர்கள், கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்களுடன் இக்கினியாக்கலைக்குச் சென்று, ஒரு மரத்தினை வெட்டி வீழ்த்தியதன் மூலம், கல்லோயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் ஆரம்ப வேலைகளை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வை 03.05.1941இல் இலங்கை டெய்லி நியூஸ் பத்திரிகை பின்வருமாறு செய்தி வெளியிட்டிருந்தது.



*"முதல் மரத்தை இன்று வெட்டியதன் மூலம் கல்லோயா நீர்த்தேக்கம் என்னும் குழந்தை இன்று கருக் கொள்கின்றது. கருச்சிதைவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது கேற்முதலியார் காரியப்பரின் பணியாகும். கரையோரப் பகுதியில் மிக அடர்த்தியாக வாழும் அவரது குடிகளை, கல்லோயாப் பிரதேசத்தில் குடியமர்த்துமாறு அவரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். கரையோரப் பகுதியில் உள்ள நிலத்தை விட இப்பகுதியில் உள்ள நிலம் மண்வளம் கூடியதாயிருப்பதைக் காண்கின்றேன்."*

இது பத்திரிகையில் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த டி.எஸ். சேனநாயக்காவின் பேச்சின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் பெரியதந்தையான ஏ.கே. காரியப்பர் அவர்கள் இக்கினியாக்கலையூடாக பதுளைக்குப் பிரயாணம் செய்யும்பொழுது, இரண்டு மலைகளைக் கண்டு, அவைகளுக்கிடையில் அணையொன்றைக் கட்டி, கல்லோயா நீரைச் சேமிப்பதன் மூலம் விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம் என்னும் கருத்தை வெளியிட்டார். அவரது கருத்தின் அடிப்படையிலேயே, கல்லோயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆங்கிலேய கவர்னர் மட்டக்களப்புக்கு வரும்பொழுதெல்லாம், ஏ.கே. காரியப்பர் அவருக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்பொழுது கல்லோயாவில் அணைக்கட்டு கட்டுவது பற்றிக் குறிப்பிட்டு வந்தார். கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரும், தனது பேச்சிலும் எழுத்திலும் இத்திட்டம் பற்றி வலியுறுத்தியும் வந்தார்.

1949 ஆகஸ்ட் 28ஆம் திகதி இக்கினியாக்கலையில் நடைபெற்ற ஒரு விழாவில் கலந்துகொள்வதற்காகச் சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரான கௌரவ டி.எஸ். சேனநாயக்கா அவர்கள் வருகை தந்திருந்தபொழுது காரைதீவுச் சந்தியில் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவருக்கு மகத்தான வரவேற்பளித்தார்.

1950ம் ஆண்டில் விவசாய மந்திரியாக இருந்த டட்லி சேனநாயக, பாராளுமன்ற விவாதத்தில் பதிலளித்துப் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.





*"கல்லோயா நீர்த்தேக்கத் திட்டத்திற்காக, கேற் முதலியார் பல வருடங்கள் நடாத்திய போராட்டம் பலன்பெற்று விட்டது. "கல்லோயாத் திட்டத்தின் பிதா" என்று அழைப்பதற்கு அருகதையுடையவர் யாரேனும் இருப்பாரேயானால், அவர் உண்மையில் கேற் முதலியார் காரியப்பர் தான். இந்த மாபெரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சகல அதிகாரிகளுக்கும் எனது நன்றி உரித்தாகுக. கல்லோயா பள்ளத்தாக்கு ஒரு கிருஷிகர்களின் சுவர்க்கமாக மாறும் நன்னாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்".*


இச்செய்தி 1950 மே மாதம் 26ம் திகதி தினகரன் பத்திரிகையில் "திட்டத்தின் பிதா" என்னும் தலைப்பில் வெளிவந்தது.

இதிலிருந்து கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் இப்பிரதேச விசயாயிகளின் முன்னேற்றத்தில் எவ்வளவு கரிசனை கொண்டிருந்தார் என்பதை அறியமுடிகின்றது.

1951 ஜூன் 10ஆம் திகதி கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றத்தைப் பார்வையிடுவதற்காக கௌரவ டி.எஸ். சேனநாயக்கா அவர்கள் இங்கு வருகைதந்து கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பருடன் இக்கினியாக்கலைக்குச் சென்றிருந்தார். அங்கு அவர் தனது கைப்பட ஆங்கிலத்தில் எழுதிய வரலாற்றுச் சம்பவக் குறிப்பு இவ்வாறு அமைந்திருந்தது.

*"கல்லோயாப் பிரதேசத்திற்கு 1951 ஜூன் 10ஆம் திகதி விஜயம் செய்து திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நேரடியாகவே அவதானித்தேன். குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே இத்திட்டம் பூரணமடையக் கூடிய வேகத்தில் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் ஆரம்பத்தில் இருந்தே கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் காட்டிய மிதமிஞ்சிய அக்கறையை இச்சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சியுடன் நினைத்துப் பார்க்கின்றேன். இவ்வணைக்கட்டு வேலைகளை அங்குரார்ப்பணம் செய்வதற்காக இவ்விடத்தில் நான் முதலாவது மரத்தை வெட்டி இப்பொழுது சரியாகப் பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சியே எமது விசுவாசமான அபிலாசையாக இருந்தது. இத்திட்டம் பூரணமாக நிறைவேற வேண்டும் என்னும் முயற்சியில் என்றுமே தளர்ச்சி அடையாதவர் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்களே. இப்பணிகளைப் பொறுப்பேற்றவர்கள் அபாரமாகப் பணிபுரிவதில் அவரும் சந்தோசப்படுவார். எங்கள் இருவரதும் கனவுகள் நிறைவேறியதை அவரும் நானும் கூட்டாக உணர்கிறோம்."*

டீ. எஸ். கைபபட எழுதய கடிதம




இக்குறிப்பில் கௌரவ டி.எஸ். சேனநாயக்கா அவர்கள் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்களைப் புகழ்ந்து பாராட்டியுள்ளமை கவனிக்கக் கூடியதாகும். அணைக்கட்டு கட்டி முடிக்கப்பட்டதன் பின்னர் கல்லோயா நீர்த்தேக்கத்திற்கு, "சேனநாயக்க சமுத்திரம்" என்னும் பெயரைச் சூட்ட வேண்டும் என்று முன்மொழிந்தவர் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பராவார்.

இப்பிரதேசத்திற்கு மட்டுமல்லாது, தேசிய ரீதியாகவும் பயன்தரத்தக்க கல்லோயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தினை நிறுவுவதற்கு முன்னின்று உழைத்ததன் மூலம், கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் விவசாயத் துறைக்குச் செய்த சேவைக்காக, நம் அனைவராலும் நினைவு கூரப்பட வேண்டியவராகும்.

## தேசிய மட்டத்திலான பொருளாதார சிந்தனையும், விவசாய சங்கங்கள் அமைத்தலும்

1940ஆம் ஆண்டளவில், கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் தேசிய மட்டத்திலும், பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனைகளையும், திட்டங்களையும் முன்வைத்தார்.

அவைகளாவன:

01. கல்லோயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம்.
02. நெல்லுக்கான உத்தரவாத விலையைத் தீர்மானித்தல்.
03. மந்தை வளர்ப்பை கிராமங்களில் ஊக்குவித்தல்.
04. பால் உற்பத்தியில் தன்னிறைவு காணுதல்.
05. கூட்டுறவு இயக்கங்களை ஆரம்பித்துச் செயற்படுத்துதல்.
06. பிரதேசங்கள் தோறும் விவசாய வங்கிகள் நிறுவுதல்.
07. விவசாயிகளுக்கான கடன் வசதிகள் ஏற்படுத்துதல்.
08. விவசாய அடிப்படையிலான ஏனைய மானிய வசதிகள்.
09. சிறுபயிர்ச் செய்கையை ஊக்குவித்தல்.
10. மீன்பிடித் துறைமுகங்கள் அமைத்தல்.
11. நெசவுத் தொழிலை விருத்தி செய்தல்.



கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் இவ்வாறான தீர்க்கதரிசனமான ஆலோசனைகள் இக்காலத்தில் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஏழை விவசாயிகளின் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்ட அரசாங்கம், கிராமங்களின் விவசாய பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகக் கிராமங்கள் தோறும், விவசாய ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களை நிறுவி, விவசாயிகளின் பிரச்சினைகளை நீக்குவதற்கு உதவியது.

இவ்வாறான சங்கங்களை உருவாக்கி விவசாயிகளை ஊக்கப்படுத்துவதன் மூலம் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் விவசாயிகளைக் கடன் தொல்லைகளில் இருந்து மீட்டதுடன், அவர்களது விளைபொருட்களை உத்தரவாத விலையில் சங்கங்களின் மூலம் கொள்வனவு செய்து, அவர்களுக்கு உதவினார்.

## அதிக உணவு பயிரிடுதல் கண்காட்சி

1943ஆம் ஆண்டில் தேசிய ரீதியாக நடைபெற்று வந்த "அதிக உணவு பயிரிடுக" *"Grow More Food"* என்னும் கருப்பொருளைக் கொண்ட கண்காட்சி கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் முயற்சியால் கல்முனையில் பள்ளிவாசல் அமைந்துள்ள நிலப்பரப்பிலும், தற்பொழுது மாநகரசபை, பிரதேச செயலகக் காரியாலயங்கள் இயங்கி வருகின்ற கட்டிடங்கள் உள்ள நிலப்பரப்பிலும் நடைபெற்றது. கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரினால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சியை திரு. டி.எஸ். சேனநாயக்கா அவர்கள் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்கள்.

இக்கண்காட்சியில் சேனைப் பயிர்ச்செய்கை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும், விவசாய உற்பத்திப் பொருட்களும், கால்நடைகளும், கைப்பணிப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

## கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் கல்வித்துறைச் சேவைகள்

கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்கள், கொண்டிருந்த தீர்க்கதரிசனம் மிக்க கல்விச் சிந்தனைகள் காரணமாக இன்று இப்பிரதேச மக்கள், கல்வியில் உயர்நிலையை அடைந்து, அதன் பயன்பாடுகளை அனுபவிக்கின்றனர் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

அக்காலகட்டத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஆண்கள் மட்டும் கல்வியைப் பெற்றுக்கொண்ட அதேவேளை பெண்களைப் பொறுத்தவரையில் அனைவருமே பாடசாலைக்குச் சென்று கல்வி கற்பதில் நாட்டமில்லாதவர்களாகவே இருந்து வந்தனர். ஆனால், "ஓதப்பள்ளி (குர்ஆன் பாடசாலை)களுக்குச் சென்று, குர்ஆனை வாசிக்கக் கற்றுக்கொள்ளும் வழமை இருந்துவந்தது.

சாய்ந்தமருதிலும், கல்முனைக்குடியிலும் சில கலவன் பாடசாலைகள் இயங்கி வந்தாலும் அப்பாடசாலைகளில் 5ஆம் வகுப்புவரை மட்டுமே கல்வி கற்கக் கூடியதாக இருந்தது.

சாய்ந்தமருதில் 1894இல் மெதடிஸ்த மிஸனரிப் பாடசாலை ஒன்று ஸாஹிறாக் கல்லூரி வீதியிலும், 01.03.1913இல் ஆரம்பிக்கப்பட்ட அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (தற்பொழுது அல்-ஹிலால் வித்தியாலயம்) பிரதான வீதியிலும் அமைந்திருந்தன.

கல்முனைக்குடியில் 1913ஆம் ஆண்டில் மிஸனரிப் பாடசாலையொன்று, சாய்வு வீதியில் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் 1919ஆம் ஆண்டில் ஜும்ஆப் பள்ளிவாசலின் வடக்குப் புறத்தில் பிரதான வீதிக்கு அது மாற்றப்பட்டது. பின்னர் 1930ஆம் ஆண்டில் அரசினால் கல்முனைக்குடி 3ஆம் குறிச்சியில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதும் அந்த மிஷனரிப் பாடசாலை இப்பாடசாலையுடன் இணைக்கப்பட்டது. (தற்பொழுது அப்பாடசாலை அல்-அஷ்ஹர் வித்தியாலயம் என அழைக்கப்படுகிறது).

மேற்கண்ட கலவன் பாடசலைகளில் பெண்கள் கல்வி கற்க விரும்பாததன் காரணமாக, பெண்களுக்கென்று தனிப் பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்று கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் எண்ணி, அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

சம்மாந்துறை. நிந்தவூர், கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மருதமுனை போன்ற கிராமங்களில் உள்ள ஜும்ஆப் பள்ளிவாசல்களுக்கு கல்முனை முஸ்லிம் சங்க முன்னோடிகளுடன் சென்று ஜும்ஆ தொழுகைக்குப் பின் கல்வி கற்பதன் அவசியம் பற்றிப் பிரச்சாரங்களையும் மேற்கொண்டார்.

### பெண் பாடசாலைகள் நிறுவுதல்

பெண்களின் கல்வியில் கூடிய அக்கறை கொண்டிருந்த கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர், பெண்களுக்கென்று தனிப்பாடசாலைகளை ஆரம்பித்தார்.

சாய்ந்தமருதில் 1928இல் அரசினர் முஸ்லிம் பெண்கள் பாடசாலை (தற்பொழுது ஜி.எம்.எம்.எஸ். பாடசாலை), கல்முனைக்குடியில் 02-04-1936இல், அரசினர் முஸ்லிம் பெண்கள் பாடசாலை (தற்பொழுது அஸ்-ஸுஹறா வித்தியாலயம்), மருதமுனையில் 01-01-1940இல் அரசினர் முஸ்லிம் பெண்கள் பாடசாலை (தற்பொழுது அல்-ஹம்றா வித்தியாலயம்) ஆகிய பாடசாலைகள் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் முயற்சியால் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இக்காலகட்டத்தில் நீலாவணை தமிழ் பிரதேசத்திலும் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (தற்பொழுது விஷ்ணு வித்தியாலயம்) ஒன்றும் அவரால் ஆரம்பிக்கப்பட்டது.

கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்கள் மேற்குறிப்பிட்ட பாடசாலைகளை ஆரம்பித்திருக்காது விட்டிருந்தால், பெண்கல்வி பற்றி சமூகத்தில் நிலவிய எதிர்க்கருத்துக்கள் காரணமாக நமது பிரதேச பெண்களின் கல்விநிலை பெரும் பின்னடைவைக் கண்டிருக்கும்.



### ஆசிரிய பயிற்சிக் கல்லூரியும், மாவடிப்பள்ளி கலவன் பாடசாலையும்

மிஷனரிகளால் மட்டக்களப்பிலும், அரசினால் கோப்பாயிலும் தமிழ்மொழி மூல ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் அமைந்திருந்தாலும், முஸ்லிம்கள் ஆசிரியர் பயிற்சிக்காக அங்கு செல்வதில் பல சிரமங்களையும், சிக்கல்களையும் எதிர்நோக்கி வந்தனர். இதனை உணர்ந்த கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர், தென்கிழக்கிலும் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இவரது இக்கோரிக்கை சேர் ராசிக் பரீட் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அவர் மூலம் அரசுக்கும் அழுத்தம் கொடுக்கப்பட்டது. அதனால் 01.11.1941ஆம் ஆண்டில் அரசு, அட்டாளைச்சேனையிலும், அழுத்கமையிலும் இரு ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளைச் சமகாலத்தில் நிறுவியது.

கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் முயற்சியினால் மாவடிப்பள்ளியிலும் 25.06.1945இல் அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை (தற்பொழுது அல்-அஷ்ர.்.ப் மகா வித்தியாலயம்) ஆரம்பிக்கப்பட்டது.

### பாராளுமன்ற அங்கத்துவம் பெற்றபின் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள்

சோல்பரி அரசியல் திட்டத்தின் அடிப்படையில் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் 1947ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கல்முனைத் தொகுதியில் ஐக்கிய தேசிய கட்சி சார்பாக போட்டியிட்டுத் தெரிவானார். தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்கிய கல்முனைக்குடி மக்களின் வேண்டுகோளைக் கருத்தில் கொண்டு, கடற்கரைப் பள்ளிவாசலுக்கு அண்மையில், 1948ஆம் ஆண்டு ஜுன் 25இல் அரசினர் தமிழ் கலவன் கடற்கரைப் பாடசாலை (தற்பொழுது அல்-பஹ்றியா மகா வித்தியாலயம்) என்னும் பெயரில் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார்.

அக்கரைப்பற்றிலும், நிந்தவூரிலும் 1946இல் அரசு நிறுவிய ஆங்கில கனிட்ட பாடசாலைகள் (English Junior School) போன்று சாய்ந்தமருதிலும், சம்மாந்துறையிலும் ஆங்கில கனிட்ட பாடசாலைகள் நிறுவப்படுவதற்கான முயற்சியில் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஈடுபட்டு, 1948 ஏப்ரல் மாதம் கல்வி அமைச்சர் மேஜர் ஈ.ஏ. நுகவல அவர்களை வரவழைத்து சாய்ந்தமருதிலும், சம்மாந்துறையிலும் மகத்தான வரவேற்புகளை அளிக்கச் செய்தார்.

அதன் பயனாக, கல்வி அமைச்சர் அளித்த வாக்குறுதியின்படி 16.11.1949இல் சாய்ந்தமருதில் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் அன்பளிப்பாக வழங்கிய காணியில், ஆங்கில கனிட்ட பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்பாடசாலை தற்பொழுது பிரபலம்பெற்று, "ஸாஹிறாக் கல்லூரி" என்னும் பெயரில் விளங்குகின்றது. இத்தகைய ஒரு பாடசாலை 01.03.1950இல் சம்மாந்துறையில் பள்ளிவாசல் அளித்த காணியில் ஆரம்பிக்கப்பட்டது.

இப்பொழுது அப்பாடசாலை "சம்மாந்துறை தேசிய கல்லூரி" என்னும் பெயரில் பிரபலம்பெற்று விளங்குகின்றது.

மேலும், 01.09.1950இல் சம்மாந்துறையில் கருவாட்டுக்கல் அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை (தற்பொழுது சம்மாந்துறை அல்-மர்ஜான் மத்திய கல்லூரி) கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சாய்ந்தமருதிலும் இரண்டு பாடசாலைகள் அவரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஒன்று 01.05.1951இல் வடக்கு அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை. (தற்பொழுது அல்-ஜலால் வித்தியாலயம்)

மற்றொன்று 01.04.1952இல் தெற்கு அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை. (தற்பொழுது மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயம்)



கல்முனைக்குடியிலும் 27.07.1959இல் ஒரு பாடசாலை அவரது சொந்தக் காணியில் கல்முனைக்குடி தெற்கு அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை (தற்பொழுது அல்-மிஸ்பா மகா வித்தியாலயம்) என்னும் பெயரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

01-09-1959ல் ஒரே நாளில் பல ஊர்களிலும் ஆறு பாடசாலைகள் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

01. சாய்ந்தமருது 2ஆம் குறிச்சியில் அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை (தற்பொழுது றியாலுல் ஜன்னா வித்தியாலயம்).

02. சாய்ந்தமருது 1ஆம் குறிச்சியில் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை (தற்பொழுது அல்-கமறுன் வித்தியாலயம்).

03. மருதமுனை கிழக்கு அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை (தற்பொழுது ஸம்ஸுல் இல்ம் மகா வித்தியாலயம்).

04. மருதமுனை ஆலையடி அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை (தற்பொழுது அல்-மனார் மகா வித்தியாலயத்துடன் இணைந்த அதன் ஆரம்பப் பாடசாலை).

05. பெரிய நீலாவணை அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை (தற்பொழுது புலவர் ஆ.மு. சரிபுத்தீன் வித்தியாலயம்).

06. பாண்டிருப்பு அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை (தற்பொழுது அல்-மினன் முஸ்லிம் வித்தியாலயம்).



## கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் முயற்சியினால் உருவாக்கப்பட்ட கல்விக் கூடங்கள் (ஒரே பார்வையில்)

| | ஆரம்பிக்கப்பட்ட பொழுது | | தற்பொழுது |
|---|---|---|---|
| 1 | 01-05-1928 | சாய்ந்தமருது அரசினர் தமிழ் பெண்கள் பாடசாலை | அ.ம.க. பாடசாலை G.M.M.S. |
| 2 | 11-01-1930 | கல்முனைக்குடி அரசினர் முஸ்லிம் தமிழ் பெண்கள் பாடசாலை | அல்-அஷ்ஹர் வித்தியாலயம் |
| 3 | 02-04-1936 | கல்முனைக்குடி அரசினர் தமிழ் பெண்கள் பாடசாலை | அஸ்-ஸுஹரா வித்தியாலயம் |
| 4 | 01-01-1940 | மருதமுனை தமிழ் பெண்கள் பாடசாலை | அல்-ஹம்றா வித்தியாலயம் |
| 5 | 1940 | நீலாவணை தமிழ் பெண்கள் பாடசாலை | விஷ்ணு வித்தியாலயம் |
| 6 | 01-11-1941 | அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை | |
| 7 | 25-05-1945 | மாவடிப்பள்ளி அரசினர் தமிழ் பெண்கள் பாடசாலை | அல்-அஷ்ரஃப் மகா வித்தியாலயம் |
| 8 | 25-06-1948 | கல்முனைக்குடி அரசினர் தமிழ் பெண்கள் பாடசாலை | அல்-பஹ்ரியா மகா வித்தியாலயம் |
| 9 | 16-11-1949 | சாய்ந்தமருது ஆங்கில கனிட்ட பாடசாலை | கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை |
| 10 | 01-03-1950 | சம்மாந்துறை ஆங்கில கனிட்ட பாடசாலை | சம்மாந்துறை தேசிய பாடசாலை |
| 11 | 01-09-1950 | சம்மாந்துறை கருவாட்டுக்கல் அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை | சம்மாந்துறை அல்-மர்ஜான் மத்திய கல்லூரி |
| 12 | 01-05-1951 | சாய்ந்தமருது வடக்கு அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை | அல்-ஜலால் வித்தியாலயம் |
| 13 | 01-04-1952 | சாய்ந்தமருது தெற்கு அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை | மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயம் |
| 14 | 27-07-1959 | கல்முனைக்குடி தெற்கு அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை | அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயம் |
| 15 | 01-09-1959 | சாய்ந்தமருது 2ம் குறிச்சி அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை | றியாலுல் ஜன்னா வித்தியாலயம் |
| 16 | 01-09-1959 | சாய்ந்தமருது 1ம் குறிச்சி அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை | அல்-கமறுன் வித்தியாலயம் |
| 17 | 01-09-1959 | மருதமுனை கிழக்கு அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை | ஸம்ஸுல் இல்ம் முஸ்லிம் மகா வித்தியாலயம் |
| 18 | 01-09-1959 | மருதமுனை ஆலயடி அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை | அல்-மனார் ஆரம்பப் பாடசாலை |
| 19 | 01-09-1959 | பெரிய நீலாவணை அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை | புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் வித்தியாலயம் |
| 20 | 01-09-1959 | பாண்டிருப்பு அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை | அல்-மினன் முஸ்லிம் வித்தியாலயம் |

கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் 1956இல் நடைபெற்ற 3வது பாராளுமன்றத் தேர்தலில், வெற்றிபெற்று, அரசாங்கக் கட்சியில் சேர்ந்து நீதி அமைச்சின் உதவி மந்திரியாகப் பதவியேற்றார். அந்த அரசாங்கத்தில் கல்வி அமைச்சராகப் பதவிவகித்த திரு. டபிள்யு. தஹநாயக்கா அவர்களின் மூலமாக, அகில இலங்கை ரீதியாக முஸ்லிம்களுக்கு இருந்த கல்விப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சியில் ஈடுபட்டார்.

அவர் கல்வி மந்திரியைச் சந்தித்து தீர்வு கண்ட பின்வரும் பிரச்சினைகள் சம்பந்தமாக தினகரன், வீரகேசரி, *Morning Times* போன்ற தினசரிப் பத்திரிகைகள், அக்காலகட்டத்தில் செய்திகளை வெளியிட்டிருந்தன. அவை கீழே தரப்படுகின்றன.

01. 1958இல் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் S.S.C. பரீட்சையில் தமிழ்மொழி உட்பட 3 திறமைச் சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும் என்ற விதி பின்பற்றப்பட்டது. இந்தவிதி, கல்வியில் பின்தள்ளப்பட்டுள்ள முஸ்லிம் மாணவர்களுக்குத் தற்போது பாதகமாக அமைந்துள்ளது என்றும், இதனால் 21 மாணவர்கள் ஆசிரிய கலாசாலைப் பிரவேசத்தை இழந்துள்ளார்கள் என்றும் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் கல்வி மந்திரியிடம் சுட்டிக்காட்டியதன் காரணமாக, முஸ்லிம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதில் அவ்விதி நீக்கப்பட்டு அதனால் 21 மாணவர்களும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு அனுமதிக்கப்பட்டனர்

02. கல்முனைப் பிரதேசத்தில் உள்ள அரசாங்க முஸ்லிம் ஆண்கள் பாடசாலைகளில் மேல்வகுப்புக்கள் வைப்பதற்கான அனுமதியும், கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் வேண்டுகோளுக்கிணங்க கல்வி மந்திரியினால் வழங்கப்பட்டது.

## ஜனாப் எம். எஸ். காரியப்பரின் புகார்

கேட் முதலியார் ஜனாப் காரியப்பர் முஸ்லிம் மாணவர்களின் ஆசிரிய கலாசாலைப் பிரவேசத்திற்கு எஸ். எஸ். ஸி. பரீட்சையில் 3 விசேட சித்திகளைக் கோருவது அதிக பாதகமாக இருக்கிறதென்ற விஷயத்தைக் கல்வி மந்திரியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். இவ்வருடம் 21 மாணவர்கள் இத்திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஜனாப் காரியப்பர் கூறினர். கல்வியில் பிற்போக்கான முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் குறித்த உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டுமென்று அவர் வற்புறுத்தினர். கல்வி மந்திரி ஜனாப் காரியப்பரின் கோரிக்கையை ஏற்று குறித்த தடையை நீக்கும்படி உத்தரவிட்டார்.

அரசாங்கப் பாடசாலைகள் சிலவற்றில் உயர்தர வகுப்புக்களை நடத்துவதற்கு கல்வி இலாகாவிலுள்ள சில அதிகாரிகள் அந்தரங்கமாக முட்டுக்கட்டைபோடுகின்றனர் என்று ஜனாப் காரியப்பர் கூறிய மற்றொரு புகாரைத் தான் விசாரிப்பதாகக் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

கல்முனைக்கு அரசாங்க முஸ்லிம் ஆண்கள் பாடசாலையில் மேல் வகுப்புக்கள் ஆரம்பிக்க அமைச்சர் அனுமதி அளித்தார்.

(தினகரன் 29-01-1958)

03. S.S.C. பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தி பெற்றவர்களையே பாடசாலைகளுக்கு ஆங்கில உதவி ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்னும் விதி, முஸ்லிம் பாடசாலைகளுக்கு ஆங்கில உதவி ஆசிரியர்கள் நியமிக்கப்படும் பொழுது கடைப்பிடிக்கப்படக் கூடாது என்று கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் கல்வி அமைச்சருக்கு விடுத்த வேண்டுகோள், அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சாதாரண சித்தியை ஆங்கிலப் பாடத்தில் பெற்றவர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டன.

04. நியமனம் கிடைத்து ஒரு மாதத்திற்கும் குறைந்தகாலம், கற்பித்தல் சேவையில் இருக்கும் முஸ்லிம் ஆசிரியர்கள், அச்சேவையில் ஒருவருட காலத்தைப் பாடசாலையில் பூர்த்தி செய்த பின்னரே ஆசிரிய கலாசாலைக்கு அவர்களை அனுமதிக்க வேண்டும் என்று கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரால் விடுத்த வேண்டுகோளும் கல்வி அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

—(:)—

## கல்வி மந்திரியின் புதிய உத்தரவு

முஸ்லிம் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படும் ஆங்கில உதவி ஆசிரியர்கள் ஆங்கிலத்தில் விசேஷ சித்திபெற்றவர்களாக இருக்கவேண்டியதில்லை. சாதாரண தேர்ச்சியுடையவர்களாக இருந்தால் போதுமானதென்றும் கல்வி மந்திரி திரு. டபிள்யு. தஹநாயகா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கல்முனை எம். பி. கேட் முதலியார் காரியப்பரின் வேண்டுகோள் ஒன்றுக்கிணங்கவே திரு. தஹநாயகா மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார்.

ஜனாப் காரியப்பர் நேற்று கல்வி மந்திரியை சந்தித்து கல்வித் துறையில் முஸ்லிம்களின் உடனடியான தேவைகள் சிலவற்றை எடுத்துரைத்தார்.

எஸ். எஸ். ஸி. தராதரமுள்ள வாலிபர்களைக் கட்டுப்படுத்தும் விசேஷ தேர்ச்சி சம்பந்தப்பட்ட சட்ட விதி தேவைக்கு அதிகமாக உள்ள ஆசிரியர்களை பொறுத்தவரையில் நல்லதுதானென்றும் ஆனால் தங்களுடைய பயிற்சிக் கல்லூரிகளுக்கும் பாடசாலைகளுக்கும் தேவையான ஆசிரியர்களைப் போதியளவுக்குப் பெற்றுக்கொள்ளாத முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்த வரையில் அந்த விதி ஒரு தடைக்கல்லாக இருந்து வருகிறதென்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாப் காரியப்பரின் அடுத்த வேண்டுகோள் முஸ்லிம் பயிற்சிக் கல்லூரிகள் சம்பந்தப்பட்டதாகும். ஒரு மாதத்துக்கும் குறைந்த காலம் சேவையிலிருக்கும் ஆசிரியர்களை அவர்களின் ஒரு வருட காலத்தையும் பாடசாலைகளில் பூர்த்தி செய்த பின்னரே பயிற்சிக் கல்லூரிக்குச் செல்ல அனுமதிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

இது விஷயமாக பயிற்சிக் கல்லூரிகளுக்குப் பொறுப்பாயிருக்கும் அதிகாரியை அழைத்து கலந்தாலோசிக்கப்பட்டது. அதன்பின் கேட் முதலியார் காரியப்பரின் வேண்டுகோளை அனுமதிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

அளுத்கமை அரசாங்க முஸ்லிம் பெண்கள் பயிற்சிக் கல்லூரியில் குடும்ப சாஸ்திரமும் நாட்டியமும் கற்றுக் கொடுப்பதற்கு இரண்டு போதனாசிரியைகளை விரைவில் நியமிக்கவேண்டியதன் அவசியத்தையும் அவர் வற்புறுத்தினர்.

(வீரகேசரி 26-4-58)



கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஞாபகார்த்த நினைவு மலர்-2009

## *Minister grants Muslim's request*

Gate Mudaliyar M. S. Kariapper, M. P. for Kalmunai, called on Mr. W. Dahanayake, Minister of Education and placed before him a few of the urgent needs of the Muslims in the sphere of education.

Gate Mudaliyar Kariapper told the Minister that on a former occasion he had told him that the credit pass regulation binding S.S.C. qualified youths was really intended as an additional means of eliminating the large numbers of youths seeking admission into the training colleges or employment as Swabasha assistants. That was a good and wise regulation where the supply exceeded the demand.

But in respect of the educationally backward Muslim community which was not able to find the required quota for their training colleges or the teachers for their schools, that regulation was unwanted and actually imposes a handicap. The Minister was good enough to waive the regulation. (Morning Times 28-04-1958)

05. அளுத்கமை முஸ்லிம் பெண்கள் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் மனையியல், நாட்டியம் ஆகிய பாடங்களுக்கும் போதனாசிரியர்கள் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும் என்னும் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் வேண்டுகோள் கல்வி அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

06. 27-03-1958ல் பாடசாலைகளை இன ரீதியாக வகுப்பதற்காக தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும், மேல் சபை உறுப்பினர்களையும் கொண்ட ஒரு கூட்டம் கல்வி மந்திரியினால் கூட்டப்பட்டது. அவர்கள் முன்னிலையில் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் தனது கருத்துக்களைத் தெரிவித்தார். அதன்படி, 51 வீதமும் அதற்கு மேலும் எந்த இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்கின்றனரோ அப்பாடசாலை அந்த இனத்துக்குரிய பாடசாலையாகக் கணிக்கப்பட்ட வேண்டும் என அவர் கூறினார். கல்வி மந்திரி இவரது இக்கருத்தை ஏற்றுக்கொண்டு பாடசாலைகளைத் தமிழ் பாடசாலைகள், முஸ்லிம் பாடசாலைகள் என வகுத்துக் கொள்வதற்கு இணங்கினார். இதற்கு முன்னர் இந்த விகிதாசாரம் 75 வீதமாக இருந்தது.

07. S.S.C. பரீட்சையில் கணிதப்பாடம் உட்பட ஆறு பாடங்கள் சித்தி அடைந்தவர்களுக்கே நியமனங்கள் வழங்கப்பட்டு வந்தன. முஸ்லிம் பெண்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு இந்நிபந்தனை பாதகமானது என்பதை கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் எடுத்துக்காட்டியதன் காரணமாக, நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட காலத்திற்குள் கணிதப்பாடத்தில் சித்தியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் நிபந்தனையில் முஸ்லிம் பெண்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்குவதற்குக் கல்வி அமைச்சர் டபிள்யூ. தஹநாயக்கா ஏற்றுக்கொண்டு நியமனங்கள் வழங்கினார்.



08. அதிபர் வெற்றிடமுள்ள 150 முஸ்லிம் பாடசாலைகளுக்கும் அதிபர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்னும் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் வேண்டுகோளைக் கல்வி அமைச்சர் ஏற்றுக்கொண்டு, உடனடியாக நியமனங்களை வழங்கினார்.

### தேசிய அரசியலில் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர்

இலங்கை அரசாங்கம் "வன்னிமை" நிர்வாக முறையை பிரதேச இறைவரி உத்தியோகத்தர் (D.R.O) முறையாக மாற்றியமைத்ததன் காரணமாக, கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் 1946 ஜுலை 01இல் வன்னிமைப் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

1945ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த சோல்பரி ஆணைக்குழுவினர் மக்களால் தெரிவு செய்யப்படும் 95 பிரதிநிதிகளையும், நியமிக்கப்படும் 06 பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய பாராளுமன்ற ஆட்சி முறையைச் சிபாரிசு செய்தனர். அதன்படி, 1946இல் நியமிக்கப்பட்ட எல்.என்.டி.டி சில்வா என்பவரைத் தலைவராகக் கொண்ட தொகுதி நிர்ணய ஆணைக்குழுவின் சிபாரிசின்படி, கல்முனை, சாய்ந்தமருது, மாவடிப்பள்ளி, சம்மாந்துறை, காரைதீவு, இறக்காமம், வரிப்பத்தஞ்சேனை, அம்பாரை, தமண, உஹன ஆகிய ஊர்கள் கல்முனைத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டன.

இந்த அடிப்படையில் கல்முனைத் தொகுதிக்கான வாக்கெடுப்பு தினம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கல்முனைத் தொகுதியிலே உள்ள ஜும்ஆப் பள்ளிவாசல்களின் பரிபாலனசபைத் தலைவர்களும், ஏனைய மரைக்காயர்மார்களும், பிரதேச பிரமுகர்களும், சம்மாந்துறை மல்கம்பிட்டி பள்ளிவாசலில் 1947 முற்பகுதியில் ஒன்றுகூடி, நடைபெறப் போகும் தேர்தலில் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பருக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று முடிவு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து இலங்கையின் முதலாவது பாராளுமன்ற தேர்தலில் கல்முனைத் தொகுதிக்கான வாக்கெடுப்பு 15.09.1947இல் இடம்பெற்றது. அதில் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்கள், கல்முனைத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் தேசிய அரசியலில் பிரவேசித்தார்.

கௌரவ டி.எஸ். சேனநாயக்கா அவர்களைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, அரசாங்கத்தை அமைத்து, கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரை உள்நாட்டு கிராமிய அபிவிருத்தி உதவி அமைச்சராக நியமித்தது. அவரது பாராளுமன்ற பிரதிநிதித்துவ காலத்தில் முஸ்லிம்களுக்கு உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் பிரச்சினைகள், அவலங்கள் ஏற்படும்பொழுது, முஸ்லிம்களின் நல உரிமைகளுக்காகப் பாராளுமன்றத்தில் குரல்கொடுக்கின்ற முதல் நபராக அவர் விளங்கினார்.

## சுயஸ் கால்வாய் பிரச்சினை

சுயஸ் கால்வாயின் "போட் ஸெய்ட்" துறைமுகப் பகுதியி அமைந்திருந்த குடியிருப்புக்களை, பிரிட்டிஷ் படைகள் தாக்கி அழித்தபொழு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி அங்கத்தவராக இருந்த ஜனாப் A. அஸீ அவர்கள் பிரித்தானியாவின் செயலைக் கண்டித்து, பாராளுமன்றத்தில் கண்டன பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்து உரையாற்றினார். அப்பிரேரணை ஆமோதித்து, அரசாங்கத்தின் உதவி அமைச்சராக இருந்த கேற்முதலியா எம்.எஸ். காரியப்பர், ஆதரித்து சபையில் பேசினார்.

அக்காலகட்டத்தில் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த எந்தவொ முஸ்லிம் பிரதிநிதியும், மேற்படி பிரேரணையை ஆமோதித்து பேசுவதற் முன்வராத நிலையில், கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஆமோதித் உரையாற்றியமை அவரது அதீத சமூக உணர்வினை எடுத்துக் காட்டுவதா அமைந்தது. இதன் காரணமாக அவர் அரசாங்கத் தரப்பினர் கொண்டுவந் இவருக்கெதிரான விசாரணையொன்றினையும் எதிர்கொள் வேண்டியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்றத்தில் ஆலோசிக்கப்படுகின்ற அத்தனை விடயங்களிலு கொண்டுவரப்படுகின்ற பிரேரணைகள் எல்லாவற்றிலும், பங்குபற்றி, தன வாசிப்புத் திறனையும், பேச்சாற்றலையும், கேற் முதலியார் எம்.எஸ். காரியப் வெளிப்படுத்தியதன் காரணமாக அவர் அனைத்துத் தரப்பினரது பாராட்டுதலைப் பெற்று வந்தார்.

தீர்க்கதரிசனம் மிக்க ஆலோசனைகளையும், பெறுமதிமிக் கருத்துக்களையும், பேசியும், எழுதியும் வந்த கேற்முதலியார் எம்.எ காரியப்பர் சக உறுப்பினர்களதும், அரசாங்கத்தினதும் புகழ்ச்சியினைய தனதாக்கிக் கொண்டார்.

## கல்முனைப் பட்டினசபையில் காரியப்பரின் ஈடுபாடு

1952இல் இடம்பெற்ற பட்டினசபைத் தேர்தலில் போட்டியிட் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் கல்முனைப் பட்டினசபையின் தலைவரா பதவியேற்று, பல சிரமங்களுக்கு மத்தியில் கல்முனைப் பட்டினத்தை கட்டியெழுப்புவதில் அதிக சிரத்தை காட்டியதுடன் கூடிய வருமானத்தை பெறக்கூடிய ஒரு பட்டினசபையாகவும் அதனை உருவாக்கினார்.

01. கல்முனைப் பட்டினத்தைக் கட்டியெழுப்பி, மட்டக்களப்பு தெ பிரதேசத்தின் தலைநகராக்குவது அவரது குறிக்கோளாயிருந்தது.
02 காரியாலயமும், கூட்ட மண்டபமும் இணைந்ததாக நகர மண்டப ஒன்றைக் கட்டினார். தற்பொழுது, இக்கட்டிடத்தில் மாநகரசபை இயங் வருகின்றது.



03. கல்முனைப் பட்டினத்தில் அமைந்திருந்த பகிரங்க சந்தையையும், கல்முனைக்குடி சந்தையையும் இணைத்து கல்முனைச் சந்தையை ஒரு பிரபலமான சந்தையாக மாற்றியமைத்தார்.
04. நகரசபையின் மூலம், கல்முனைக்குடியின் தெற்கிலும், வடக்கிலும், இரு மாடி வீட்டுத் திட்டத்தினைக் கட்டி, வீடில்லாதவர்களில், தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அவற்றை வழங்கினார்.
05. இரண்டு (மையவாடி) அடக்கஸ்தலங்களுக்கும் சுற்றிவர மதில்களை அமைத்ததுடன், காவலாளிகளையும் நியமித்தார்.
06. மழை காலங்களில் வெள்ளம் ஏற்படும்போது, அந்நீரை கடலுக்குள் செலுத்துவதற்காக, வடிச்சல் வாய்க்கால் ஒன்று வெட்டப்பட்டு, 'நடராசா வாய்க்கால்' என்று பெயர் வைக்கப்பட்டது.
07. கல்முனைப் பட்டினத்திற்கு மின்சார வசதியையும் 'ஜெனரேட்டர்' மூலம் அவரே பெற்றுக் கொடுத்தார். அச்சமயத்தில் மெதடிஸ்ட் தேவாலயத்தில் மாத்திரமே மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

## பாராளுமன்றத் தேர்தல்களும் கேற்முதலியாரும்

1956இல் இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பாகப் போட்டியிட்டு, வெற்றிபெற்று, ஆறு மாதங்களின் பின்னர் அக்கட்சியில் இருந்து விலகி, அரசாங்கத்தை அமைத்திருந்த, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் கூட்டுக்கட்சியான எம்.ஈ.பி. கட்சியில் இணைந்து, உதவி நீதி அமைச்சராகப் பதவியேற்றார்.

26 செப்டம்பர் 1959இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா மரணம் அடைந்ததைத் தொடர்ந்து பிரதமரான டபிள்யூ. தஹநாயக்கா, கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரைத் தபால், கலாச்சார, சமூக சேவைகள் அமைச்சராக நியமித்தார்.

இலங்கையின் மூன்றாவது பாராளுமன்ற பிரதிநிதித்துவ காலத்தில், கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் பல பாடசாலைகளை ஆரம்பித்ததுடன், முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்குதற்குக் காரணமாக இருந்ததோடு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் முன்னேற்றத்திலும் கூடிய கவனம் செலுத்தினார்.

1960 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் டபிள்யூ. தஹநாயக்காவால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட எல்.பி.பி. (LPP) கட்சியின் சார்பாக தேர்தலில் போட்டியிட்டு கல்முனைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் தெரிவு செய்யப்பட்டார்.

எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை இன்மையால், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, 1960 ஜூலையில் மீண்டும் நடத்தப்பட்ட தேர்தலில் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர், தன்னால் ஆரம்பிக்கப்பட்ட "அகில இலங்கை இஸ்லாமிய ஐக்கிய முன்னணி" என்னும் கட்சியில் "உதயசூரியன்" சின்னத்தில் போட்டியிட்டு துரதிஸ்டவசமாகத் தோல்வியடைந்தார்.

1965இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்டு, வெற்றி பெற்ற கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் 1968 வரை பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தார்.

## கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் செய்த பொதுவான சேவைகள்

01. இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது 09.04.1942இல் பிரித்தானியக் கப்பல் திருகோணமலைத் துறைமுகத்தில் தரித்து நின்றிருந்தபோது ஜப்பான் குண்டுபோட்டு அதனைச் சேதப்படுத்தியது. இதனால் அரசு கரையோரப் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பருக்கு, அவசரகால பாதுகாப்பிற்கான அதிகாரங்களை வழங்கியது. அவர் பிரதேசத்தின் பாதுகாப்பிற்காகக் கடற்கரையோரங்களில், தகவல்களைப் பெறும் நோக்கில் எல்லைக் காவலாளிகளை சேவைக்கு அமர்த்தினார்.

    கரைவாகுப்பற்று பிரதேசத்தில் உள்ள, உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் வியாபார நிலையங்கள் அனைத்தும் மூடி சீல் வைக்கப்பட்டன. உணவுப் பொருள் தட்டுப்பாட்டைத் தவிர்க்குமுகமாக இந்நடவடிக்கையை மேற்கொண்டு, மக்களுக்கு ரேசன் அடிப்படையில் அப்பொருட்கள் வினியோகிக்கப்பட்டன. அவ்வாறான சேவைகளை உரியமுறையில் நடைமுறைப்படுத்துவதற்காக, கூட்டுறவுச் சங்கங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

02. சாய்ந்தமருது வைத்தியசாலையை கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் தனது சொந்தக்காணியை வழங்கி அதில் ஆரம்பித்து வைத்தார். அவ்வைத்தியசாலை சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பிரதான வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

03. கல்முனையில் பிரதான தபாலகக் கட்டிடம் அமைக்கப்பட்டு, தபாலகம் இயங்கியதுடன் அதன் தரமும் உயர்த்தப்பட்டது. மேலும், பல உப தபாலகங்களும் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் முயற்சியினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன.

04. மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர், பல நடவடிக்கைகளை மேற்கொண்டு தோணிகள், மீன்பிடி வலைகள், நூல் முதலிய பொருட்களை மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு வழங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

05. மீன்பிடியாளர்கள் மீனைப் பதப்படுத்திப் பாதுகாக்கும் உப்புக்குத் தட்டுப்பாடு நிலவியதன் காரணமாக, அதன்விலை அதிகரித்துக் காணப்பட்டது. இதனால் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் மீன்பிடியாளர்களுக்கு மானிய விலையில், சலுகை அடிப்படையில் உப்பினைப் பெற்றுக் கொடுத்தார்.



06. வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்துவந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்கு, குறைந்த வட்டி வீதத்தில் கடன்கள் பெறுவதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

## கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் பற்றி பிறரது கருத்துக்கள்

"The ISLAND" ஆங்கிலப் பத்திரிகையில் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் மறைவிற்குப் பின் 1989.04.28ஆம் திகதி A. KINSMGN என்பவர் எழுதிய *"The Profile an Ancient Muslim Family"* ***'ஒரு பழமைவாய்ந்த முஸ்லிம் குடும்பத்தின் வரலாற்றுப் பதிவுகள்'*** என்னும் விரிவான கட்டுரையில், கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் திறமை, மதிநுட்பம் என்பன பற்றி சட்டத்தரணி சி.எஸ். பார்குமாரகுலசிங்கம் Q.C. என்பவர் கூறிய கூற்றை மேற்கோள் காட்டுகின்றார்: "கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் பற்றி எனது அபிப்பிராயம் இதுதான். அவர் தற்பொழுது இலங்கையில் உள்ள அதிகூடிய மதிநுட்பம் வாய்ந்த நால்வருள் ஒருவராகும். அடுத்த மூவரும் ஸேர். ஒலிவர் குணதிலக (முன்னாள் இலங்கை கவர்னர் ஜெனரல்) சி. தியாகலிங்கம் Q.C. (முன்னாள் இலங்கையின் பிரதம நீதியரசர்) Dr. எமில் சவுந்திரநாயகம் (இலண்டனில் வங்கித் தொழில் புரிந்தவர்) என்று குறிப்பிடுகின்றார். மேலும், அவர் இரவுச் சாப்பாட்டின் பின்னர் (After Dinner Speech) மற்றவரை மகிழ்விக்கப் பேசுவதில் திறமையானவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

18.05.1989இல் Daily News பத்திரிகையில், கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் பற்றி, ஜிப்ரி ஹாசிம் என்ற ஊடகவியலாளர் குறிப்பிடுகையில், "கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் தான்வாழும் தேசத்தைப்பற்றி எப்பொழுதும் சிந்திப்பவராக இருந்தார். நான் முதலாவதாக ஒரு தேசியவாதி; இரண்டாவதாகவும் ஒரு தேசியவாதி; இறுதியாகவும் நான் ஒரு தேசியவாதி என்று உணர்பவர்" அவர் என்று கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் அனுதாபப் பிரேரணையில் கலந்து கொண்டு பேசிய திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி. தயாரத்ன "கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஆங்கிலப் புலமைவாய்ந்தவர்" என்றும், அவர் சிறந்த ஒரு "வாசகன்" என்றும் குறிப்பிட்டார்.

## முஸ்லிம்களுக்கென்று ஒரு அரசியல் கட்சி

இலங்கையில் முதன்முதலாக முஸ்லிம்களுக்கென்று ஒரு அரசியல் கட்சியை ஆரம்பித்த பெருமை கேற்முதலியார் அவர்களையே சாரும். 1960 ஜுலை இல் நடந்த தேர்தலில் கல்முனைத் தொகுதியில், இக்கட்சியின் சார்பாக உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டார்.

முஸ்லிம்கள் அரசியல் அனாதைகளாக இருப்பதனால் அவர்களுக்கென்று தனிப்பட்ட கட்சியொன்று தேவை என்பதையும், முகவரியல்லாத முஸ்லிம்களுக்கென்று ஒரு பிரதேசம், "இஸ்லாமிஸ் தான்" என்னும் பெயரில்

உருவாக வேண்டும் என்றும் அவர் எண்ணங் கொண்டிருந்தார். இதன்மூலம், இலங்கை முஸ்லிம்களது அரசியல் அபிலாசைகள் தொடர்பில் அவர் கொண்டிருந்த தெளிவான நிலைப்பாட்டையும், தூரநோக்கையும் எம்மால் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

இந்நோக்கங்களை அடைவதற்காகக் கட்சியை உருவாக்கிய அவரால் வெளியிடப்பட்ட கொள்கை விளக்கப் பிரசுரம் இதனைப் புலப்படுத்துகின்றது. அப்பிரசுரம் மறுபக்கத்தில் உள்ளது.

### "இஸ்லாமியத் தொண்டன்":

கேற்முதலியார் அவர்கள் தூரதிருஷ்டியான தனது சிந்தனைகளையும், தான் செய்துவரும் சமூகநலச் செயற்பாடுகளையும், மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக அடிக்கடி சிறு சிறு துண்டுப்பிரசுரங்களை வெளியிடுவது அவரது வழக்கமாக இருந்தது. அத்தோடு 'இஸ்லாமியத் தொண்டன்' என்னும் பத்திரிகையையும் வெளியிட்டார். எனினும் அப்பத்திரிகை நீண்ட நாட்களுக்கு நிலைத்திருக்கவில்லை. இதற்காக அவர் சொந்தமாக ஒரு அச்சகத்தினையே நடத்தி வந்தார்.

## கேற்முதலியாரின் இறுதிக்காலம்

கேற்முதலியார் ஓய்வு பெற்ற 1968ஆம் ஆண்டில் இருந்து அவர் நோய்வாய்ப்படும்வரை தனது புத்திக்கூர்மையையும், பேனாவையும், தட்டச்சு இயந்திரத்தையும் மக்களின் சேவையிலேயே ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்.

தன்னிடம் ஆலோசனையும், உதவியும் கேட்டு வருகின்ற பொதுமக்களின் பிரச்சினைகள், முறைப்பாடுகளுக்குச் செவிசாய்த்து அப்பிரச்சினையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான தனது பெறுமதியான செயற்பாடுகளை அவர் மரணிக்கும்வரை நிறுத்திக்கொள்ளவில்லை

அவர் தனது சேவைக்காலத்தின் இறுதிக்கட்டத்தில் பங்கு கொண்டு சிறப்பித்த நிகழ்ச்சி 1982.02.06ஆம் திகதி இடம்பெற்ற சாய்ந்தமருது வைத்தியசாலையின் பள்ளிவாசல் திறப்புவிழாவாகும். அவர் அன்பளிப்பாக வழங்கிய அக்காணியிலேயே வைத்தியசாலை அமைந்திருந்தது என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். இந்தப் பள்ளிவாசல் திறப்புவிழாவில் வைத்தியசாலைக்குப் பொறுப்பாக இருந்த அல்-ஹாஜ் டாக்டர் எம்.ஐ.எம். ஜெமீல் அவர்களின் அழைப்பின் பேரில் பிரதம அதிதியாக கேற்முதலியார் அழைத்து வரப்பட்டார். இதற்குப் பின்னர் அவர் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டதாகத் தெரியவில்லை.

1989 மே மாதம் 27ஆம் திகதி அவரை அல்லாஹ் தன்னிடம் அழைத்துக் கொண்டான். அல்லாஹு" சுபுஹானவுத்தஆலா அவருக்குச் சுவனத்தை அருள வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.



786

# முஸ்லீம்களுக்கோர் வரப்பிரசாதம்!

### இலங்கைச் சரித்திரத்தில் இதுதான் முதல் முறை!

# அகில இலங்கை இஸ்லாமிய ஐக்கிய முன்னணி

## அதன் சின்னம் சூரியன்

முஸ்லீம் சகோதரர்களே!

[illegible]

### அடிப்படை
### கட்சியின் நோக்கங்கள்

1. இலங்கை ஒன்பது மாகாணங்களிலும், பரந்து வாழும் இஸ்லாமியர்களை ஒன்று திரட்டி, இன்ஷாஅல்லாஹ் முஸ்லிம்களின் ஏகோபித்த ஒரே குரலைக்கொடுக்கும் ஒரு கட்டுப்பாடான இஸ்தாபனமாகக் கடமை புரிதல்.
2. எங்கள் மதாச்சாரம், கலாச்சாரம் அரசியல், பொருளாதாரம் போன்ற இன்னோரன்ன துறைகளில் அபிவிருத்தி ஏற்படுத்தி, நாட்டில் வாழும் ஏனைய சமுதாய மக்களுடன் சரிநிகர் சமானமாக வாழும் உரிமையை நிலைநாட்டுதல்.
3. இன்ஷாஅல்லாஹ் இஸ்லாமியர்களின் குடியியல், அரசியல் உரிமைகள் கடந்த காலத்தில் இழக்கப்பட்டதை மீட்டல், எதிர் காலத்தைப் பாதுகாத்தல்.
4. சர்வதேச முஸ்லீம் சமுதாயத்துடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி, அதன் மூலம் எங்களின் நிலைமையைச் சகல துறைகளிலும் வளர்த்தல்.
5. காலத்திற்குக் காலம், இலங்கையில் வாழும் ஏனைய சமுதாயங்களுடன் ஏற்படும் கடுத்த வேற்றுமைகளுக்கும், இன மத வேறுபாடுகளின் காரணமாக ஏற்படும் நெருக்கடியான சூழ்நிலைகளுக்கும் தகுந்த பாதுகாப்பை ஏற்படுத்தும் முகமாக, வாழ்க்கை நடத்தவும், எதிர் காலத்தில் ஓர் ஐக்கிய இலங்கை உருவாகவும் உழைத்தல். இக்கருத்து நிராகரிக்கப்பட்டு, சிங்கள வர்களுக்குச் சிங்கள நாடும் தமிழர்களுக்குத் தமிழ் நாடும் எனப்பிரிவினை ஏற்படின், "இஸ்லாமிஸ்தான்" எனும் முஸ்லிம் இராட்சியம் ஒன்றைப் பிரித்தெடுத்து இங்கு வாழ் சுமார் ஏழு லெட்சம் இஸ்லாமியர்களுக்கு ஒரு தாயகத்தை ஏற்படுத்திக் கொள்ளல்.

## தகவல்கள் வழங்கியோர்

01. அல்-ஹாஜ் M.M. காசிம் - ஓய்வு பெற்ற ஆசிரியர்
02. ஜனாப் M.M. காசிம்ஜி - ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்
03. அல்-ஹாஜ் டாக்டர் M.I.M. ஜெமீல் ஓய்வுபெற்ற வைத்தியர்

## உசாத்துணை:


01. "கிராமத்து இதயம்", அல்-ஹாஜ் S.H.M. ஜெமீல்
02. "Daily News", 18.04.1989, President's Message Mr. K.H.J. Wijayadasa.
03. "Daily News", 13.05.1958, Mr. Jiffry Hashim.
04. "Daily News", 09.04.1989, Condolence Speeches (Mr. Vincent Perera and P. Dayaratne)
05. "The Island", 28.05.1989, Article, M.A. KinsMGN (The Profile of an Ancient Muslim Family)
06. "தினகரன்", 29.08.1999, கட்டுரை, ஏ.எம். நிஹ்மத்துல்லா.
07. கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பரின் வெளியீடுகள்.
    அ) துண்டுப் பிரசுரம் - முஸ்லிம்களுக்கோர் வரப்பிரசாதம்
    ஆ) வெளியீடு - பாராளுமன்ற அங்கத்தவர் மாநாட்டு அறிக்கை
    இ) கல்முனைத் தொகுதி வாக்காளர்களுக்கு எனது வேண்டுகோள் - கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பரின் தேர்தல் விஞ்ஞாபனம்
08. ஈ) Chief Headman Chapter of Gate Mudaliyar M.S. Kariapper's Life.: By M.M. Mohamed


**கௌரவ தேச பிதா டீ.எஸ். சேனநாயக அவர்கள் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் திறமையில் நம்பிக்கை வைத்திருப்பவர். அவர் 1943-03-27ல் இடம்பெற்ற அறுவடை விழா, விவசாயக் கண்காட்சியை ஆரம்பித்துவைத்து உரையாற்றும்போது, "கேற்முதலியார் இலங்கையில் எப்பக்கத்தில் இருந்தாலும் தனது முத்திரையை பதிக்கத் தவற மாட்டார்" என்று குறிப்பிடப்பட்டார்.**
(Vide "The Ceylon Daily News" of 29-03-1943)



## கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பரின் வாழ்வில் முக்கிய நி...

| | |
|---|---|
| 1901-05-27 | பிறப்பு |
| 1918 | மெற்றிகுலேசன் பரீட்சையில் சித்தி |
| 1919 | விஞ்ஞான இடைநிலை வகுப்பில் கற்றல் |
| 1920-01-01 | வன்னிமை பயிற்சி நெறி |
| 1921-01-01 | பொத்துவில் பாணமைப்பற்று "மஹாபிட்டி" வன்னிமையாக பதவியேற்றல் |
| 1921 | குடிசன மதிப்பீட்டில் திறம்படச் செய்தமைக்கு கவர்னரின் பாராட்டு |
| 1921 | குற்றத்தடுப்பு, திடீர் மரண விசாரணை அதிகாரியாக மட்டக்களப்புப் பிரதேசத்துக்கு நியமனம் |
| 1927ல் | சம்மாந்துறை வன்னிமையாக நியமனம் |
| 1928ல் | திருமண பந்தத்தில் இணைதல் |
| 1931 | ஜே.பி. (J.P) யாக நியமனம் - மட்டக்களப்பு மாவட்டம் |
| 1932ல் | கரைவாகுப்பற்று, நிந்தவூர்ப்பற்று வன்னிமை |
| 1935 | 5ம் ஜோர்ஜ் மன்னனின் வெற்றிப்பதக்கத்தை வென்றார். |
| 1936 | கொலரா, கொள்ளைநோய்த் தடுப்புக்கு இவர் ஆற்றிய சேவைக்காக பாராட்டப்பட்டார். |
| 1938 மே | 6ம் ஜோர்ஜ் மன்னனின் பதக்கம் பெற்றரர். |
| 1938 ஜூன் | அரசனின் பிறந்த நாளில் இவர் கௌரவிக்கப்பட்டார். அவ்வாறு கௌரவிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் முதல் முஸ்லிம் வன்னிமை இவரார். |
| 1939 செப். | உத்தியோகப்பற்றற்ற நீதிவானாக நியமனம் (UM) |
| 1942 ஆகஸ்ட் | கல்முனை மாவட்ட கூட்டுறவுச் சமாசத்தின் தலைவர் - ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து இவர் தெரிவு செய்யப்பட்டார். |
| 1943-05-21 | நெல் ஆலோசனைச் சபையில் கிழக்கின் ஓர் ஆலோசகராக நியமனம் |
| 1943-06-15 | கல்வி ஆலோசனைக் குழுவின் அங்கத்தவராக நியமனம் |
| 1944-01-22 | விவசாய மத்திய சபையில் மட்டக்களப்பு பிரதிநிதியாக நியமனம் |
| 1944-03-19 | 33 கூட்டுறவுச் சங்கங்கள் கொண்ட சமாசத்தின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு. |
| 1944 ஜூன் | கேற் முதலியார் பட்டம் - முதலாவது முஸ்லிம். சரித்திரத்தில் முதல் முஸ்லிம் |
| 1946-07-01 | வன்னிமையிலிருந்து ஓய்வு |
| 1947 | கல்முனைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படல் (திறப்புச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி) |
| | உள்நாட்டு கிராமிய அபிவிருத்தி அமைச்சராக நியமனம் |
| 1952 | கல்முனை பட்டினசபை தலைவராகத் தெரிவு |
| 1952 | பாராளுமன்ற தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பாகப் போட்டியிட்டு தோல்வி |
| 1956 | பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டு வெற்றி அரசில் இணைந்து உதவி நீதி அமைச்சராக நியமனம் |
| 1959 | டபிள்யு. தஹநாயகவின் காபந்து அமைச்சரவையில் தபால், கலாச்சார, சமூகசேவை அமைச்சராக நியமனம் |
| 1960 மார்ச் | L.P.P. கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றி |
| 1960 ஜூலை | கேற்முதலியார் தான் அமைத்த கட்சியான "அகில இலங்கை இஸ்லாமிய ஐக்கிய முன்னணி"யில் போட்டியிட்டு தோல்வி |
| 1965 மார்ச் | சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி |
| 1968 | பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திலிருந்து ஓய்வு. |
| 1989 மே 27 | வபாத்தானார். இன்னாலில்லாஹி வஇன்னாஇலைஹி ராஜிஊன். அன்னாரை அல்லாஹ் ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவனத்தில் சேர்த்துக் கொள்வானாக! |





# கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர்

**தேசபந்து ஜெஸிமா இஸ்மாயில்**
B.A. (Cey), M.A. (McGill), D.P.TEFL (Sydney)

எனது மாமாவின் தனிப்பட்ட வாழ்க்கைப் பகுதியைப் பற்றித்தான் நான் எழுத முன்வந்தேனே தவிர பொது வாழ்க்கையைப் பற்றியல்ல. சிறுமியாக இருந்தபோது எனது மாமாவிடம் மிகவும் அன்பும் மரியாதையும் வைத்திருந்ததற்கு அவரை தனிப்பட்ட வாழ்வில் நன்றாக அறிந்ததே காரணமாகும். அவரது பொது வாழ்க்கை அரசியல் தேர்தல்களாலும், பொதுக் கூட்ட சொற்பொழிவுகளாலும், கோலாகலமான நிகழ்ச்சிகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. எனது நினைவில் கிழக்கிலங்கையைக் கட்டியெழுப்பிய நிபுணராகவும் தலைவனாகவும் திகழ்ந்த எனது மாமாதான் எனது கதாநாயகன். இதுவரை அவரது புத்திசாதுரியத்தையும், ஆங்கில மொழி அறிவினையும், பேச்சுவன்மையும் முஸ்லிம் சமூகத்துக்கு அர்பபணிப்புடன் செயற்பட்டு அவர்கள் பல்லின மக்களோடு கலந்து வாழ வேண்டுமென்ற எண்ணத்தை மனதில் கொண்டு அவர் மேற்கொண்ட பணிகளையும் மிஞ்சுவதற்கு வேறெவரும் இல்லை. யார் இந்த மாமா?

இவர் எனது தாயாரின் சகோதரர். எனது தாய் அவருக்கு மிகவும் நெருங்கிய சகோதரி. அன்புடன் நேசிக்கப்பட்ட சகோதரியாகும். எனது தாயின் வளர்ச்சியில் அவர் காட்டிய அன்புக்கு நிறைய அத்தாட்சிகள் உண்டு. எனது மாமா ஒரு பிரசித்தமான தனிப்பிறவி. எனது குடும்பம் அவரைப் பற்றி மிகவும் பெருமைப்பட்டது. அவர் எனது குடும்பத்தில் மிகவும் கண்ணியத்துடன் கூடிய அன்புடன் வரவேற்கப்பட்டார். எனது தந்தை கிழக்கிலங்கை முஸ்லிம்களில் மட்டுமல்ல முழு இலங்கை முஸ்லிம் சமூகத்தின் முதலாவது பொறியிலாளராகத் திகழ்ந்து, நாட்டின் நலத்தில் மிகவும் நாட்டங்கொண்ட அரச உத்தியோகத்தர்களின் சிறு வட்டத்தில் ஒருவராகவும் இருந்தார். அப்படியான அரச உத்தியோகத்தரை அந்தக் கால கட்டத்தில் அரசினர் நன்கு கவனித்து பேணினர். அரசாங்க உத்தியோகத்தருக்கு மட்டுமே அக்காலத்தில் கொடுக்கப்பட்ட வதிவிடங்கள்தான் இன்று பாராளுமன்றத்தின் மந்திரிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இவ்வாறான ஒரு பங்களாவில்தான் எங்கள் மாமாவின் விழாக்கள் இடம்பெற்றன. அவர் பாராளுமன்றத்திற்கு தெரிவானபோது எங்கள் வீட்டில்தான் அவரது தங்குமிடம். அவரது சகோதரியான எனது தாயார்தான் அவருக்கு

விருந்துபசாரம் செய்பவர். கல்முனையில் அவர் வெற்றி பெற்ற பாராளுமன்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை ஒழுங்குபடுத்தியவர் எனது தாயார்.

எங்கள் சாய்ந்தமருது வீடு அவரது மத்திய காரியாலயமாகச் செயற்பட்டது. ஒரு பழைமைவாய்ந்த உயர்குலத்தில், பரம்பரையில் பிறந்த எனது தாயார் தலையில் முக்காடிட்டு மிகவும் கண்ணியமாக, ஆளுமையுடன் ஆனால், சிறந்த எனது மாமாவின் தேர்தல் பிரச்சாரங்களை மேற்பார்வை செய்தார். இந்தப் பங்களிப்பு எனது தந்தைக்கு சில கஷ்டங்களைக் கொண்டு சேர்த்தது. அரவது உத்தியோகரீதியான குடியாட்சி அதிகாரிகள் ஒரு பொறுப்பு வாய்ந்த அரச உத்தியோகத்தரின் மனைவி அரச தேர்தல் பிரசாரங்களில் நேரடி பங்களிப்பு செய்வது அவ்வளவு பொருத்தமில்லை எனச் சுட்டிக் காட்டினர். அதற்கு எனது தந்தையின் வாதம் இப்படி அமைந்தது. ஒரு முஸ்லிம் பெண்ணுக்கு தனது சொந்தப் பெயரைப் பேண உரிமை இருப்பதுபோல, தன்னுடைய அலுவல்களைக் கொண்டு நடாத்தவும், தனது சொத்துக்களைப் பரிபாலனம் செய்யவும் உரிமை உள்ளது எனக் கூறினார். இந்த உரிமையைப் பயன்படுத்தி எனது தாயார் தனது சகோதரரின் நல்லது-கெட்டது இரண்டிலும் அவருடன் துணை நின்றார். இன்றும்கூட எனது மாமாவிற்கு கேற் முதலியார் பட்டம் சூட்டப்பட்டது நினைவிலிருக்கிறது. தங்கச் சரிகை கரையிட்ட நீண்ட வெள்ளை அங்கியுடன் பல பதக்கங்களுடன் எனது மாமா உன்னதமாக, கண்ணியமாகக் காட்சியளித்தார்.

இதில் புதுமையென்னவென்றால், அவர் உயரம் குறைந்தவர். சுற்றுவட்டத்தில் பருமன் கூடியவர். ஆயினும், அரவது மரியாதைக்குரிய, கண்ணியமான தோற்றம் ஒரு இராஜ தோற்றமாக அமைந்திருந்தது. நாங்கள் மூன்று சகோதரிகளும் அவரது உன்னத தோற்றத்தைக் கண்டு பூரிப்படைந்ததோடு அவரது பணிகளை மேற்கொள்ள வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவும் மிகவும் உற்சாகமாக முன்னின்றோம். எனது மாமா ஒருபோதும் சும்மா இருந்ததில்லை. எப்போதும் வேலைதான். ஒன்றுமில்லையாயின் எங்கள் வீட்டு முன்வாசலில் முன்னும் பின்னும் நடந்துகொண்டே இருப்பார். அவரது நடைகூடப் புதுமையும், விசித்திரமுமானது. முழு ஆடைகளுடன் ஒரு துருக்கித் தொப்பியும் அணிந்து கொண்டே திடீரென ஓரிடத்தில் ஐந்து நிமிடம் நிற்பார். நின்றபடியே நித்திரை செய்வார். கண்ணை மூடிக்கொள்வார். மீண்டும் பழையபடி தனது நடையைத் தொடங்குவார்.

நான் அவரை கிழக்கிலங்கையைக் கட்டியெழுப்பிய நிபுணரெனக் கூறினேன். சில பணிகள் பற்றிக் குறிப்பிடுகிறேன். அவர் பாராளுமன்ற உறுப்பினராகவும் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும் செயற்பட்டார். இரவது சேவைகளை ஒருவர் மதிப்பீடு செய்தால் அவரது பணிகளின் பரந்த



தன்மையையும் சலிப்பின்றி அர்ப்பணிப்புடன் பணிபுரியும் பண்பும் அவரை ஒரு மாமனிதனாக தோன்ற வைக்கின்றன.

பாணமபற்றுவின் முதலியாராகவும் சம்மாந்துறைப்பற்று, வேகமப்பற்று, கரைவாகுப்பற்று போன்றவற்றின் பிரதான தலையாளியாகவும் பாராளுமன்ற அங்கத்தவராகவும் இரண்டு மந்திரிகளின் பாராளுமன்ற காரியதரிசியாகவும் (1947ல் உள்விவகார, கிராமிய அபிவிருத்தி அமைச்சின் பாராளுமன்ற காரியதரிசியாகவும், 1959ல் நீதி அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசியாகவும்) கடமையாற்றினார். 1960ல் தபால், கலாசார, சமூகசேவை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். இவையெல்லாம் இவருக்குக் கிடைத்த பதவிகள். ஆனால் எம்மைக் கவர்ந்தது அன்னாரது அளப்பரிய அர்ப்பணிப்பும் கிழக்கிலங்கைக்கு இவர் அயராது ஆற்றிய சேவைகளும் ஆகும்.

கல்லோயாத் திட்டமானது பலர் மனதிலும் டீ.டிஸ்.. சேனநாயகவுடன் மட்டும் தொடர்புபடுகின்ற போதிலும் அதில் ஒரு பகுதி எம்.எஸ். காரியப்பரின் முயற்சியாகும். சமூகத்தினர் அவரைப் பெரிதும் பாராட்டிய காரணம் என்னவென்றால் மாகாண ரீதியான வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் அவர் காட்டிய ஆர்வமும் அர்ப்பணிப்புமாகும். மற்றும் விவசாயத்துறையில் அவர் கொண்டுவந்த திருத்தங்கள் ஒரு பெரிய சரித்திர சம்பவமாகும். கிழக்கிலங்கையின் தந்தையும் தாயுமாக இருந்து கேற் முதலியார் செய்த சேவைகளை வேறு யாராலும் மிஞ்சமுடியாது. உண்மையில் அவர் பிறந்த இடத்தின்மீது இருந்த பற்றினால்தான் என்று எனது மனதில் பதிந்துள்ளது. தனது கடைசிக் காலங்களில் அவர் மிகவும் நேசித்த கடற்கரையில் தளபாடங்கள் அதிகமற்ற ஒரு வீட்டில், மிகவும் பத்திரமாகப் பேணிக்காத்த புத்தகங்களின் மத்தியில் காலம் போக்கினார். அண்மையில் ஏற்பட்ட சுனாமி அவரது வீடு, புத்தகங்கள் அனைத்தையும் அள்ளிச் சென்றாலும் அவரது நிலை கையற்றுப் போகவில்லை.

ஏனெனில், அவரது நினைவுகள் எம்மைச் சுற்றி வாழ்கின்றன. அவருடைய வயதுடன் அவரது பணிகளும் அருகத் தொடங்கின. ஆயினும் அவர் மக்களிடம் கொண்டிருந்த கரிசனை அவர்கள் தொடர்ந்தும் தமது பிரச்சினைகளைக் கூறுவதற்கு அவரிடம் வந்தனர். கடிதங்கள் எழுதுவதிலும் மிகவும் வல்லவர். எந்தவொரு விடயமும் செயற்படுத்த வேண்டுமாயின் உடனடியாகக் கடிதத்தில் அதிகாரிகளுக்கு தெரிவித்து விடுவார். நாவல் மற்றும் பச்சை நிற மையினாலும் அழகாக ஆற்றொழுக்குப் போன்ற பெரிய எழுத்துக்களால் எழுதப்படுகின்ற கடிதங்கள் என்னால் மறக்க முடியாதது. அவர் எனக்குக் கடைசியாக எழுதிய கடிதம் நான் அரசியலில் அவரது அடிகளைப் பின்பற்றாதது பற்றி இலேசாகக் கடிந்து எழுதிய கடிதம் எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. உங்களை பாராளுமன்றத்தில் முதலாவது முஸ்லிம் பெண்ணாக வர வேண்டும் என

விரும்பினேன். நீங்கள் அந்தப் பாதையில் இருந்து விலகி விட்டீர்கள். இதுதான் அவர் எழுதியது. எனக்கும் அரசியல் மிகவும் விருப்பமான விடயமாகவே இருந்தாலும் எனது தந்தை, தாய் பின்பு எனது கணவராலும் அந்த விருப்பம் என்னை ஆட்கொள்ள முன்பே அந்த விருப்பத்தை முளையிலேயே கிள்ளிவிட்டனர்.

எனது குடும்பம் அவரைப் பற்றி மிகவும் பெருமைப்பட்டது. எனது தாயார் அவரிடம் மிகவும் பாசத்துடன் இருந்தார். அரவது கண்ணில் சத்திரசிகிச்சை நடந்தபோது ஒரு ஆஸ்பத்திரியே புள்ளர்ஸ் ஒழுங்கை வீட்டிற்கு மாற்றப்பட்டது. அவருக்கென ஒரு பணியாள் விடப்பட்டிருந்தாலும் எனது தாயார் பக்கத்திலிருந்து இரவுபகலாக அவருக்கு உணவு கொடுப்பதில் இருந்து உடுப்புக் கழுவுதல் வரை கவனித்துக் கொண்டார். இவ்வளவு பிரியமான சகோதரியை நான் கண்டதில்லை. கேற் முதலியாராகப் பட்டம் பெற்றபோது, அவரது பாட்டனின் தந்தைக்கு கண்டி அரசன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கவினால் வழங்கப்பட்ட வாளை எனது மாமாவுக்கு என் தாயார் தான் பெருமிதத்துடன் கையளித்தார். அன்று சாயங்காலம் நடந்த விழாவினை எவ்வளவோ சிரமம் எடுத்து என் தாயார் நடாத்தி முடித்தார்.

அவர் இவை அனைத்துக்கும் ஏற்புடையவரே. தனக்குச் சொந்தமான பல பரப்பு நிலங்களை அவர் ஏழைகளுக்கு தானமாகக் கொடுத்தார். இன்றும் அவர்கள் அந்நிலங்களில் வாழ்கின்றனர். கிழக்கிலங்கையில் கல்வியைத் தரமுடையதாக்க பல முயற்சிகள் செய்தார். பல பாடசாலைகளையும், மதரஸாக்களையும் பள்ளிவாசல்களையும் அம்பாரை மாவட்டத்தின் முழுப் பரப்பிலும் ஏற்படுத்தினார். விவசாயம், கல்வி ஆகிய அனைத்துத் துறைகளையும் கிழக்கிலங்கை மக்களுக்காக விருத்தி செய்து அவர்களுக்கு உழைப்பதில் அவர் தனது வாழ்வில் மகிழ்சி கண்டார்.

அவர் தனது தாயாரிடம் மிகவும் மிகவும் அன்பு காட்டினார். ஒவ்வொரு நாளும் அத்தாயாரைச் சென்று பார்வையிடுவார். இந்தப் பராமரிப்பை அவரது மனைவியிடம் மாற்றிக் கொடுத்ததிலிருந்து அவரும் ஒரு அன்பான மருமகளாக நடந்து கொண்டார். இவரது குடும்பமும், மக்களும் அவரை கிழக்கிலங்கையிலேயே கட்டிப் போட்டனர். அதனால் பாக்கிஸ்தானுக்கு வெளிநாட்டுத் தூதுவராக நியமனம் கிடைக்கப் பெற்றபோதும் இலங்கையிலிருந்து வெளியே ஒரு அடிகூட எடுத்து வைக்க மறுத்து விட்டார்.

அவர் எனது குடும்பத்துடன் கொண்டிருந்த தொடர்பு பற்றி எத்தனையோ பக்கங்கள் எழுத முடியும். இவர் எனது தந்தையை மிகவும் கௌரவமாக நடாத்துவார். அதனால் எமது அனைத்து விசேடங்களிலும் கலந்து கொள்வார்.



எனது மூத்த சகோதரியின் நண்பியிடம் பாக்கர் 51 பேனா இருந்தது. அவ்வாறான ஒன்று எனது சகோதரியிடம் இல்லாதிருப்பதைக் கண்டு உடனடியாக தனது ஷேர்ட் பொக்கற்றில் இருந்த பாக்கர் 51ஐ எடுத்து எனது சகோதரிக்குத் தந்தார். சிறு விடயம்தான். எனினும் ஒரு பருவ வயதுப் பிள்ளைகளின் மனநிலை எவ்வாறு இருக்கும் என்பதை உணர்ந்திருந்தார் என்பதுதான் இங்கு முக்கியம். எனது சகோதரி எங்கள் குடும்பத்தில் முதல் ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்த போது தங்கத்தை பாலில் இட்டு ஊட்டியது எங்கள் மாமாதான்.

அவர் மக்கள் சேவையிலும், அரசியலிலும் மகா வலிமை பெற்றவராகக் காணப்பட்டாலும் சில சிறு விடயங்களுக்கு சிறுபிள்ளை போன்று நெகிழ்ந்து விடுவார். உதாரணமாக எனது மூத்த சகோதரி பிரித்தானியா புறப்பட்டபோது மாமாவின் கண்களில் கண்ணீர் நிறைந்தது. இவர் ஒரு மகா மனிதர். இவருடைய தரத்திற்கு யாரும் உயர முடியாது. அதுவும் அரசியலில் இவர் அளவுக்கு யாருமில்லை. புத்திக்கூர்மையுடையவர். வாசிப்பதில் பேரார்வம் கொண்டவர். சலியாத உழைப்பாளி. இளைப்பாறிய பின்னரும் மக்கள் தங்கள் பிரச்சினைகளை இவரிடம் குறையிட்டுக் கொள்வர்.

புத்தகங்களால் நிரப்பப்பட்ட தனது புத்தகசாலையில் வாசித்துக் கொண்டிருக்கும்போது எப்போதும்போல அழகாக உடையணிந்து கடைசி நரைமுடி வரை கறுப்பாக்கி தனது வலிமையை எண்பது தொடக்கம் தொண்ணூறு வயதுகளிலும் வெளிக்காட்டினார். அவரைப் பற்றி எழுதுவதாயின் கட்டுத்தாள்கள் எழுதலாம். ஆனால் இவர் விசேடமான ஒரு தனிப் பிறவி. ஒரு பெரிய சமுத்திரத்தின் சிறு அலையாக இருக்கலாம். ஆயினும் சமூகத்துக்கு அவர் செய்த சேவையும் அவரது அரசியல் தமைலைத்துவமும் அவரை என்றும் நிலைத்திருக்கச் செய்துவிட்டன. சமூகத்து சேவை செய்யும் அர்ப்பணிப்பையே அவர் தனது வாழ்வில் இலக்காகக் கொண்டு செயலாற்றியவர். தன்னையே தனது சமுமுகத்தின் ஒரு அங்கமாக மாற்றி அதற்குள் சங்கமமாகி அந்த சமூகத்தின் சரித்திர மேம்பாட்டின் ஒவ்வொரு அம்சத்திலும் அவர் இருக்கின்றார்.

நாம் இறந்தவற்றை உயிர்ப்பிப்போம். அவர்கள் தமக்கு முன் அனுப்பியவற்றை பதிவு செய்வோம். அவர்களின் பாதச் சுவடுகள் சென்ற பாதைகளையும் பதிவு செய்வோம். எல்லாம் அங்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. (சூரா யாஸீன்)

மாமா உங்கள் திருப்பணிகள் உங்கள் குடும்பத்திற்கும் அப்பால் சென்று சமூகத்துக்கும் நாட்டுக்கும் மிகவும் பயன்பட்டதினால்தான் உங்கள் நினைவு இன்றும் மக்கள் மத்தியில் கிழக்கிலங்கையை கட்டியெழுப்பிய நிபுணராக நிலைத்திருக்கின்றது.

சேஹ் முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஞாபகார்த்த நினைவு மலர்-2009

# நான் அறிந்த தொப்பி வாப்பா ...



**மரினா மன்சூர் நளிமுத்தீன்**
*சட்டத்தரணி*

சம்சுதீன் காரியப்பர், இராசவாசல் கேற் முதலியார், வன்னியனார் எனப் பல்வேறு பெயர்களும் பட்டங்களும் இருந்தாலும் அது அவரது பேரப்பிள்ளைகளான எங்களுக்குத் தெரிந்ததெல்லாம் அவர் ஓர் அன்பான "தொப்பி வாப்பா" என்பது மட்டுமே.

அரசியலில் அவர் சாதித்தவைகளோ எண்ணிடலங்காதவை. கிழக்கிலங்கை மக்களுக்கு அவர் ஆற்றிய சேவைகளோ சொல்லிமாளாது. அவற்றையெல்லாம் எடுத்துரைப்பதற்கான அறிவோ அனுபவமோ எனக்குப் போதாது. ஆகவே தொப்பி வாப்பா என எங்களால் அன்பாக அழைக்கப்பட்ட எனது அன்புப் பாட்டனார் எம்.எஸ். காரியப்பரின் தனிப்பட்ட வாழ்க்கை முறையினைப் பற்றி சில வார்த்தைகள் இங்கு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்றேன்.

1901ம் ஆண்டு மே 22ம் திகதி கிழக்கிலங்கை மண்ணின் சாய்ந்தமருதூரில் பிறந்து கொழும்பு உவெஸ்லி கல்லூரியில் தனது கல்வியைக் கற்று "மெற்றிகுலேசன்" எனும் பிரித்தானிப் பரீட்சையில் சித்தியடைந்து இடைத்தர விஞ்ஞானத் தேர்வுக்கு தன்னை தயார்படுத்திக் கொண்டிருந்தவேளையிலே பொதுச்சேவையில் தன்னை அர்ப்பணிப்பதற்கான ஆரம்ப அழைப்பு அவருக்கு வந்தது.

கிழக்கு மாகாண அரசாங்க அதிபர் சி.வி. ப்ரெயன் (C.B. Brain) என்பவரின் வேண்டுகோளை ஏற்று 1921ல் பாணமப்பற்று எனும் இடத்துக்கு வன்னிய முதலியாராக பதவியேற்றார்.

அன்றைய திகதியிலிருந்து அரசியலில் அவர் ஓய்வுபெறும் நாள் வரை பல பதவிகளை அவர் வகித்திருந்தாலும், எனது பாட்டனாரான அவரை நினைத்துப் பார்க்கையில் என் கண்முன்னே தோன்றுவதெல்லாம் குழந்தைத் தனமான அந்த அழகிய முகம், மென்மையான புன்முறுவல், வட்டக்கண்ணாடி, சிவப்பு நிற துருக்கித் தொப்பி இவைகள்தான். எனது நினைவுக்கெட்டிய நாளிலிருந்து அன்னார் மறையும் நாள் வரை புன்னகை பூக்காத ஒருமுகமாக அவர் முகத்தை நான் கண்டதே இல்லை.

அவர் வசித்த அந்த வீட்டில் எத்தனையோ அறைகள் இருந்தாலும் அவரை நான் காண்பதெல்லாம் அவரது பிரத்தியேக அலுவல்கள்



ACCESSION NO:
CLASS NO:

அறையில்தான். அந்த அறையின் சுவர்களை நான் கண்டதேயில்லை. காரணம் அவைகள் அனைத்தும் புத்தக அலுமாரிகளாலேயே மறைக்கப்பட்டிருந்தன. வாசிப்பதையும் எழுதுவதையும் அவரது சுவாசமாகக் கொண்டிருந்தார். அவரது கைப்பட அவர் எழுதிய ஆக்கங்கள்தான் எத்தனை? எத்தனை?...

சிறுபிள்ளையாக நான் எனது தாயாருடன் அவரைப் பார்க்கப்போகும் போதெல்லாம் என்னை அழைத்து அரவணைத்து மடியில் அமரவைத்து ஒரு புத்தகத்தை எனது கையில் கொடுப்பார். அதில் எழுதியிருப்பவை என்னவென்றே புரியாவிடினும் எனது பாட்டனாரை திருப்திப்படுத்துவதற்காக எழுத்துக் கூட்டி வாசிக்க முயல்வேன். அதனைப் பார்த்து பரவசப்பட்டு மேலும் வாசிக்கும்படி உற்சாகப்படுத்துவார். அன்று அறியாத வயதில் எனது பாட்டனாரின் மடியில் ஆரம்பித்த எனது வாசிக்கும் ஆர்வம்தான் இன்றுவரை என்னைத் தொடர்கின்றது.

அன்னாரைச் சந்திக்க வருகின்ற மக்களிடம் ஊர் நன்மைகளைப் பற்றியும், அரசியல் நிலவரம் பற்றியும் நிறையவே பேசுவார். அவர் பேசுவதன் அர்த்தம் என்னவென்று புரியாதநிலையில் கேட்டுக்கொண்டிருந்த எனக்கு, விபரம் புரியத் தொடங்கி நிறைய விடயங்கள் அறிய வேண்டும் என்ற ஆர்வம் வந்தபோது அவற்றை கேட்டறிவதற்கு எனது பாட்டனார் இவ்வுலகில் இல்லை. கல்விப் பொதுத்தராதர பரீட்சையில் நான் சித்தியடைந்தபோது சட்டப்படிப்பினை மேற்கொண்டு ஒரு சட்டத்தரணியாகவும் சிறந்த முன் உதாரணமாகவும் வாழவேண்டும் என அன்னார் எனக்கு எழுதிய கடிதத்தை ஒரு பொக்கிஷமாகவே இன்று வரை பாதுகாக்கின்றேன்.

எனது பாட்டனார் எம்.எஸ். காரியப்பர் தனவந்தர் குடும்பத்தைச் சேர்ந்தவர். வன்னிய முதலியாராக கல்முனை நகர சபைத் தலைவராக, பாராளுமன்ற உறுப்பினராக, தபால்-தொடர்பு அமைச்சராக பல வருடங்கள் அரசியலில் ஆட்சி செய்தவர். அரசியல்வாதியாக பொதுச்சேவையில் இருந்தபோது தனது சொந்த நிலபுலன்களைக்கூட பொதுப் பணிக்காக வழங்கியவர்.

வரலாற்றில் வரையப்பட்ட கல்லோயாத் திட்டத்துக்கு வழியமைத்தவர். ஏழை விவசாயிகளுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை பகிர்ந்தளித்தவர். கல்முனையை நகரமாக்கி முஸ்லிம் வர்த்தகர்களின் நலன்கருதி கல்முனை நகரின் மத்தியிலே ஜும்ஆ பெரிய பள்ளிவாசலை நிறுவியவர். பாடசாலைகள் கட்டுவதற்கு தனது சொந்தக் காணிகளை நன்கொடையாக வழங்கியவர் என அவர் வாரி வழங்கியதை அடுக்கிக் கொண்டே போகலாம். அப்படிப்பட்ட அந்த மாமனிதர் இறுதியில் தனது வாழ்நாளைக் கழித்ததுவோ தகரத்தினாலான ஒரு சிறு வீட்டில் என்பது சோகமான சரித்திரம். இருந்தாலும் அதனை அவர் அவமானமாகக் கருதவில்லை. மாறாக, பெருமிதமாகவே கருதினார்.

ஒரு இளைஞனாக வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய வயதில் பொதுப்பணிக்காக தன்னை அர்ப்பணித்தவர். எனது பாட்டனார் எம்.எஸ்.

காரியப்பர் அவர்கள் இளவயதிலேயே தன் சமுகத்துக்காக பல சாதனைகளைப் புரிந்த அன்னாரின் அரசியல் முதிர்ச்சியினாலும் அறிவுத் திறனாலும் இலங்கையை ஆண்ட பிரித்தானிய ஆட்சியாளர்களினால் புகழப்பட்டவர்.

1944ம் ஆண்டு அதிமேதகு கவர்னரினால் கேற் முதலியார் எனப் பட்டம் சூட்டப்பட்டதோடு இவ்வாறான அதிஉயர்ந்த கௌரவத்துக்குள்ளான முதலாவது இலங்கை முஸ்லிம் என்ற அந்தஸ்த்தையும் அடைந்தார். இலங்கையை ஆண்ட அனைத்துத் தலைவர்களாலும் மதிக்கப்பட்ட எனது பாட்டனார் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்களை ஆட்சியாளர்கள் எந்தளவுக்கு நம்பிக்கை கொண்டார்கள் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் இரண்டாவது உலகப் போரின்போது திருகோணமலை மாவட்டமானது ஜப்பானின் விமானப்படைத் தாக்குதலுக்கு உள்ளாகுமோ என்ற அச்சத்துக்குள்ளானது. இதன் காரணமாக அப்பகுதி மக்களின் மத்தியில் பதற்றமும், அமைதியின்மையும் ஏற்பட்டது. இவ்வாறானதொரு பதற்ற நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து திருகோணமலை மாவட்டத்தில் அமைதியான சுமுக நிலையை உருவாக்க அப்போதைய அரசாங்கத்தினாலும் அவ்வரசாங்கத்தின் குடியியல் பாதுகாப்பு ஆணையாளரான சேர் ஒலிவர் குணதிலக்கவினாலும் நியமிக்கப்பட்டவர் எம்.எஸ். காரியப்பர் அவர்கள். இந்நிகழ்வானது அன்னாரின் திறமைக்கு அளிக்கப்பட்ட கிரீடமாக மட்டுமல்லாது கிழக்கு மாகாணத்துக்கே அளிக்கப்பட்ட கௌரவமாகத்தான் கொள்ளப்படல் வேண்டும்.

இவ்வாறு சாதனைகள் படைத்து சரித்திரத்தில் பெயர் பொறிக்கப்பட்ட அன்னாரின் அரசியல் வாழ்விற்கும், அன்னார் மேற்கொண்டு வந்த மக்கள் சேவைக்கும் சாவுமணியாக அடிக்கப்பட்டதுதான் அன்னாரின்மேல் அநியாயமாகச் சுமத்தப்பட்ட இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு.

நல்லதுக்கு என்றுமே காலமில்லை என்பது முதுமொழி. அதே நிலமைதான் நல்லதையே செய்து உள்ளத்தையே பேசும் உத்தம மனிதர்களுக்கும், தனது சொந்த சொத்துக்களை மாத்திரமல்லாது தனது வாழ்வையே பொதுமக்களுக்காக அர்ப்பணித்து வாழ்ந்த அம் மாமனிதனுக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கிழக்குப் பிராந்தியத்தின் வளர்ச்சிக்கே வைக்கப்பட்ட முற்றுப்புள்ளி. அவ்வழக்கைப் பொறுத்தவரை சட்டதேவதையின் கண்கள் மறைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கும் எதிர்கால சந்ததியினர் புரிந்து கொள்வர் அன்னார் ஓர் உத்தமர் எனும் உண்மையை.

எனது பாட்டனார் தொப்பி வாப்பா இறையடி எய்தி இருபது வருடங்கள் ஆகின்றன. இன்னும் எத்தனை வருடங்கள் உருண்டோடினாலும் அன்னார் செய்த சேவைகள் மூலம் இலங்கை மக்களின் மனதில் அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாண மக்களின் மனதில் என்றென்றும் நிலைத்திருப்பார்.



ACCESSION NO:
CLASS NO:

# காரியப்பர்; விசுவாசமுள்ள அரச பணியாளர், சிறந்த சமூகசேவையாளர், ஒரு வரலாற்றுப் புருசர்!

கலாநிதி ஏ. ஜீ. ஹுசைன் இஸ்மாயில்
உப வேந்தர் தென்கிழக்குப் பல்கலைக் கழகம்

இலங்கையில் குடியேறிய முஸ்லிம்கள், வரலாற்றுக் காலம் முதல் ஏனைய சமூகத்தவர்களுடன் நல்லுறவுடன் வாழ்ந்தனர். அப்போதைய அரசர்களுக்கும், அரசுகளுக்கும் விசுவாசமுள்ளவர்களாக இருந்துள்ளனர். நாட்டு நலனுக்காகவும் அரச பணிகளுக்காகவும் தம்மை அர்ப்பணித்ததன் மூலம் அரசர்களால் மதிக்கப்பட்டவர் களாகவும், ஏனைய சமூகத்தவர்களின் நல்லெண்ணத்தை பெற்றவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். இந்த வரிசையில் கேட்முதலியார் காரியப்பர் அவர்கள் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த முஸ்லிம் தலைவர்களில் கோடிட்டுக்காட்டக்கூடிய ஒருவராக உள்ளார்.

மஹ்மூது சம்சுதீன் காரியப்பர் அவர்கள் இலங்கையில் வாழ்ந்த சோனகத் தலைவர்களில் ஒருவர். மிகச் சிரேட்டமான ஒரு அரச நிருவாகி. இவர் 1901ம் ஆண்டு சாய்ந்தமருதில் காரியப்பர் குடும்பத்தில் பிறந்தார். காரியப்பர் பரம்பரை இரு நூற்றாண்டு வரலாறு கொண்டது. எம். எஸ். காரியப்பர் அவர்களின் முப்பாட்டனார் நெய்னாமரிக்கார் என்பவருக்கு 1817 - 1818ம் ஆண்டு கண்டி கலவரங்களின் போது ஆற்றிய பணிக்காக காரியப்பர் (சோனகத் தலைவர்) என்ற பட்டம் 1818ம் ஆண்டு மார்ச் 07ம் திகதி வழங்கப்பட்டது.

எம். எஸ். காரியப்பர் அவர்கள் கொழும்பு வெஸ்லிக் கல்லூரியில் கல்வி கற்று இலண்டன் மெட்ரிக்குலேசன் பரீட்சையில் சித்தியடைந்து விஞ்ஞானத்துறையில் உயர் பரீட்சைக்குத் தோற்ற ஆயத்தமாக இருந்தபோது கிழக்கு மாகாண அரச அதிபர் சீ.பி. பிரயன் (C.B. Brayan) பாணம பத்து (பிரதேசத்தின்) வன்னி முதலியாராக இவரை நியமித்தார்.

அப்போதைய நிருவாக முறையின் கீழ் மட்டக்களப்பு மாவட்டம் ஒரு அரசாங்க அதிபரின் கீழ் இருந்தது. ஒவ்வொரு மாவட்டமும் [illegible]பது நிருவாகப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இப்பிரதேசத்தின் தலைவரே வன்னி முதலியார் என அழைக்கப்பட்டார். ஒவ்வொரு வன்னிப் பிரதேசமும் துணைப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இது உடையார் பிரிவு அல்லது 'கோரல' என அழைக்கப்பட்டது. இத்துணைப் பிரிவுத் தலைவர்கள் 'கோரல' அல்லது உடையார் என அழைக்கப்பட்டனர். உடையார் பிரதேசங்கள் மேலும்

LIBRARY

பொலிஸ் துணைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இதன் தலைவர் கிராமத் தலைவர் ஆராய்ச்சி அல்லது கம்முலாதானி (Village Headman) என அழைக்கப்பட்டனர். இப்போதைய நிருவாக முறையுடன் ஒப்பிட்டுக் கூறுவதாயின் காரியப்பர் தனது 21வது வயதிலே பிரதேச செயலாளர் (Divisional Secretary) என்ற பதவி நிலையை வகித்துள்ளார்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிருவாகச் செலவுகள் அதிகரித்து வந்ததால் பிரித்தானியர் உள்நாட்டில் சிறந்த நிருவாக ஆற்றல் உள்ளவர்களை தேடிய காலமது. அப்போது காரியப்பர் வன்னி முதலியாராக நியமிக்கப்பட்டது அவரது கல்வித் தகுதி, திறமை என்பவற்றுக்கான அங்கீகாரமாகும். அது கிழக்கு மாகாண மக்களுக்கு கிடைத்த ஒரு கௌரவமாகும்.

அப்போதைய அரச அதிபர் 1924ம் ஆண்டைய அரச நிருவாக அறிக்கையில்: "பாணமபத்துவில் கடமை புரியும் ஒரு முஸ்லிம் இளைஞனும், வன்னியாரும் ஆகிய காரியப்பர் தனக்குரிய அரச பணிகளை சிறப்பாக நிறைவேற்றி வருகிறார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

காரியப்பர் அவர்கள் 1923ம் ஆண்டு பாணம பத்துவில் இருந்து அக்கரைப்பற்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். பாணம பத்துவில் காணியற்ற மக்களுக்கு பெருமளவான அரச காணிகளைப் பெற்றுக்கொடுத்தார். இன்னும் நீதியாகவும், நேர்மையாகவும் அம்மக்கள் மத்தியில் நிருவாகம் செய்தார். ஆகவே, பாணம பற்று மக்கள் அவரை இடம்மாறிச் செல்ல விடவில்லை. இருப்பினும் அவரது விருப்பத்தின் பெயரில் அக்கரைப்பற்று பிரதேச வன்னியராக கடமை ஏற்றார். அதன்பின் சம்மாந்துறை, நாடுகாடுப்பற்று, பின்னர் கரைவாகு நிந்தவூர் பற்று ஆகிய பிரதேசங்களிலும் கடமை புரிந்தார். அவர் தற்போதைய அம்பாறை மாவட்டத்தின் எல்லாப் பிரதேசங்களிலும் சேவையாற்றியுள்ளார்.

தாம் கடமை புரிந்த பிரதேசங்களில், மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்காக அரும்பணியாற்றினார். குறிப்பாக கிழக்கு மாகாண மக்கள் விவசாயத்தை ஜீவனோபாயமாகக் கொண்டவர்கள் விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்த்து அப்பிரதேசங்களில் விவசாயத்தை மேம்படுத்தினார். அவர் பிரதேச மக்களின் தேவைகளை உணர்ந்து செயல்பட்டார்.

காரியப்பரின் அரச, சமூக சேவைகளை கௌரவித்து மேன்மை தங்கிய தேசாதிபதியவர்கள் ஜுன் 1944ம் ஆண்டில் "கேட்முதலியார்" என்ற தேசிய பட்டத்தை வழங்கினார். சிங்கள அரச நிருவாக முறையின் கீழ் ஒரு 'நிலமே' என்பவருக்கு இப்பட்டம் சமனாக இருந்தது. இது அரசருக்கு அடுத்த மூன்றாவது பதவி நிலையாகும். இலங்கையில் "கேட்முதலியார்" பட்டம் பெற்ற முதல் முஸ்லிம் இவராவார்.

இரண்டாம் உலக யுத்த காலத்தில் அரசுக்கு மிக விசுவாசமாக இருந்ததுடன், மக்களின் கஷ்டங்களை நீக்குவதற்கு கடுமையாக உழைத்தார். அப்போது இலங்கையின் பாதுகாப்பு கமிசனராக கடமை புரிந்த சேர் ஒலிவர் குணதிலக கிழக்கு மாகாண யுத்தகால பணிகளுக்காக காரியப்பர் அவர்களையே தெரிவு செய்தார். இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது, திருகோணமலையை யப்பான் குண்டு வீசித் தாக்கியபோது அம்மாவட்டத்தின் நிருவாகம் பீதியால் சீர்குலைந்து போயிருந்தது. தொழிலாளர் யாரும் வேலைக்கு வரவில்லை. அப்போது காரியப்பர் அவர்களே கல்முனையிலிருந்து தொழிலாளர்களையும், மற்றும் உதவியாளர்களையும் அழைத்துச்சென்று அரச செயற்பாடுகளை சுமுக நிலைக்குக் கொண்டு வந்தார், அது மாத்திரமின்றி யப்பான் குண்டு வீச்சின் போது பிரித்தானிய கப்பல்கள் சேதமுற்று, பிரித்தானிய மாலுமிகள், கிழக்குக் கடலில் தத்தளித்த போது மீன்பிடி படகுகளை அனுப்பி அவர்களைக் காப்பாற்றினார். அப்போதைய கிழக்கு மாகாண அரச அதிபர் எம். கே. டி. சண்டிஸ் (M. K. T. Sandys) காரியப்பர் அவர்களுக்கு எழுதிய நன்றிக் கடன் கூறும் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "காரியப்பர் அவர்களே பிரதம செயலாளர் அவர்கள் நீங்கள் யப்பான் குண்டு வீச்சின் போது எமது மாலுமிகளின் உயிர்களைக் காப்பாற்றிய உயரிய பணிக்காக எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்" (No. TCH. 4. 11.11.42) என எழுதியுள்ளார். இலங்கை நாட்டின் நலனுக்காக முஸ்லிம்கள் செய்த தியாகங்களை நினைவுபடுத்தும் மிக முக்கியமான வரலாற்று நிகழ்வாக இதனைக் குறிப்பிடலாம்.

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற "கேட்முதலியார்" காரியப்பர் மக்கள் நலன் கருதி அரசியலில் நுழைந்தார். 1947ம் ஆண்டு முதலாவது பாராளுமன்றத்துக்கு கல்முனை மக்களின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கையின் முதல் பிரதமரான டீ. எஸ். சேனாநாயக இவரது திறமைகளை நன்கு அறிந்திருந்தார். உள்நாட்டு விவகார அமைச்சின் பாராளுமன்றச் செயலாளராக அவரை நியமித்தார். முதற் பாராளுமன்றத்தில் காரியப்பர் அவர்கள் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக, கலாநிதி என்.எம். பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா, சீ. சுந்தரலிங்கம் போன்ற சிரேஷ்ட தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டார். 1956, 1960, 1965ம் ஆண்டுகளில் பலமுறை கல்முனைப் பிரதேச பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக அரசியலில் உதவி நீதி அமைச்சராகவும், டபிள்யு. தகநாயகாவின் 'காபந்து' அரசாங்கத்தில் தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சராகவும் கடமையாற்றினார்.

தான் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த காலத்தில் கல்முனை மாவட்ட அபிவிருத்திக்காக பல செயற்திட்டங்களை அறிமுகம் செய்தார்.

பிரதமர் டி. எஸ். சேனாநாயக அவர்களின் வார்த்தையில் கூறுவதாயின், "கல்லோயா திட்டம் காரியப்பரின் ஒரு கனவு. நான் அவரோடு சேர்ந்து அக்கனவை நினைவாக மாற்றினேன்" எனக் குறிப்பிடுகிறார். கல்லோயா திட்டமும், இங்கினியாகல அணைக்கட்டு அமைக்கப்பட்டதும் அம்பாறை மாவட்டத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அம்பாறை மாவட்டம் கிழக்கின் தானியக் களஞ்சியமாக மாறுவதற்கு இவர் காரணகர்த்தாவாக இருந்தார்.

பத்தொண்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி தேசிய கல்வியின் மறுமலர்ச்சிக் காலம் என அழைக்கப்படுகிறது. இக்காலத்தில்தான் ஒராபிபாஷா, சித்திலெவ்வை, அப்துல் அஸீஸ் போன்ற முஸ்லிம் தலைவர்கள் கல்வி கற்பதன் அவசியத்தை முஸ்லிம்களுக்கு உணர்த்தினர். இவர்களது 'தூதை' கிழக்கு மாகாணத்திற்கு எடுத்து வந்து செயல்படுத்திய ஒரு 'கலீபா'தான் காரியப்பர். முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டுக்காக அம்பாறை மாவட்டத்தில் பல பாடசாலைகளை அமைத்தார். சில பாடசாலைகளுக்கு தமது சொந்தக் காணிகளை நன்கொடையாக வழங்கினார். அக்காலத்தில் முஸ்லிம் பெண் பிள்ளைகள் கல்வி கற்பதை பழமைவாதிகள் எதிர்த்தனர். காரியப்பர் துணிச்சலோடு பாரம்பரிய வழக்கங்கள் நிறைந்திருந்த கிழக்கு மாகாணத்தில் பெண்கள் கல்வி கற்கவேண்டும் எனப் பிரசாரம் செய்தார். இன்று கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பெண்கள் வைத்தியர்களாகவும், நீதிபதிகளாகவும், மற்றும் உயர் பதவிகளிலும் அமர்ந்துள்ளதை பார்க்கும் போது காரியப்பரின் தூர நோக்கு எவ்வளவு பயனளித்துள்ளது என்பதை எடைபோட முடியும்.

மேலே குறிப்பிட்ட அம்சங்கள் ஒரு குறுகிய காலத்தில் இக்கட்டுரையை எழுதுவதற்காக நான் பெற்றுக் கொண்ட ஒருசில தகவல்களை மையமாகக் கொண்டவை. ஒரு சிறந்த அரச நிருவாகியாக, சமூக சேவையாளராக, சீர்திருத்தவாதியாக காரியப்பர் அவர்கள் ஆற்றிய பங்களிப்புகளை நோக்கும்போது இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம் தலைவர்களில் அவருக்கு தனித்துவமான ஒரு இடம் கொடுக்க வேண்டும். பல்வேறு கால கட்டங்களில் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம் தலைவர்கள் நாட்டுக்காக ஆற்றிய பணிகள், அவர்களது பங்களிப்புகள் பற்றிய சரியான வரலாற்றுத் தொகுப்புகள் எழுதப்படாததன் காரணமாக, ஏனைய சமூகத்தினர் முஸ்லிம்களை தற்போது ஒரு வர்த்தக சமூகமாக மட்டுமே பார்க்கின்றனர்.

நாட்டின் நலனுக்காக பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்புகள் பற்றி ஏனையோர் அறியாதுள்ளனர். பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் வளர்ந்து வரும் சந்தேக உணர்வுகளை நீக்குவதற்கும், முஸ்லிம்கள் நாட்டுக்கு விசுவாசமாக வாழ்ந்த ஒரு சமூகம் என்பதை அறிவுறுத்துவதற்கும், இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம் தலைவர்களின் வரலாறுகள் பக்கச்சார்பின்றி ஆவணப்படுத்தப்படுவது அத்தியாவசியமான ஒன்றாகும்.



# ஆசிச் செய்தி



**எம்.ஐ. உதுமாலெவ்வை**
*- முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் -*

இலங்கை முஸ்லிம் தலைவர்களில் ஒருவரும் அம்பாரை மாவட்டத்தின் கீர்த்திமிகு அரசியல்வாதிகளில் பிரசித்தி பெறற்வருமான மறைந்த கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்களின் நினைவாக, அரசு முத்திரை ஒன்றினை வெளியிடுவது மகிழ்வான நிகழ்வாகும்.

இப்பெரியார் இலங்கை சுதந்திரமடையுமுன்பே, அவர் வாழ்ந்த பிரதேசங்களின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி நாட்டின் நாலாபுறங்களிலும் மக்களின் வாழ்வு வளம்பெறப் பெரும் பங்காற்றியுள்ளார். நமது பகுதியில் கல்லோயா நீர்த்தேக்கம் உருவாக அவரது உற்சாகமும் ஒத்துழைப்பும், அன்றைய விவசாய அமைச்சரும் பிரதமருமான கௌரவ டி.எஸ். சேனநாயக்கா அவர்களினால் பாராட்டப்பட்டதுடன் இன்றும் நமது மக்களால் நினைவுகூரப்படுவதை நாம் அறிவோம். அவரது ஆலோசனையின் பிரகாரம் உருவாக்கப்பட்ட முஸ்லிம்-தமிழ்க் குடியேற்றங்கள் தொடர்ந்து இன்றுமிருப்பின் அம்பாரை மாவட்டக் குடிசனப் பரம்பல் வேறுபட்டிருக்கவும் முடியும் என்பதைப் பலரும் தெரிவிக்கின்றனர்.

1940களுக்கு முன், இப்பிரதேச முஸ்லிம்களின் கல்வி நிலை பற்றி மிக கவலையடந்தவர்களுள் கேற் முதலியார் முக்கியமானவர். தாய்மொழிக் கல்வி மாத்திரமன்றி ஆங்கில அறிவு பெறுவதற்காகவும் மாவட்டம் முழுவதும் பாடசாலைகள் உருவாக அவர் ஆற்றிய தொண்டு மறக்கப்படக் கூடியதல்ல. ஸேர் ராஸிக் பரீத் முதலான பெருந்தலைவர்களுடன் இணைந்து அரபு மொழி கற்கவும், ஆங்கிலம் கற்கவும், கல்வி நிலையங்கள் உருவாகவும் ஆற்றிய தொண்டு மறக்கப்படக் கூடியதல்ல. அரபு மொழியும் ஆங்கில மொழியும் பிந்திய காலத்தில் இல்லாதுபோனது நமது துரதிஷ்டமே. இவ்விரு மொழிகளிலும் நம்மவர்கள் போதிய தகைமை பெற்றிருந்திருப்பின் சமுகத்தின் ஸ்திரத்தன்மைக்கு வழிவகுத்திருக்கும். எனினும், இன்று இவ்விரு மொழிகளையும் கற்பதில் ஆர்வம் கொண்டு அதற்கான கல்வி வசதிகளும் படிப்படியாகச் செய்யப்பட்டு வருவது அவர்களுக்கு நாம் ஆற்றும் நன்றிக் கடனாகும். அதன்பின் வந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் நமது இன்றைய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளதை நாம் பெருமையுடன் நினைவுகூருவோம்.

ஸேர் ராஸிக பரீத், கேற் முதலியார் காரியப்பர் ஆகியோர்களின் நினைவாக ஆராதனை மண்டபங்களை முன்னாள் அமைச்ர் மாண்புமிகு அல்ஹாஜ் ஏ.ஆர். மன்சூர் அவர்கள் கல்முனை, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் அமைத்திருப்பது மனதைக் குளிர்விக்கின்ற நிகழ்வுகளாகும்.

இவ்வாண்டு நம் நாட்டில் ஆங்கிலம், உயர்தொழில்நுட்ப ஆண்டாகப் பிரகடனமாகியுள்ளது. மேலும், வானவியல் நுட்பமும் இங்கு தீவிரப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்விரு துறைகளிலும் உலகில் பேர்போனவரும் நம் நாட்டில் வாழ்ந்தவருமான ஸேர் ஆர்தர் ஸீ கிளாக் அவர்களின் நினைவாக கட்டுப்பெத்தையில் உயர்தொழில்நுட்ப நிலையம் இயங்குவதை நாம் அறிவோம். இங்கு உலக தரத்தில் வானியல், உயர் தொழில்நுட்ப எந்திரவியல் அறிவும் பயிற்சியும் பட்டமும் வழங்கப்படுகின்றன.

இவ்வாறான ஒன்று, ***"கேத் முதலியார் எம்.எஸ். காரியப்பர் உயர் தொழில்நுட்ப வளாகம்"*** என்ற பெயரில் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின்கீழ் உருவாக்கப்பட வேண்டும் என்பது நம் எல்லோர்க்கும் விருப்பமான ஒன்றாகவிருக்கும். இதனை நன்கு பயன்படுத்தினால் இவ்வாண்டுக்குள்ளேயே இலக்கினை அடைய முடியும் என்பது எனது நம்பிக்கை.

# ஆசிச் செய்தி



டாக்டர் எஸ்.எம். அப்துல் அஸீஸ்
தலைவர்,
அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம்

20ம் நூற்றாண்டில் வாழ்ந்த தூரதிருஷ்டிமிக்க எமது அரசியல் ஞானி, மாபெரும் சிந்தனையாளர் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்களைக் கௌரவித்து இலங்கை அரசு முத்திரை வெளியிடும் இவ்விழாவுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

மருத்துவராக உயர்கல்வி பெறவிருந்த கேற் முதலியார் தனது 20வது வயதில் வன்னியனாராக பதவியேற்று தனது 46ம் வயதுவரை பாணமைப்பற்று, சம்மாந்துறைப்பற்று, கரைவாகுப்பற்று ஆகிய பிரதேசங்களில் அரச பணிபுரிந்தார்.

இதனைத் தொடர்ந்து 1947 தொடக்கம் அரசியலில் பிரவேசம் செய்த இவர் 1965ம் ஆண்டுவரை கல்முனைத் தொகுதியின் பிரதிநிதியாகவும், முறையே உள்நாட்டு கிராமிய அபிவிருத்தி உதவி அமைச்சராகவும், நீதி, தபால், வானொலி, கலை-கலாச்சார அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.

அரச சேவையாளராகவும், அரசியல்வாதியாகவும் செய்த சேவைகள் சாதி, மத வரம்புகளுக்கு அப்பாற்பட்டவையாக இருந்ததுடன் குறிப்பாக எமது முஸ்லிம் சமூகத்துக்கு இதற்கு முன் எவரும் செய்திராத அளவு பல நூற்றாண்டுகளுக்கு எமது பிரதேச மக்கள் தலைநிமிர்ந்து வாழவைக்கப் போதுமானது என்பதை எம்மில் எவரும் மறுக்க முடியாது.

தேசப்பற்றும், சமூக சிந்தனையும் கொண்ட கேற் முதலியார் அவர்கள் இந்நாட்டின் அபிவிருத்திக்காகவும், சுபீட்சத்துக்காகவும் அவரின் அரசசேவையையும், அரசியலையும் அதிகூடியளவு பயன்படுத்தியுள்ளார் என்பது வரலாறு கூறும் பாடம்.



இன ஒற்றுமைக்காக பாடுபட்ட இவரின் சேவைக்கு கல்லாறு கோயில்களின் காணிகளை அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியாள போராடிப் பெற்றுக் கொடுத்தமை ஒரு சான்று.

கல்லோயாத் திட்டத்தின் இரட்டைத் தந்தைகளில் ஒரு கேற் முதலியாரின் அயராத முயற்சியால் இன்று நமது பிரதேசம் உட்பட முழு நாடுமே பிரயோசனமடைகிறது.

எமது முஸ்லிம் சமுகத்தையும், இப்பிரதேசத்தையும் பொறுத்தவரை இவரின் சேவைகள் பல கோணங்களில் பயன் தந்து கொண்டிருக்கிறது. முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றத்துக்காக பெருந்தொகையான முஸ்லிம் பாடசாலைகளை சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, சாய்ந்தமருது, கல்முனைக்குடி, மருதமுனை ஆகிய பிரதேசங்களில் ஆரம்பித்தது மாத்திரமல்லாது பெண்களின் கல்விக்கும் முன்னோடியாக இருந்துள்ளார்.

அத்துடன் அட்டாளைச்சேனை, அளுத்கமை போன்ற இடங்களில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை அமைக்க காரணியாக இருந்துள்ளார்.

பட்டிருப்புத் தொகுதியுடன் இருந்த மருதமுனை பிரதேசத்தை கல்முனையுடன் இணைத்து கல்முனைத் தொகுதிக்கு வலுவூட்டினார். அத்துடன் கல்முனை பட்டினசபையை உருவாக்கி இரு இனங்களும் ஒன்றாக வாழ்வதற்குரிய முறையில் அரச நிறுவனங்களை மத்தியில் நிறுவி உதவினார்.

முஸ்லிம்களின் கலை, கலாச்சார மேம்பாட்டுக்காக அயராது உழைத்தார். அன்னாரின் காலப்பகுதியில் அன்னாரின் முயற்சியில் பல பள்ளிவாசல்கள், மையவாடிகள் உருவாக்கப்பட்டன. அத்துடன் கல்முனை முஹையதீன் ஜும்ஆ பள்ளிவாசலின் தலைமை கர்த்தாவாக பல வருடங்கள் பணி புரிந்திருக்கிறார்கள்.

இவருடைய காலப் பகுதியில் சாய்ந்தமருது வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளை உருவாக்கினார். அத்துடன் தனது சொந்த நிலங்களை வழங்கி எத்தனையோ பொது நிறுவனங்களை நிறுவினார். இவரது சேவைகள் எமது சமூகமும் நாடும் நிலைத்து இன்னும் பல நூற்றாண்டுகள் பயன்பெறப் போதுமானவை என உறுதிபடக் கூறலாம்.

இறுதி மூச்சுவரை தம் சமூகத்துக்காகப் பாடுபட்ட கேற் முதலியாரின் ஆன்ம ஈடேற்றத்துக்காகப் பிரார்த்திக்கிறேன்.

# ஆசிச் செய்தி



**திருமதி எஸ்.எச்.எம்.எம்.ஏ. காதர்**

B.Ed. (Hons), M.Ed., Dip. in Sc. Mang., & SLEAS

அதிபர், ஸாஹிரா தேசிய பாடசாலை, கல்முனை

நிறையுடைய வாழ்வளித்து நெடுநிலத்தைக் காக்கும் மறையளித்த இறைவனுக்கு மாபெரிய புகழனைத்தும் அல்ஹம்துலில்லாஹ்!

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தனிப்பெருந்தலைவர் ஐம்பதுகளில் அமைச்சரவையை அலங்கரித்த கல்முனையின் காவிய நாயகன், கல்வியின் காவலனாய், கல்முனை நகரத்தின் சிற்பியாய், அகவை அறுபதுக்கு மேல் அரிய பணிசெய்த இராசவாச முதலியார் எம்.எஸ். காரியப்பர் நினைவாக முத்திரை வெளியிட அரசு முன்வந்துள்ள இவ்வேளை, அவர்களது சேவையைச் சுவடாக்க நினைவு மலரொன்றை வெளியிட்டு, கிழக்கிலங்கை வரலாற்றில் ஆழமான பதிவொன்றைப் பதித்துக் கொள்ள எம் சமூகம் விரும்பிவிட்டது. அந்த வகையில் வெளிவரும் அம்மலருக்கு ஆசிச் செய்தி வழங்கக் கிடைத்ததையிட்டு மட்டிலா மகிழ்ச்சியடைகின்றேன்.

காரியமே கண்ணாகக் கருமமாற்றிய காரியப்பர் பரம்பரையில் வந்துதித்த மஹ்மூத் சம்சுதீன் காரியப்பர் கல்முனை ஸாஹிறாவின் ஸ்தபாகர். 1949ல் இருந்து ஆரம்பக் கல்விக்காக, தென்கிழக்குப் பிராந்தியத்திலே ஏககாலத்தில் 19 பாடசாலைகளை ஸ்தாபித்தவர் எம் காவிய நாயகர். அன்று முஸ்லீம்களின் கல்விநிலையை உணர்ந்து ஆங்கிலக் கல்விக்கும் அடித்தளமிட்டார்.

சாய்ந்தமருதுக் கிராமத்தில், அவருக்கே சொந்தமான ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் ஆங்கிலக் கனிஷ்ட பாடசாலையை ஸ்தாபித்தார். இன்று அது ***"கல்முனை ஸாஹிறா"*** என்ற நாமத்தோடு அகவை அறுபதையடைந்து இலங்கைத் தீவெங்கும் நறுமணம் பரப்பிப் பரிணமிக்கின்றது. இது அன்னார் செய்த "ஸதகத்துல் ஜாரியா". இக்கல்லூரி காலத்தால் அழியாத அவரது அளப்பரிய சேவைக்குச் சான்றாகும்.

கல்லூரிக்கு மாத்திரமல்லாது இப்பிராந்தியத்தின் நிர்வாகம், வர்த்தகம், விவசாயம் என்று சகலவிதமான அபிவிருத்திக்கும் மிக்க தூரதிருஷ்டியோடு செயற்பட்ட செயல் வீரர் அவர். அன்றைய மாண்புமிகு பிரதம மந்திரி டீ.எஸ். சேனநாயக்க அவர்களுடன் தோளோடு தோள் நின்று உழைத்த செம்மல். அன்று நாடாளுமன்றத்தில் நாவன்மையால் தன் இருப்பை நிலைநாட்டித் தடம் பதித்த மாவீரர். அவரது சேவை இன்று எம் சமூகத்தால் நன்றியுடன் நினைவு கூரப்படுகின்றது. அவரது குடும்பமும், உற்றார் உறவினர்களும், அன்பர்களும் புளகாங்கிதம் அடைகின்றனர்; மகிழ்ச்சியடைகின்றனர்.

அந்த நினைவைச் சுவடாக்க அரும்பாடுபட்ட முன்னாள் அமைச்சரும், குவைத் நாட்டுத் தூதுவருமான ஏ.ஆர். மன்சூர் அவர்களுக்கும் இவ் ஏற்பாட்டுக் குழுவினருக்கும், அன்னாரது குடும்பத்தினருக்கும், எமது கல்லூரிக்கு நிழற்படத்தைத் தந்துதவிய அன்னாரது பேரர் பைஸல் சலீம் அவர்களுக்கும் எமது நன்றிகளை உரித்தாக்கின்றோம்.



# ஆசிச் செய்தி



**அல்ஹாஜ் ஏ.எச்.ஏ. பஷீர்**
அதிபர், மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை

கல்முனைத் தொகுதியின் முதற் பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான மர்ஹூம் கேற்முதலியார். எம்.எஸ். காரியப்பர் அவர்களுக்கான ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு விழாவில் வெளியிடப்படும் விசேட மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஒரு தனி மனிதரின் சேவைகளைக் கௌரவித்து முத்திரை வெளியிடுவது அம்மனிதருக்கு அரசு செய்யும் உயர்ந்த கௌரவமாக கொள்ளப்படும் எமது நாட்டில், அவ்வாறானதொரு கௌரவம் எமது பிரதேசத்தை வாழ்விடமாகக் கொண்ட இம் மண்ணின் மைந்தன் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்களுக்கு கிடைப்பது எமது பிரதேசத்து மக்களுக்குக் கிடைத்த கௌரவமாக எண்ணி நாங்கள் பெருமிதமடைகின்றோம்.

இக் கௌரவத்தை அன்னார் பெற்றுக்கொள்வதற்கு மிகமிக பொருத்தமானவர் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. கேற் முதலியார் காரியப்பர் அவர்களின் காலப்பகுதியில் இப்பிரதேசத்தின் பொருளாதார, கல்வி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, கல்லோயா நீர்ப்பாசன கட்டமைப்பு போன்றவற்றில் ஆற்றிய சேவைகள் இன்றும் நினைவுகூரப்படுவதோடு, இன்று வரை அன்னாரின் சேவைகளை அடியொற்றியே, பின்வந்த இப் பிரதேச அரசியல் பிரமுகர்கள் முன்னெடுத்துச் சென்றுள்ளனர் என்பது மிகைக் கூற்றல்ல.

இப்பிரதேசத்தின் பெரும்பாலான பாடசாலைகள் அவர்களாலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்று பெருவிருட்சமாக, கல்விக் கடலாக வியாபித்திருக்கும் கல்முனை ஸாஹிறா கல்லூரியும் அவற்றுள் ஒன்றாகும். அக் கல்லூரிக்காக தன் சொந்தக் காணியை வழங்கியமை ஒரு வாழும் சான்றாகும். மேலும், இப்பிரதேச மீன்பிடி அபிவிருத்தி, கமத்தொழில் எழுச்சி போன்றவற்றில் அவர்களின் பங்கு அளப்பரியது. கல்லோயா வேலைத்திட்டத்தின் மூலம் ஏராளமான விவசாய நிலங்களும், விவசாய குடும்பங்களும் பயன்பெற்றமையினால், இச்சேவைக்காக கேற் முதலியார் காரியப்பர் அவர்கள், இலங்கையின் முதலாவது பிரதமர் கௌரவ டீ.எஸ். சேனநாயக்க அவர்களால் வெகுவாக சிலாகித்துப் பேசப்பட்ட ஒருவராக உள்ளார்கள்.

இப்பிரதேச உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு அன்னார் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. ஒரு மூத்த அரசியல்வாதி என்ற வகையில், பின்வந்த அரசியல்வாதிகளுக்கு ஒரு முன்னுதாரணமாக திகழும் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்களுக்கு முத்திரை வெளியிட்டு கௌரவிப்பது சாலச்சிறந்தது.

இம்முயற்சியில் பெரும்பங்கு வகித்த முன்னாள் அமைச்சர் அல்ஹாஜ். ஏ.ஆர். மன்சூர் அவர்களுக்கு இப்பிரதேச மக்கள் நன்றியுடையவர்களாயிருப்பர். மேலும் இந்நிகழ்வை ஒரு பெருவிழாவாக ஒழுங்கு செய்த விழாக் குழுவினரும் பாராட்டுக்குரியவர்கள்.

கேற்முதலியார். எம்.எஸ். காரியப்பர் அவர்களின் சேவைகளை, எல்லாம் வல்ல இறைவன் பொருந்திக்கொள்வானாக. ஆமீன்!

# கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் - ஒரு சமூக சிந்தனையாளர் -



அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் M.A.
(ஓய்வு பெற்ற செயலாளர்,
முஸ்லிம் சமய, கலாச்சார அமைச்சு)

கிழக்கு மாகாணத்தின் புகழ்பெற்ற வன்னியராகவும், பின்னர் இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தினராகவும், அமைச்சராகவும் தனது வாழ்நாளில் எழுபது வருடங்களை மக்களினதும், நாட்டினதும் நலனுக்காக அர்ப்பணித்தவர் எம்.எஸ். காரியப்பர் அவர்களாவார்.

இவர் வன்னியராகக் கடமையாற்றிய காலத்தில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்கே அலுவலராயிருந்தாலும், அப்பிரதேசத்துக்கு மட்டுமே பொறுப்பான உத்தியோகத்தராகவன்றி, தென்கிழக்குப் பிரதேசத்தின் பிரதம பிரதிநிதி போன்றும், தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டவராகவும் விளங்கினார். (வன்னியனார் எனும் பதவிதான் பின்னர் பிரதேச இறைவரி உத்தியோகத்தர் (D.R.O), உதவி அரசாங்க அதிபர் (A.G.A), பிரதேச செயலாளர் (D.S) எனப் பெயர் மாற்றம் பெற்றது). எனினும், இப்பதவியாளர்களைவிட வன்னியனார் மிகக் கூடிய அதிகாரங்களைக் கொண்டிருந்தார்.

இயல்பான திறனும், பெற்ற கல்வியும், சமுதாய முன்னேற்றத்திலான அதீத அக்கறையும், இவரை ஓர் அரசாங்க அதிகாரி எனும் நிலையிலிருந்து, சமுதாயச் சிந்தனையும், தூரதிருஷ்டியுமுள்ள ஒருவராக மாற்றியிருந்தன.

## இளமைப் பராயம்

மஹ்மூத் சம்சுதீன் காரியப்பர் 1901 மே 27இல் பிறந்து, தனது 90ஆவது வயதில் 1989 ஏப்ரல் 17இல் காலமானார். தந்தையார் டாக்டர் இப்றாலெப்பை காரியப்பர், கல்முனைக்குடியைச் சேர்ந்தவர். தாயார் லைலத்துல் கத்ரியா சாய்ந்தமருதுவைச் சேர்ந்தோராவர். எனினும், இவரது முன்னோர்களில் ஒருவர் வெல்லஸ்ஸயிலுள்ள கொட்டபோவ எனும் ஊரைச் சேர்ந்தவர். ஹேர்பர்ட் வைட் என்பவரினால் எழுதப்பட்ட ஊவா வரலாற்று நூலின்படி, நெய்னா மரைக்கார் என்பவர் 1818 மார்ச் 07ஆம் திகதி காரியப்பராக நியமனம் பெற்றார். இவரது சந்ததியினருள் ஒருவர் கரைவாகுப்பற்றில் (கல்முனைப் பிரதேசம்) விவாகஞ் செய்தார்.

தனது கல்வியை எம்.எஸ். காரியப்பர் கல்முனை லீஸ் உயர்தரப் பாடசாலையிலும், கொழும்பு வெஸ்லிக் கல்லூரியிலும் பெற்றார். மெற்றிக் குலேஷன் பரீட்சையிலும், இன்டர் சைன்ஸ் பரீட்சையிலும் சித்தியடைந்து, மருத்துவத் துறையில் தனது உயர்கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்த வேளையில், வன்னியனார் (Chief Headman) வேலை அவருக்கு வழங்கப்பட்டது. அதனையேற்றுத் தமது



21ஆவது வயதில், 1921ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி பாணமைப் பற்றில் (மகாப்பிட்டி) பதவியேற்றார். அவரது இறுதிக் காலம்வரை 'மாப்பொட்டி வன்னியனார்' (பவுடர் போட்ட அழகிய முகமுடையவர்) எனும் கருத்துப்படவும் செல்லமாக மக்களால் அழைக்கப்பட்டார்.

1921இலிருந்து 1946ஜூலை 01இல் இப்பதவி அரசாங்கத்தினால் ஒழிக்கப்படும் வரை பாணமை, சம்மாந்துறைப்பற்று வேவகம் (நாடுகாடு), கரைவாகு - நிந்தவூர்ப்பற்று ஆகிய மட்டக்களப்பு தெற்கின் சகல பகுதிகளிலும் கடமையாற்றி, இலங்கையின் அதிசிரேஷ்ட முஸ்லிம் தலைமைக்காரர் என இளைப்பாறினார். மட்டக்களப்பு மாவட்டம் என்பது அக்கால கட்டத்தில் வடக்கில் வெருகல் ஆறு, தெற்கில் கும்புக்கன் ஓயா, மேற்கில் பிந்தனைப்பற்று என்பனவற்றை எல்லையாகக் கொண்ட பிரதேசமாகும்.

இக்கால் நூற்றாண்டு காலத்துள் காரியப்பர் வேறுபல மேலதிக பதவிகளையும், கௌரவங்களையும் பெற்றார். முழு மட்டக்களப்பு மாவட்டினதும் குற்றவியல், மரணவிசாரணை அதிகாரி (நியமனம்: 1921), இலங்கை வனப் பாதுகாப்புச் சபை அங்கத்தினர் (1923), சமாதான நீதவான் (1931), முதலியார் (1938), உத்தியோகப் பற்றற்ற நீதவான் (1939), மட்டக்களப்பு மாவட்டக் கல்விக் குழு அங்கத்தினர் (1940), கல்முனை கூட்டுறவுச் சங்கத்தின் சம்மேளனத் தலைவர் (1942), மத்திய விவசாய சபையின் மட்டக்களப்பு மாவட்டப் பிரதிநிதி (1944), கேற்முதலியார் (1944) என்பன அவற்றுட் சிலவாகும். இலங்கையின் ஒரேயொரு முஸ்லிம் கேற்முதலியார் இவரேயாவார்.

தனது பாடசாலைக் காலத்திலிருந்தே வரலாறு, அரசியல், இலக்கியம் ஆகியவற்றில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். வாழ்நாள் முழுவதும் மிகவும் ஒழுங்காகவும் நீண்ட நேரமும் வேலைசெய்து பழகியவர். மிகச் சிறந்த சொந்த நூலகத்தை வைத்திருந்தார்.

1978இல் சூறாவளி கிழக்கில் பேரழிவை ஏற்படுத்திய மறுதினம் அப்பிரதேச மக்களனைவரும் தத்தமது வீடுகளின் இடிபாடுகளுக்குள்ளிருந்து எஞ்சிய பொருட்களை மீட்டெடுப்பதில் ஈடுபட்டிருந்தனர். நான் அப்போது அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த கல்முனை ஸாஹிறாக் கல்லூரிக்கு அருகிலிருந்த அவரது வீட்டில் அவரைப் பார்ப்பதற்காக நானும், சில ஆசிரியர்களும் சென்றோம். காரியப்பரோ சூறாவளியோடு பெய்த கடும் மழையில் நனைந்துபோன தனது நூல்களையும் பத்திரிகை நறுக்குகளையும் மீட்டெடுத்து வெய்யிலில் காயவைத்துக் கொண்டிருந்தார். அவ்வளவு தூரம் அறிவையும் அதனை வழங்கும் நூல்களையும் நேசித்தார்.

## சமுதாயச் சிந்தனை

1940 ஜனவரி 12இல் 'எமது பொருளாதாரத் தேவைகள்' எனும் தலையங்கத்தில் காரியப்பர் சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார். மட்டக்களப்புத் தெற்கு விவசாயிகளின் சங்க மூன்றாம் வருட நிறைவு மகாநாடாக சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் முன்றலில் எம்.எம். காஸிம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இச்சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

காரியப்பரின் ஆழ்ந்த அறிவையும், அனுபவத்தையும் மக்கள் மேல் அவர் கொண்டிருந்த அக்கறையையம் தூரதிருஷ்டிப் பார்வையையும் 46 பக்கங்களைக் கொண்ட இவ்வுரை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. பிராந்திய மட்டத்தில் அல்லாது தேசிய மட்டத்திலும் நாட்டின் பொருளாதார விருத்தியைப் பற்றி அவர் சிந்தித்திருக்கிறார். நாடு சுதந்திரம் பெற்றுப் பல்லாண்டுகளுக்குப் பிறகே பலரும் கவனத்தில் எடுக்கத்தொடங்கிய பல விடயங்களைக் காரியப்பர் 1940ஆம் ஆண்டிலேயே எடுத்துக் கூறியுள்ளார். இத்தகைய விடயங்களை அன்றே ஆட்சியாளர் நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருந்தால், இன்று இலங்கை ஒரு பொருளாதாரச் சுபீட்ச நாடாகத் திகழ்ந்திருக்கும்.

**இச்சொற்பொழிவில் இடம்பெறும் விடயங்கள் வருமாறு**

**01. நெல் உற்பத்தியைப் பெருக்குதல்**

தன்னிறைவு காண்பது மட்டுமல்லாது, அரிசி ஏற்றுமதி மூலம் வெளிநாட்டுச் செலாவணியும் பெறுதல், இதற்காக நீர்ப்பாசனமுறை அபிவிருத்தி, இறக்குமதி செய்யும் அரிசிக்குச் சுங்கத் தீர்வை விதித்தல்.

**02. கல்லோயாத் திட்டத்தைத் துரிதப்படுத்தல்**

இதன் மூலம் பட்டிப்பளை ஆற்றுப்படுகை அனைத்தையும் விவசாயத்துக்கு உட்படுத்தல், 66,000 ஏக்கர் நிலத்தை நீர்ப்பாசன நெற் செய்கையின் கீழ் கொண்டு வருதலும், இருபோக வேளாண்மை செய்தலும்.

03. நெல்லுக்கான உத்தரவாத விலை

**04. விவசாயிகளுக்கான கடனுதவிகளை வழங்குவதற்கான வங்கிகளை ஆரம்பித்தல்**

வட்டிக்குக் கடன் வழங்குவதற்கான பிடியிலிருந்தும், நிரந்தரக் கடன், வறுமை என்பனவற்றிலிருந்தும் விவசாயிக்கு விடுதலை வழங்க ஒரே வழி இதுவாகும்.

**05. கால்நடை வளர்ப்பை ஊக்குவித்தல்**

இதன் மூலம் பல்வகைப் பிரயோசனமடைதல், சகலருக்கும் பால், தயிர், இறைச்சி, உழவு, வண்டில் போக்குவரத்து பசளை, தோல் ஏற்றுமதி.

06. மேய்ச்சல் தரை

07. கூட்டுறவு இயக்கம்

**08. நெசவு அபிவிருத்தி**

இலங்கையின் மிகப்பெரிய நெசவாலையை மருதமுனையில் நிறுவுதல், அவர்களை இந்தியாவுக்கு விசேட பயிற்சி பெற அனுப்புதல்.

**09. மீன்பிடி அபிவிருத்தி**



இதன் முக்கியத்துவம் யாதெனில் இவ்விடயங்களின் அவசியம் பலரால் உணரப்படுவதற்குப் பல தசாப்தங்கள் முன்னதாகவே காரியப்பர் அவற்றைப் பற்றிச் சிந்தித்தும், கூறியும், செயற்படுத்தியும் வந்திருக்கிறார்.

**பொருளாதார வளர்ச்சி**

காடாகக் கிடந்த பகுதிகளைக் களனியாக்கும் பணியிற் காரியப்பர் பெரும் பங்கு வகித்திருக்கிறார். அப்போதைய மட்டக்களப்பு அரசாங்க அதிபராகவிருந்த சீ.வீ. பிரய்ன் என்பார் இதற்கான ஊக்கத்தை வரைவின்றி வழங்கியதன் காரணமாகப் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் காட்டுநிலம் வயல் வெளியாகியது.

பாணமைப் பற்று வன்னியராயிருக்கும்பொழுது செல்வி, சோர் டெயின்ஸ் என்பவருக்குச் சொந்தமான நிலத்தைக் கொள்வனவு செய்து அப்பிரதேச சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளித்தார்.

இதேபோன்று பொத்துவில் மக்களுக்குத் தலா 05 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட ஒரு பகுதி இன்றும் 'பிரெய்ன் துரைக்கண்டம்' எனும் பெயரில் வழங்கி வருகிறது. இவ்வாறு நிலப் பங்கீடு செய்யப்படுவதற்கு முற்பட்ட காலத்தில் பொத்துவில் நிலப் பிரதேசத்திற் பெரும்பகுதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மார்க்கண்டு முதலாளிக்கும், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பலவன்கானுக்கும் சொந்தமாயிருந்தன.

விண்ணாங்கடி நிலப் பிரதேச அபிவிருத்தி, மஹாகண்டியத் திட்டம் என்பன காரியப்பரது முயற்சிகளின் பலனேயாகும்.

வீரமுனை சிந்தாத்துரைப் பிள்ளையார் கோவிலுக்கு 110 ஏக்கர் நிலமும், கல்லாறு பிள்ளையார் கோவிலுக்கு 100 ஏக்கர் நிலமும் கிடைக்கச் செய்தார்.

இவ்வாறு சாதி, மத, இன, பிரதேசப் பாகுபாடற்ற முறையில் அவர் தனது சேவைகளைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளதைக் காண்கிறோம். அனைத்து சமுதாயத்தினரதும் பொருளாதார வளத்தை மேம்படுத்துவதே அவரது நோக்காக இருந்தது.

கிழக்குப் பிரதேசத்தின் முதலாவது விவசாய விழா 1943இல் கல்முனையில் நடைபெற்றது. இதனை ஏற்பாடு செய்த குழுவின் தலைவராக கல்முனை கச்சேரிக்குப் பொறுப்பாயிருந்த உதவி அரசாங்க அதிபர் ஏ.எம்.ஏ. அஸீஸும், செயலாளராகக் காரியப்பரும் மிகத் திறமையாகச் செயற்பட்டனர்.

பொலநறுவை பராக்கிரம சமுத்திரப் புனரமைப்பிலும் காரியப்பரின் பங்களிப்புப் பெருமளவு உண்டு. இப்பணி தொடங்கியவுடன், அதற்குப் போதிய தொழிலாளர்களைப் பொலநறுவைப் பிரதேசத்திற் பெறமுடியவில்லை. தென்பகுதியில் இருந்து சிங்களத் தொழிலாளரும் வருவதற்குத் தயங்கினர். இடதுசாரி இயக்கத்தினர் நகரப் புறங்களில் கைத்தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமெனும் கொள்கையைக் கொண்டிருந்தனர். அதனால் இத்தொழிலாளர் பொலநறுவைக் காட்டுப் பகுதிக்குச் சென்றால் மலேரியாவால் பீடிக்கப்பட்டு மரணித்து விடுவர் எனப் பிரச்சாரம் செய்தனர்.

எனினும், காரியப்பரின் தூண்டுதலின் பெயரால் கிழக்குப் பிரதேசத் தொழிலாளர் பெருந்தொகையில் பராக்கிரம சமுத்திரப் புனரமைப்பில் பங்குபற்றினர். அதனால் அவர்களும் தொழில் வாய்ப்புப் பெற்றதோடு, பாரிய விவசாயத் திட்டம் ஒன்று நிறைவேறவும் உதவினர். அவ்வாறு சென்றவர்களுட் சிலர் புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தில் நிரந்தரத் தொழில் பெற்றதோடு, மேலும் சிலர் தம்பாளை போன்ற பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களிலும் குடியேறினர்.

எனவே, அரசியலில் அவர் ஈடுபாடு கொள்ளத் தொடங்கிய வெகுகாலத்துக்கு முன்பிருந்தே மக்கள் தொண்டனாகப் பணியாற்றியிருக்கிறார். அரசாங்கப் பதவிக் காலத்தில், வெறும் உத்தியோகத்தனாக மட்டும் விளங்கவில்லை. விவசாய விருத்தி முன்னோடியாக, கல்வித்துறை வளர்ச்சியில் அக்கறையுடையவராக, சமுதாய முன்னேற்றத்துக்கு உழைப்பவராக விளங்கியிருக்கிறார்.

## அரசியல் பணி

இத்தகைய பணிகளிலீடுபட்ட ஒருவரை அடுத்த அரை நூற்றாண்டு காலத்துக்குத் தமது அரசியல் தலைவராக அம்மக்கள் ஏற்றுக்கொண்டமை இயல்பானதே. இலங்கை சுதந்திரமடைந்தவுடன் அவர் தேசிய அரசியலுக்கு வந்தார். 1947இல் நடைபெற்ற இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் கல்முனைத் தொகுதியின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போதைய கல்முனைத் தொகுதியானது இன்றைய கல்முனை, சம்மாந்துறை, அம்பாரைத் தொகுதிகளை உள்ளடக்கியது. அம்முறை அத்தொகுதியில் இவரும் பிறிதொருவருமாக இருவர் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டனர். அதனால்தான் பிறிதொரு சந்தர்ப்பத்தில் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியமைக்காக விளக்கம் கோரப்பட்டபோது, "எனக்குக் கட்சியின் அரை டிக்கட்டே கிடைத்தது; ஆகவே நான் அரைக் கட்சிக்காறன்" எனப் பதிலளித்தார்.

## அவர் பாராளுமன்றத்தில் வகித்த பதவிகள் வருமாறு

உள்நாட்டலுவல்கள், கிராம அபிவிருத்தி அமைச்சின் பாராளுமன்றச் செயலாளர் (1947), கல்முனைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் (1956), நீதி அமைச்சின் பிரதி அமைச்சர், தபால், தந்தி அமைச்சர் (1959), கலாச்சார, சமூக சேவை அமைச்சர் (1960), பாராளுமன்ற அங்கத்தினர் (1960 மார்ச்), பாராளுமன்ற உறுப்பினர் (1965), கல்முனைப் பட்டினசபைத் தலைவராகவும் (1952) கடமையாற்றி உள்ளார்.

இந்நாட்டின் முதலாவது முஸ்லிம் அரசியல் கட்சியை ஆரம்பித்தவரும் காரியப்பரேயாவார். 1960இல் அகில இலங்கை இஸ்லாமிய ஐக்கிய முன்னணியை அவர் நிறுவினார். இதன் சின்னம் உதயசூரியன் ஆகும்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற எல்லா முக்கிய விவாதங்களிலும் சிறப்பாக உரையாற்றியிருக்கிறார். அவரது உரைகள் மிகவும் ஆழமானதும், அகன்றதுமாகும்.

அவர் தனது சேவைகளைத் தனது தொகுதிக்கு மட்டும் மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. தனது அனுபவம், அரசியல் அதிகாரம், ஆளுமை அனைத்தையும்



ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், தபாலகங்கள், நூல் நிலையங்கள், ச... சங்கங்கள், வீட்டுத் திட்டங்கள், மின்சார விநியோகம், வீதிகள், ... அமைத்தல், தொழில்வாய்ப்புக்கள், கைத்தொழில் அபிவிருத்தி என்ப... செலவிட்டார்.

அம்பாரை மற்றும் நெய்னாகாடு ஆகிய இடங்களில் உள்ள பள்ளிவாசல்களைக் கட்டுவதில் முன்னின்றார்.

## கல்லோயாத் திட்டம்

கல்லோயாத் திட்டம் உருப்பெறுவதிலும், பூரணத்துவம் அடைவதிலும் காரியப்பர் பெரும் பங்கு செலுத்தினார். இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ். சேனநாயக்க 1951 ஜுன் 11ஆம் திகதி அம்பாரையில் வைத்து விடுத்த அறிக்கை பின்வருமாறு கூறுகிறது.

*"1951 ஜுன் 10ஆம் திகதி கல்லோயாப் பிரதேசத்துக்கு விஜயம் செய்து அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிட்டேன். விரைவில் பூர்த்தியாகக் கூடியவாறு இத்திட்டம் வேகமாக நிறைவேறிக் கொண்டிருக்கிறது. இத்திட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே இதனை நிறைவேற்றுவதில் கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் கொண்டுள்ள அதீத அக்கறையை நினைத்துப் பார்க்கிறேன். இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் அணை கட்டப்படும் இடத்தில் முதலாவது மரத்தினை நான் வெட்டி இன்றுடன் பத்து வருடங்களாகின்றன.*

*இப்பணியில் என்றுமே துயிலாத காரியப்பர், அது நிறைவேறுவதையிட்டு மிகவும் சந்தோசமுடைய மனிதராக இருப்பார். அவரும் நானும் இணைந்து எமது கனவை நனவாக்கி விட்டோம்."*

எனினும் காரியப்பரின் கனவில் ஒரு பகுதி நிறைவேறாமற் போய்விட்டது. கல்லோயாக் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது, அம்மாவட்டக் கரையோரப் பிரதேச மக்கள் அங்கு குடியேறுவதற்கு முன்னுரிமை வழங்கப்படுமென டி.எஸ். சேனநாயக்க பகிரங்கமாக அறிவித்தார். காரியப்பர் போன்றவர்கள் அம் மக்களை அங்கு செல்வதற்கு ஊக்கப்படுத்த வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினார். அவ்வாறு அவர்கள் செல்லாவிட்டால், பிற மாகாணத்தவர் அங்கு வந்து குடியேறுவர் எனவும் எச்சரித்தார். (சிலோன் டெயிலி நியூஸ், சனிக்கிழமை, 1941 மே 3).

இருப்பினும், கொலனிகளில் குடியேறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது கரையோரப் பிரதேச முஸ்லிம்களும், தமிழரும் அக்கறை காட்டவில்லை. தத்தமது ஊர்களில் போதிய நில வசதியிருந்ததும், ஊரை விட்டுக் குடிபெயரும் கௌரவப் பிரச்சினையும் தடையாயிருந்தன. அதனால், தலா 150 வீடுகளையும் ஒவ்வொரு வீட்டுக்கும் 05 ஏக்கர் நிலத்தையும் கொண்ட 36 கொலனிகளில், கொலனிகள் இலக்கம் 4, 5, 6, 11, 12, 13, 15 என்பனவற்றுக்கு மட்டுமே இவர்கள் சென்றனர். அவர்களிலும் சிலர் மீண்டும் தமது ஊர்களுக்கே திரும்பி வந்து விட்டனர். அரை நூற்றாண்டுக்கு முன்னர், எம்மவர் அதிகளவில் இக்கொலனிகளுக்குச் சென்றிருந்தால், இன்று சாய்ந்தமருது, கல்முனைக்குடி,

மருதமுனை எனும் ஊர்கள் அனுபவிக்கும் பாரிய இடநெருக்கடி ஏற்பட்டிருக்கவே மாட்டாது.

## கல்விச் சிந்தனையும் செயற்பாடும்

அறிவுத்துறையில் ஆழ்ந்த ஈடுபாடும் பற்றும் அனுபவமும் கொண்டிருந்த காரியப்பர் கல்வித்துறை வளர்ச்சியிற் காட்டிய கரிசனை இயற்கையானதே. வன்னியனாராகக் கடமையாற்றிய காலத்திலேயே பல பாடசாலைகளை ஆரம்பிப்பதில் முன் நின்றார். அதிலும் குறிப்பாகப் பெண்கல்வியில் மிகவும் அக்கறை காட்டினார். அவர் வன்னிமையாக இருக்கும்பொழுது ஆறு பாடசாலைகளையும், அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையையும், பாராளுமன்ற அங்கத்துவ காலத்தில் 13 பாடசாலைகளையும், சாய்ந்தமருது, கல்முனைக்குடி, சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, மருதமுனை ஆகிய ஊர்களில் மொத்தம் 19 பாடசாலைகளையும், ஒரு ஆசிரியர் கலாசாலையையும் உருவாக்கினார்.

கல்முனை ஸாஹிறாக் கல்லூரியின் ஸ்தாபகர் இவரேயாவார். தனது சொந்த நிலத்தை அன்பளிப்பாக வழங்கி சாய்ந்தமருது ஆங்கிலக் கனிஷ்ட பாடசாலையை 1949இல் நிறுவினார். இது பின்னர் மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது. 1967இல் இக்கட்டுரையாளர் அதன் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் கல்முனை ஸாஹிறாக் கல்லூரி எனும் நாமத்தைப் பெற்றது.

கிழக்கில் ஆசிரியர் கலாசாலை ஒன்றை நிறுவுவதிலும் காரியப்பர் மிகவும் அக்கறை செலுத்தினார். இதனை முதலில் கல்முனையில் நிறுவுவதாகவே தீர்மானிக்கப்பட்டாலும் பின்னர் அட்டாளைச்சேனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. ஆசிரியர் கலாசாலை நிறுவுவதில் கேற்முதலியார் காரியப்பரின் பங்களிப்பினை அப்போதைய அரசாங்க சபையின் மட்டக்களப்புத் தெற்குத் தொகுதியின் அங்கத்தினராயிருந்த எஸ். தர்மரெத்தினம் அவர்கள் 01.02.1941இல் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதம் தெளிவாகக் காட்டுகிறது. (அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையின் 1983ஆம் ஆண்டைய கலை அமுதம் சஞ்சிகையின் பக்கம் 3 – 6இல் இக்கடிதம் முழுமையாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது).

1950களில் தமிழர் பெரும்பான்மைப் பாடசாலைகள், முஸ்லிம் பெரும்பான்மைப் பாடசாலைகள் எனும் பிரச்சினை தோன்றியது. இதனைத் தீர்க்கும் முகமாகக் கல்வி அமைச்சர் டபிள்யூ. தஹநாயக்க 1958 மார்ச் 27இல் முஸ்லிம் மற்றும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் மகாநாடொன்றினைத் தனது அமைச்சில் நடத்தினார். இம்மகாநாட்டில் முஸ்லிம் தூதுக் குழுவின் பிரதம பேச்சாளராய் காரியப்பர் இருந்தார். இம்மகாநாட்டில் முஸ்லிம் பாடசாலைகள் யாவை, தமிழ்ப் பாடசாலைகள் யாவை எனும் தீர்மானம் தீர்க்கமாகச் செய்யப்பட்டு இன்றுவரை அது நடைமுறையில் இருந்து வருகிறது.

இம்மகாநாட்டிலே முஸ்லிம் பாடசாலைகளை மேற்பார்வை செய்யப் போதிய பரிசோதகர்கள் நியமிக்கப்பட வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்தார். அவர் பின்வருமாறு பேசினார். "தற்போது 285 அரசாங்கத் தமிழ்ப் பாடசாலைகளை மேற்பார்வை செய்ய 35 பரிசோதகர்களும், 325 முஸ்லிம் பாடசாலைகளை



மேற்பார்வை செய்ய 02 பரிசோதகர்களுமே உள்ளனர். இவர்களுள் ஒருவர் தலைமை அலுவலகத்தில் நிர்வாகப் பணியில் ஈடுபட்டுள்ளார். மற்றவர் விரைவில் ஓய்வு பெறும் வயதை அடைந்துள்ளார். எனவே, உடனடியாகப் போதிய முஸ்லிம் பரிசோதகர்கள் நியமிக்கப்படல் வேண்டும்." இக்கோரிக்கை ஏற்கப்பட்டு அவ்வாறான பரிசோதகர் நியமனம் விரைவில் ஆரம்பமாயிற்று.

கிழக்குப் பல்கலைக்கழகம் நிறுவுவது தொடர்பான அப்பாப்பிள்ளை ஆணைக்குழு தனது விசாரணைகளை நடத்தும் பொழுது அக்குழு முன்பாக மிக விபரமான அறிக்கையைச் சமர்ப்பித்தவர் காரியப்பரே ஆவார். இவ் ஆணைக்குழு தென்கிழக்குப் பிரதேசத்தின் தூதுக்குழுக்களை அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் சந்தித்தது. அவ்வேளையில் இரு முக்கிய மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டன. ஒன்று காரியப்பரினாலும் அடுத்தது கல்முனை ஸாஹிறாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினாலும் சமர்ப்பிக்கப்பட்டன. கிழக்கில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவுவதாயின், அதனைக் கல்முனைப் பிரதேசத்திலேயே நிறுவுதல் வேண்டுமென இரு மகஜர்களும் வாதிட்டன. காரியப்பர் தனது அனுபவம் அனைத்தையும் உபயோகித்து, அவரது கருத்துக்களுக்கு எவரும் எத்தகைய மறுப்பும் கூறமுடியாதவாறு, கல்முனைப் பிரதேசமே கிழக்கின் பல்கலைக்கழகத்துக்கு மிகப் பொருத்தமான இடமென மிக ஆணித்தரமாக எடுத்துரைத்தார். அப்பாப்பிள்ளை ஆணைக்குழு முன் சமர்ப்பிக்கப்பட்ட சுமார் 75 மகஜர்களுள், அவர்களது அறிக்கையில் மிக விஸ்தாரமாக ஆராயப்பட்டுள்ளது காரியப்பர் அவர்களின் மகஜரேயாகும்.

மேற்போந்த வகைகளிலெல்லாம் அவர் ஏழு தசாப்தங்கள் தனது பிரதேசத்தினதும், நாட்டினதும் நன்மைக்காகத் தனது வாழ்நாளைப் பூரணமாக அர்ப்பணித்தார்.

இலங்கையின் ஒருமைப்பாடு, ஒற்றுமை, சுபீட்சம் என்பனவற்றில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். அதனால்தான் 1940ஆம் ஆண்டு மட்டக்களப்பு தெற்கு விவசாயிகள் சம்மேளனத்தில் உரையாற்றும்பொழுது, இந்நாட்டு முஸ்லிம்கள், ஏனைய சிங்கள மற்றும் தமிழ்ச் சமூகங்களுடன் மிக நெருங்கிய ஒற்றுமையுடன் செயற்பட வேண்டுமென அறிவுரை வழங்கினார்.

கிழக்கு மாகாண மக்களுடனேயே என்றும் அவர் வாழ விரும்பினார். அதனால்தான் கொழும்பில் தனக்கென ஒரு வதிவிடத்தை அவர் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அத்துடன் நாட்டுக்கு வெளியே செல்லவும் அவர் விரும்பவில்லை. அதனால்தான் பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராக அவருக்கு நியமனம் வழங்க அரசாங்கம் முன்வந்தபோது அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. தனது நாட்டில், தனது மக்களுடன் வாழ்ந்து அவர்களுக்குச் சேவை செய்யவே விரும்பினார். அதனால்தான் அவரது நாமம் என்றும் மக்கள் மனதில் நிலைத்திருக்கிறது.

# மர்ஹூம் கேற்முதலியார் எம்.எஸ்.காரியப்பர் JPUM அவர்கள் பற்றிய சில நினைவுகள்



அதிபர்மணி அல்-ஹாஜ்
M.I. கோஸ்முஹம்மது

கேற்முதலியார் எம்.எஸ்.காரியப்பர் அவர்கள், 1921ஆம் ஆண்டு முதல் மூன்று தசாப்தங்களாக பொத்துவில் பாணமைப்பற்று, சம்மாந்துறைப்பற்று, கரைவாகுப்பற்று ஆகிய பிரதேசங்களுக்கு வன்னிமை முதலியாராகக் கடமையாற்றினார்.

வன்னிமை என்பது அக்காலத்தில் தற்போதைய பிரதேச செயலாளர் பதவிக்கு சமனான ஒரு பதவியாகும். எனினும் அக்கால வன்னிமைகளுக்கு இருந்த அதிகாரம் குறுநில மன்னர்களுக்கு இருந்ததை ஒத்ததெனலாம்.

இவர் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சரளமாகப் பேசக்கூடிய வல்லமையைப் பெற்றிருந்தார். இவரது மேடைப்பேச்சுக்கள் நளினமானதாகவும், கேட்போரை வசீகரிக்கக் கூடியதாகவும் அமைந்திருக்கும்.

உதாரணத்திற்கு 1947களில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பிரச்சாரப் பேச்சுக்களைக் குறிப்பிடலாம். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் பேசும் போது "இன்று வரை குடியானவனின் அம்மிக்கல்லை, அரசாங்கத்தின் கோழி முட்டை உடைத்துவிடும் என்று நம்பியிருந்தீர்கள் ஆனால் என்னை பாராளுமன்றத்திற்கு அனுப்பினால் குடியானவனின் கோழி முட்டையைக் கொண்டு அரசாங்கத்தின் அம்மிக்கல்லை உடைக்கச் செய்வேன்" என்று சூளுரைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

1940களில் "அகில இலங்கை முஸ்லிம் லீகின் தென்பகுதிக் கிளை" ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன் தலைவராக கேற்முதலியார் எம்.எஸ்.காரியப்பர் அவர்களும், செயலாளர்களாக மருதமுனை புலவர்மணி அல்-ஹாஜ் ஏ.எம். சரிபுத்தீன், சம்மாந்துறை எம்.இப்றாலெப்பை அவர்களும் சேவையாற்றினார்கள்.

அக்காலகட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கிராமங்களின் சுகாதாரம், கல்வி, விவசாயம் போன்ற அத்தியாவசிய தேவைகளின் குறைபாடுகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற் குறிப்பிட்ட முஸ்லிம் லீக் கிளை அமைப்பே மேற்கொண்டு வந்தது.

அத்துடன் அட்டாளைச்சேனையில் ஆசிரிய பயிற்சிக்கல்லூரி அமைவதற்கான முயற்சியிலும் இவ்வமைப்பு ஈடுபட்டது.

1945களில் அம்பாறை மாவட்ட விவசாயக் கிராமங்கள் வறுமைக் கோட்டின்கீழ் தங்கியிருப்பதைக் கண்ணுற்ற அப்போதிருந்த அரசாங்கம் அக்கிராமங்களின் விவசாயப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கமாக, கிராமங்கள் தோறும் "விவசாய ஐக்கிய விளை பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களை" அமைத்துக் கொடுத்தது.



விவசாயிகளுக்கு இச்சங்கங்களை புதிவு செய்து கொடுத்ததன் மூலம், அவர்களின் வறுமையை போக்குவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர் கேற்முதலியார் எம்.எஸ்.காரியப்பர் அவர்களாகும். இச்சங்கங்கள் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை உத்தரவாத விலையில் பெற்றுக் கொண்டதனால் பெரும் பயனடைந்தனர்.

இச்சங்கங்கள் உருவாவதற்கு முன்னர், விவசாயிகள் காத்தான்குடி, ஆரையம்பதி ஆகிய ஊர்களில் உள்ள பணக்காரர்களிடம் வட்டிக்குப் பணம் பெற்று தங்களது தேவையை பூர்த்தி செய்து வந்தனர். குறிப்பிட்ட காலத்திற்குள் கடனையும், வட்டியையும் செலுத்தத் தவறினால் அதற்கு ஈடாகக் கொடுத்த நிலபுலன்கள், பணம் கொடுத்தவருக்கு சொந்தமாகிவிடும்.

ஏழை விவசாயிகளின் நில புலன்களை விழுங்கும் இத்தகைய பண முதலைகளிடமிருந்து அவர்களை காப்பாற்றும் நோக்கமாகவே விளை பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

கேற்முதலியார் எம்.எஸ்.காரியப்பர் அவர்கள் 1947ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். அவருடன் சட்டத்தரணி எம்.ஏ.எல். காரியப்பர் அவர்களும், கணபதிப்பிள்ளை என்பவரும் தேர்தல் களத்தில் இறங்கினார்கள். இருந்தாலும் இவருடைய மேடைப்பேச்சின் திறமையினாலும், இவரின் உடலமைப்பின் அழகினாலும் இவரை மக்கள் தங்கள் உறுப்பினராக தெரிந்து கொண்டனர்.

அவர் பாராளுமன்றம் சென்றதும் உள்ளூராட்சி பிரதி அமைச்சராக பதவியேற்றுக் கொண்டார். அப்பொழுதெல்லாம் பாராளுமன்றத்தில் பேசும் திறமையினால் அவரை சபாநாயகர்கூட புகழ்ந்து பேசிய சந்தர்ப்பங்கள் பல உண்டு. ஏன்! ஒரு முறை சபாநாயகர் மொலமுரே அவர்கள் கேற்முதலியார் எம்.எஸ்.காரியப்பரின் பேச்சு விகடம் பொருந்தியதாகவும், ஆச்சரியத்துக்குரியதாகவும் இருப்பதால் சபை சோர்வடையும் வேளைகளில் பேசுவதற்கு அழைத்திருக்கின்றேன் என்று கூறியது எனது ஞாபகத்திற்கு வருகின்றது.

"சேனநாயக்க சமுத்திரம்" என அழைக்கப்படும் குளத்தை உருவாக்குவதற்கு கல்ஓயா அணைக்கட்டை அமைப்பதற்கு, கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர், தேசபிதா டீ.எஸ். சேனநாயக்காவுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தார். 1941இல் மரம் ஒன்றை வெட்டி திட்டத்தை ஆரம்பித்து வைக்குமாறு கேட்டபோது டி.எஸ். சேனநாயக அவர்கள், அவரிடம் கொடுத்த ஆயுதத்தை கேற்முதலியார் எம்.எஸ்.காரியப்பரிடம் கொடுத்து "*நீர்தான் இத்திட்டத்தின் தந்தை ஆதலால் நீரே இம்மரத்தினை வெட்ட வேண்டும்*" என்று கூறியதன் மூலம் டீ.எஸ். சேனநாயக்கா அவர்கள் கேற்முதலியார் எம்.எஸ்.காரியப்பர் அவர்களிடம் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தார் என்பதை நாம் விளங்கிக் கொள்ளமுடியும்.

"உண்மைகள் உறங்கக் கூடாது: உறங்கவிடவும் கூடாது" என்ற கருத்திற்கேற்ப இங்கு எனது நினைவுகளை தருகின்றேன்.

சேவைச் செம்மல் கேற்முதலியார் எம்.எஸ்.காரியப்பர் அவர்கள், தனது ஆகிரா வாழ்வில் "ஜென்னதுல் பிர்தௌஸ்" என்ற சுவனத்தில் உலாவர எல்லாம் வல்ல ரஹ்மான் நல்லருள் பாலிக்க வேண்டுமென்ற பிரார்த்தனையோடு விடைபெறுகின்றேன்.

# சமூக உறவுக்குப் பாலமமைத்த
# கேற்முதலியார் எம்.எஸ்.காரியப்பர்



**வடிவேல் பிரபாகரன்**
B.Sc. Dip. in Ed., PGDEM, Dip. C.S.
அதிபர், உவெஸ்லி உயர்தரப் பாடசாலை, கல்முனை

இலங்கையின் புகழ்பூத்த கல்விமான், அரசியல்வாதி, தமிழ்-முஸ்லிம் இன உறவுக்கு பாலம் அமைத்த ஜனாப் கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பருடைய வாழ்வுக்கும் பணிக்கும் நன்றி செலுத்துகின்ற இந்த நாட்களில் அவர் சம்பந்தமாக வெளியிடப்படுகின்ற மலருக்கு அவர் கற்ற பாடசாலையின் அதிபர் என்கின்ற வகையில் இந்நாட்களில் நன்றிப் பூக்களை சொரிகின்றேன்.

125 வருடகால கல்முனை உவெஸ்லியின் வரலாற்றை மீட்கும்போது அது 1883ல் தொடங்கப்பட்ட பெண்கள் விடுதி பாடசாலை *(Girls Boarding School)*, இப்பாடசாலையின் வரலாற்றின் தொடக்கமாகவும் பெண்களுக்கான தமிழ்மொழி மூல கல்வியின் அத்திவாரமாகவும் அமைந்தது. 1901ம் ஆண்டு தொடங்கப்பட்ட லீஸ் உயர்தரப் பாடசாலை (Leese High School) ஆண்களுக்கான ஆங்கில மொழி கல்வியை இப்பிரதேசத்தில் கட்டி வளர்த்தது எனலாம். அதே ஆண்டிலேயே 27-05-1901ல் எம்.எஸ். காரியப்பர் பிறந்தார். அவரது பெரிய தகப்பனார் ஏ.கே. காரியப்பர் இப்பாடசாலையின் தோற்றத்திற்கு உதவினார் என்றும் அறிகின்றோம்.

இப்பாடசாலையை தொடங்கிய Rev. Gabireal Leese அவர்கள், இலண்டன் திருச்சபைக்கு எழுதிய கடிதத்தில், "நீங்கள் அனுப்பிய 2500 ரூபாய் கிடைத்தது. அதேவேளை நான் உள்ளூரிலேயே 2000 ரூபாய் சேகரித்து கட்டிடம் அமைக்கின்ற பணியில் மீதி 500 ரூபாய் என்னிடம் உள்ளது" என எழுதியிருப்பதிலிருந்து அந்நாட்களில் வாழ்ந்த பல தனவந்தர்கள் இதற்கு உதவி புரிந்திருக்கிறார்கள் என்றும், அவர்களில் ஒருவராக ஏ.கே. காரியப்பர் உதவி புரிந்திருக்கலாம் எனவும் நம்புகிறேன். ஏனெனில், தற்போதும் பள்ளப்பகுதியாக இருக்கின்ற எமது பாடசாலையின் முன்பகுதியில் வண்டில்கள் மூலமாக மண் ஏற்றி அதனை நிரப்ப அவர் உதவினார் என்று அறிகின்றபோது எம்.எஸ். காரியப்பரின் பெரிய தகப்பனாரின் கல்விக்கான பங்களிப்பு, அக்கறை விளங்குகின்றது.





| | |
|---|---|
| **கே** | கேள்வி அறிவு ஆய்வில் கலங்கரை |
| **ற்** | கற்றாரை கனமாக்கி களிப்புறநே சிப்பவர் |
| **மு** | முத்தான முத்தாக முழுமையும் பெற்றவர் |
| **த** | தன்னிகரற்ற தனிப்பெரும் தலைவர் |
| **லி** | நலிவுறாது நல்லன நயம்பட புரிபவர் (புரிந்தவர்) |
| **யா** | யாதும் ஊரே யாவரும் கேளீர் என சேவைகள் செய்தவர் |
| **ர்** | நேர்மையும் நுண்ணாய்வும் நயம்பட பெற்றவர் |
| **எம்** | எம்மவர் ஏற்றிப் போற்ற எழிலுற வாழ்ந்தவர் |
| **எஸ்** | சுற்றம் பேணி சாதனை புரிந்த சான்றோன் |
| **கா** | காரியப்பர் ஆய்வு காரியங்கள் செய்தவர் |
| **ரி** | அரிய பெரிய அறம்பல புரிந்த ஆய்வாளர் |
| **ய** | ஐயம் திரிபற அழகாற்றல் அணிந்த அண்ணல் |
| **ப்** | எப்போதுமே தப்பேதும் புரியாத பண்பாளர் |
| **ப** | பண்பும் பாசமும் பக்தியும் விசுவாசமும் பூண்டவர் |
| **ர்** | ஆர்வமும், ஆய்வும், நேர்மையும் அழகுற கொண்டோர் |

**பளீல் மௌலானா**

# இதயத்தில் வாழுகின்ற எம்.எஸ்.



தான்பிறந்த மண்ணுக்குத் தன்னை ஈந்து
தளராது பல்லாண்டு சேவை செய்து
வானுயரப் புகழ்கொண்டு மக்கள் நெஞ்சில்
வாழுகிறார் இன்னும் எம்.எஸ். காரியப்பர்
ஞானமிகு தலைவரென மதிக்கப் பெற்றார்
நல்லபல திட்டங்கள் அரசோடொன்றி
ஆனதெல்லாம் செய்தார்தம் மக்க ளுக்கு
ஆட்சிப்பலம் கொண்டிருந்த காலப் போழ்தே

கிழக்கினிலே முஸ்லிம்கள் கல்வி தன்னிற்
கோலோச்ச வேண்டுமெனக் கல்விக் கூடம்
பலதோன்றக் காரணரே எம்.எஸ். என்றால்
பொய்யில்லை சத்தியமே புகழ்ச்சொல் லன்று
விழிபோன்றாம் கல்வியென வரித்த தாலே
வாழ்புலத்தைக் கற்றவரால் நிறைக்க எண்ணி
முழுமூச்சாய்ப் பாடுற்ற செய்கை இன்றும்
மதித்துணரப் படுவதுவோர் மறவாச் சீர்மை

இனத்தளவில் முஸ்லிம்கள் சேர்ந்து வாழ
இடையூறு இலாதிருக்க வேண்டும் என்றே
தனித்திருந்த மருதமுனைக் கிராமந் தன்னைத்
சேர்த்தெடுத்தார் தனைச்சார்ந்த தொகுதி யோடே
இணைத்ததொடு மட்டுமன்றி ஆங்குங் கல்வி
ஏற்றமுற ஓரேநாளில் நான்கு பள்ளி
முனைப்புறவும் செய்ததவர் முயற்சி கொண்ட
வெற்றிக்குப் பலனாகும் மறக்க லாகா

நீர்வளத்தைப் பெருக்கிவயல் செழித்து மக்கள்
தன்னிறைவு தானியத்தில் பெறவென் றெண்ணி
ஆர்வமுடன் செயல்பட்டார் கல்லோ யாவில்
அரசாங்கம் அணைகட்டி நீர்தேக் கிற்று
கார்மேகம் பொழியுவரை காத்திருந்த
களனிகளும் அவர்செயலால் செழித்த தின்றும்
பேர்நிலைக்கும் பணியஃதாம் எம்.எஸ் செய்த
பணிகளிலே உச்சமது பிறவும் உண்டாம்

நன்றியோடு மக்களாட்சி தபாற்தலையில்
நினைவுகூர்ந்து உருப்பொறித்துக் கடமை தீர்க்கும்
பொன்றாத புகழ்கொண்ட பேரினுக்குப்
பொருந்துகின்ற செயல்: தலைவர் "இராஜ பக்ஷ"
என்றென்றும் தொகுதிமக்கள் நினைவில் வாழ்வார்
எம்.எம்.எஸ் காரியப்பர் பேரால் செய்த
நன்றிகொண்ட செயலதனால் இன்னும் இன்னும்
எம்மவரைக் கௌரவிப்பார் இதயங் கொள்வோம்.

ஜின்னாஹ் ஷரிபுத்தீன் — மருதமுனை



# என்றும் வாழும் கேற்முதலியார் ...



A. முஹைறயதீன் பாவா JP
(A.M. ஹுஸைன்) (முன்னைநாள் கல்முனைப் பட்டினசபைத் தலைவர்.)
(கல்முனை முஹைறயதீன் ஜும்ஆ பள்ளி நிருவாக சபை முன்னைநாள் தலைவர்)
(ஹயாத்துநபி குடியிருப்பு ஜும்ஆ பள்ளிவாசல் நிருவாக சபை முன்னைநாள் தலைவர்)

கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் 1921ம் ஆண்டிலிருந்து 1946ம் ஆண்டுவரை பொத்துவில் மகாபிட்டி, சம்மாந்துறை, நாடுகாடுப்பற்று, கரைவாகு நிந்தவூர்ப்பற்று ஆகிய பிரதேசங்களில் சுமார் 25 வருடங்கள் வன்னிமையாகக் கடமையாற்றி, 1947ல் பாராளுமன்றம் சென்று அங்கும் பல வருடங்கள் கல்முனைத் தொகுதியின் பாராளுமன்றப் பிரதிநிதயாகக் கடமையாற்றி 1989ல் மௌத்தானார்கள்.

அன்னார் இப்பிரதேசத்தில் விவசாயம், கல்வி, கடற்றொழில், வேறு பல பொதுத்துறைகளிலும் அளப்பெரிய சேவையாற்றினார். அவரது ஞாபகமாக முன்னாள் வர்த்த, வாணிபத்துறை அமைச்சர் அல்ஹாஜ் ஏ.ஆர். மன்சூர் அவர்களது முயற்சியினால் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களது அரசாங்கம் ஞாபகார்த்த முத்திரை ஒன்றை வெளியிடுவதையிட்டு நான் மிக்க மகிழச்சி அடைகிறேன்.

பாணமைப்பற்று (பொத்துவில் மகாவிட்டி) வன்னிமையாக இருக்கும்போது வறுமைக்கோட்டின்கீழ் வாழ்ந்த அம்மக்களுக்கு அரசாங்க நிலத்தை குடும்பத்திற்கு ஐந்து ஏக்கர் வீதம் வழங்கி அதற்கான பாய்ச்சல் வடிச்சல்களையும் ஏற்படுத்திக் கொடுத்தார். பொத்துவில் மக்கள் இன்றும் அதனை மறக்க மாட்டார்கள்.

அன்னார் சம்மாந்துறைப்பற்று வன்னியனாராக இருக்கும்போது பளவெளி, பள்ளக்காடு, பொன்னம்வெளி, வெட்டாறு, விண்ணாங்கடிபாம், மலையடிவட்டை, புதுக்காடு, திராயோடை போன்ற கண்டங்களில் உள்ள காணிகளை 5 ஏக்கர், 3 ஏக்கர் என எல்.டி.ஓ. பேர்மிட் மூலம் வழங்கினார். அத்துடன் கண்டி அரசனால் வீரமுனைக் கோயிலுக்கு வழங்கப்பட்ட 110 ஏக்கர் காணி பறிபோக இருந்த நிலையில் அதனை வெள்ளைக்கார கவர்னரிடமிருந்து மீட்டுக் கொடுத்தார்.

அம்பாரையில் பள்ளிவாசல் ஒன்றை அமைப்பதற்கு முயற்சித்து பள்ளிவாசலைக் கட்டிய பின்னர் அதன் பக்கத்திலுள்ள நிலங்களை மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து பள்ளிவாசலின் செயற்பாட்டுக்கு ஊக்கமளித்தார்.

கல்முனைக்குடியைச் சேர்ந்தவர்கள் நெய்னாகாட்டுப் பகுதியில் குடியேறி காடுவெட்டி விவசாயப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்தபோது

கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அவர்களது நிலம் பறிபோகவிருந்த நிலையில் அதனை அப்போதைய பிரதம மந்திரியுடன் தொடர்புகொண்டு உடனடியாக அந்நடவடிக்கையை நிறுத்தியதனால் இன்று, நெய்னாகாடு முஸ்லிம்கள் வாழ்கின்ற ஒரு கிராமமாக உருவாகி இருக்கின்றது.

கல்முனைப் பட்டினத்தைக் கட்டியெழுப்புவதில் தனது முழுக் கவனத்தையும் செலுத்தினார். கல்முனை நகரப் பள்ளிவாசலைக் கட்டுவதற்கு காரணகர்த்தாவாக இருந்தார்.

☆ பல சவால்களுக்கு மத்தியில் நகர மண்டபத்தினைக் கட்டுவித்தார்.
☆ இரண்டு மையவாடிகளை உருவாக்கி பாதுகாப்பை ஏற்படுத்தினார்.
☆ கல்முனைக்குடியில் வடிச்சல் வாய்க்கால் ஒன்றினை வெட்டுவித்து நடராசா வாய்க்கால் என்று பெயர் சூட்டினார்.
☆ பல ஊர்களிலும் பலநோக்குக் கூட்டறவுச் சங்கங்களை உருவாக்கினார்.
☆ பட்டிருப்புத் தொகுதியுடன் சேர்ந்திருந்த மருதமுனைக் கிராமத்தைப் பிரித்து கல்முனைத் தொகுதியுடன் இணைத்தார். அந்நடவடிக்கையினால் மருதமுனை மக்களுக்கு எம்.எஸ். காரியப்பரின் சேவையைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

இதுபோன்ற இன்னும் பல சேவைகளை இப்பிரதேசத்துக்கு வழங்கிய கேற்முதலியார் மஹ்மூத் சம்சுதீன் காரியப்பர் அவர்களின் மறைவு இப்பிரதேச மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

---

## காரியப்பர் எனும் கதாநாயகன்

**அல்ஹாஜ் எம்.ஐ.ஏ. ஜப்பார்**
ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்

*மதிநுட்பம் ஆங்கிலப் புலமை ஆளுமை
பேச்சாற்றல் பேரறிவு அத்தனையும் பெற்ற
பெருமகனாய் விளங்கிய வித்தகனாம்
முத்திரைக்குள் இன்றவர் அடங்கிவிட்டார்.*

*காரியப்பர் எனும் கதாநாயகன்
கற்றோர் போற்றும் கல்முனைப் பிதாமகன்
கல்வியில் மேலுயர்ந்த மேதாவி - நல்ல
கல்லோயாத் திட்டம் தந்த கனவான்*

*கூட்டுறவை நாட்டுயர்வில்
காட்டிவைத்த குடிமக்கள் தோழன்
பட்டணத்தின் நாயகனாய்ப் பலகாலம்
பாலனம் செய்த மாப்பொட்டி வன்னியன்*

*கல்விக்கூடங்கள் கனதியாய் நிறுவி நல்ல
சமூகத்தின் உயர்விற்கும் விடிவிற்கும்
உழைத்தவர்
பெண்கல்வி கற்பதிலும்
பேரறிவு பெறுவதிலும்
நால்பத்து ஆண்டுகளாய்
நன்முயற்சி செய்தவர்*

*'மகாபிட்டி' வன்னிமையாய் பதவியேற்று
காணி நிலமற்ற கணக்கற்றோர்க்கு
நீதியாய் நின்றுபல நிலம் ஈந்து
நிம்மதியாய் வலம்வந்த துரைமகனாம்.*



## காரியப்பர் சேவை தனை கவிதையிலே நான் வடித்தேன்



**அல்ஹாஜ் எம்.எம். காசிம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

*சாய்ந்தமருதூரின்
தவப் புதல்வன் காரியப்பர்
சாதித்த சாதனைகள்
சரித்திரமாய் நீண்டுளது*

*எண்பத்து எட்டாண்டு
ஏற்றமுடன் அவர் வாழ்ந்து
எண்பத்து ஒன்பதிலே
ஏகி இறையடி சேர்ந்தார்*

*மகாப்பிட்டி வன்னிமையாய்
மலர்ந்திட்ட அவர் சேவை
மாண்புற்று மணம் பரப்பி
மக்களுக்கு உதவியது.*

*மக்கள் மனங்களிலே
மகுடமிட்டு அவர் வாழ்ந்தார்
மாண்புறு நற் சேவையதால்
மனங்களையே வென்று நின்றார்*

*பட்டியுடன் பட்டயமும்
பட்டுடலை அலங்கரிக்க - கல்முனை
பட்டினத்து மன்னவனாய்
பலகாலம் தானிருந்தார்*

*நாடாளும் தேர்தல்களில்
நாமறியப் போட்டியிட்டு
நான்கு தடவைகளில்
நன்முறையில் வென்று வந்தார்*

*சமகால சவால்களையும்
சந்தித்த தடைகளையும்
சந்தர்ப்பமதற் கேற்ப
சாமர்த்தியமாய்
வெற்றி கண்டார்*

*பாராளுமன்றத்தில்
பதவி பல அவர் வகித்தார்
பலர் போற்ற சேவை செய்தார்
பாராட்டப்பட்டு நின்றார்.*

*விவசாயம் தழைத்தோங்க
விரிவான சேவை செய்தார்
கல்லோயாக் குளம் கட்டும்
கனவை நனவாக்கி வைத்தார்*

*ஏ.கே. காரியப்பர்
எண்ணத்தில் வந்த குளம்
எம்.எஸ். காரியப்பர்
ஏற்று நிறைவுற்ற குளம்*

*செந்நெல் விளைவோங்க
சேனநாயக தந்த குளம்
செழிப்புற்ற வாழ்வுபெற
செய்த அவர் நற்சேவை*

*பங்குவைக்கும் காலமதில் - மக்கள்
பாதை மாறி வாக்களித்தார்
பங்கிழந்து எம் சமூகம்
பரிதவித்து ஏங்கி நின்றார்.*

*எங்கிருந்தோ வந்தவர்கள்
ஏற்றமுடன் வாழ்ந்து நிற்க
எம்மிடத்து இரு சமூகம்
ஏங்கி முகம் பார்த்து நின்றார்*

*கல்விக்காய் சேவை செய்தார்
கலைக்கூடம் பல அமைத்தார்
கல்வியாம் செல்வமதை
காலடிக்குக் கொண்டுவந்தார்*

*பத்தொன்பது பாடசாலை
பதிந்து அவர் திறந்து வைத்தார்
படித்த சமுதாயம் அதை
பார்க்க மனதாசை கொண்டார்*

*மீனவர்க்கும் ஏனையோர்க்கும்
மிக விரும்பி தொண்டு செய்தார்
அன்னவர்கள் அவருடனே
அணிதிரண்டு ஒன்றிணைந்தார்*

*இரவு பகல் பார்க்கவில்லை
இன பேதம் காட்டவில்லை
நாடி வந்த அனைவர்க்கும்
நல்லுதவி அவர் புரிந்தார்*

*வாசித்து வளம் சேர்ப்பார்
வசீகரிக்கும் பேச்சாற்றல்
எழுத்தில் அவர்க்கிணையேது
எழுந்து நின்றால் சொல்மாரி*

*அரசு அவர் சேவைதனை
அங்கீகரித்து மதித்து
அவர் பெயரில் முத்திரையும் - இன்று
அரசு வெளியிட்டுள்ளது*

*அவர் பிரிந்து சென்றாலும்
அவர் சேவை நிலைத்து நிற்க
அல்லாஹ்வின் அருள்வேண்டி
அனைவரும் கையேந்திடுவோம்*

# அப்பாவின் முகம் – அந்தி வானம்

– தீரன் –
(ராஸிக் காரியப்பர் முஹம்மது நௌஸாத்)

அந்தி வானத்தை
அண்ணார்ந்து பார்க்கும் போதெல்லாம்
அப்பாவின் ஞாபகம் வரும்

தேசிப்பழம் அவரது நிறம்
கொச்சிப் பழம் அவரது மூக்கு
தக்காளிப் பழம் அவரது கன்னங்கள்
அரசியல்
ஞானப்பழமாய் வாழந்திருந்த
அழகுப் பழம் அப்பா...!

வன்னியனார் வருகின்றார் என்றதும்
வரும் வழியெல்லாம்
மகளிரின் விழியெல்லாம்
பூக்களாய்ச் சொரிந்திருக்கும்
'மாப்பொட்டி'யின் முகவழிவில்
முக்காட்டின் நழுவல் மறந்திருக்கும்


வாள் தரித்து ஆள் வரும்போது
வானவில் வந்து அவருக்கு
வட்டக்குடை பிடிக்கும்
வாலிபர் தம் திண்தோள்கள்
தினவுகொண்டு துடித்திருக்கும்

அப்பாவின் ரோசாப்பூ நெற்றியில்
அத்தர் மணமணக்கும்
மல்லிகைப் பூப்போல மனிதர் சிரிக்கையில்
மனத்தோட்டம் முழுவதும்
மலர்த் தோட்டமாகும்

அப்பாவின் அருகாமையில்
இமைப் பொழுதில்
பகற்பொழுது பறந்திருக்கும்
அப்போதெல்லாம்!

இப்போதெல்லாம்,
அந்திப் பொழுதில்
அண்ணார்ந்து பார்க்கும் போது மட்டும்
அப்பாவின் ஞாபகம் வரும்!
(2009)





Printed By: An-Noor, Klm 0776167535